# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU


| மலர்–15, இதழ் – 5<br>Volume - 15, Issue - 5 | சித்திரைத் திங்கள்<br>April 2024 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |
|---|---|---|---|---|





PARVATHY
MULTISPECIALITY HOSPITAL
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
2018 முதல்
காலை -8 மணி
குடும்பத்துடன் காலை உணவு
மதியம்-2 மணி
முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
மாலை -8 மணி
குடும்பத்துடன் இரவு உணவு
திருமதி கீதா தனது தினசரி வழக்கத்தை தடங்கலின்றி தொடர்ந்தார்.
உங்களுக்கும் அதையே நாங்கள் உறுதியளிக்கிறோம்.
12 மணி
நேரத்தில் வீடு திரும்பலாம்
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
குரோம்பேட்டை: 24, ஜிஎஸ்டி சாலை, குரோம்பேட்டை, சென்னை - 600 044
ஒரகடம்: 405/5A ஜமுனாபட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் - 602 105
Website: www.parvathyhospital.com
மேலும் தகவல்களுக்கு: 044 2238 2248


DAC
DREAM ASCEND CONQUER
Now It's Women's Turn
Book Your Home in your Woman's Name to Avail
FREE REGISTRATION CHARGES
VALUE UPTO ₹8* LAKHS
APARTMENTS
VILLAS | PLOTS
Manapakkam | Madambakkam | Medavakkam
Navalur | Tambaram | Sholinganallur | Guduvancheri
₹48* LAKHS
to
₹3* CRORES
93003 93003
www.dacdevelopers.com
Follow us:


VETRI CONSTRUCTIONS
we build your dream house
சித்திரை மாத
சிறப்பு சலுகை..
CIVIL WORKS
Rs.1379*
LIMITED OFFER
COMMERCIAL
Rs.1679*
Free
4 CCTV Camera
ECONOMIC
Rs.1889*
Free
Electrical Fittings
*T&C applies
MODERATE
Rs.2089*
Free
UPS
ELITE
Rs. 2289*
Free
UPS
Electrical fittings
PREMIUM
Rs.2489*
Free
Modular kitchen | UPS
Electrical fittings | CCTV(4)
with
Terrace garden and pest control
Er. Vetriselvan Prabakaran
Call : 9003175537
300, Sivan Koil Street, Pinnalur - 608704
PROJECTS UNDERTAKEN
50 Km
Radius from
VADALUR
AST
AZHAGARSAMY
TRADERS & TRANSPORTS
We Supply First Quality Building
Materials for your Dream Home




Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com






**Thiruvasantham**
**PURE VEG**

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)


hotel saradharam
chidambaram
ஓட்டல் சாரதாராமின்
35 வது
ஆண்டு விழா
15.11.2023
செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு – குறள் (86)
பொருள் : வந்த விருந்தினர்களை மகிழ்ச்சியுடன் உபசரித்து வழியனுப்பி, வரும் விருந்தினரை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பவன், தேவர்களுக்கும் நல் விருந்தினன் ஆவான்.
THANK YOU
for being with us
நன்றி!
hotel saradharam
LAKSHMI VILAS
SENTOSA
saradharam residency
kattumannarkoil
Incredible India

# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வன் V. ரத்தீஷ்** |
| படிப்பு | B.E. (CSE) |
| வேலை | Data Engineer, Ernest & Young (E&Y)<br>Bangalore,<br>Rs. 22 Lakhs/PA |
| பிறந்த தேதி | 03.08.1995 |
| உயரம் | 173 cm |
| நட்சத்திரம் | சித்திரை 4ம் பாதம் |
| கோத்திரம் | ஆலத்துட |
| பூர்வீகம் | சீனிவாசபுரம், மயிலாடுதுறை – 609 001. |
| தகப்பனார் | **R. வரதராஜன்**<br>Retd. DEO கல்வி |
| தாயார் | **V. லட்சுமி** |
| முகவரி | 257, காந்திஜி தெரு, சீனிவாசபுரம்,<br>மயிலாடுதுறை – 609 001.<br>Cell : 94898 08838 |
| விருப்பம் | சமபடிப்பு / பணியில் உள்ள பெங்களூர் செல்ல விரும்பும் வரன். |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் S. அருள்முருகன்** |
| படிப்பு | Ph.D. (Mech Eng.) USA |
| வேலை | Postdoc in USA |
| பிறந்த தேதி | 10.04.1995 |
| உயரம் | 6 அடி |
| நட்சத்திரம் | ஆயில்யம் |
| கோத்திரம் | வளவுதரிய |
| பூர்வீகம் | குழுமூர் |
| தகப்பனார் | **R. செந்தில்நாதன்**<br>ஆசிரியர் (பணி நிறைவு) |
| தாயார் | **S. ஆனந்தி** இல்லத்தரசி (கீழ்நத்தம்) |
| முகவரி | 149/B1, கல்லூரி நகர்,<br>விருத்தாசலம்,<br>கடலூர் மாவட்டம் – 606 001.<br>Cell : 94868 30577, 63797 40823, 97508 74773 |
| விருப்பம் | அமெரிக்காவில் படிக்கும் / பணியில் உள்ள வரன் (or) நன்கு படித்த அமெரிக்கா செல்ல விருப்பமுள்ள வரன். |



# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள் வீட்டார், உறவினர்களை ஒரே இடத்தில் 50 நபர்கள் தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

## ஓர் நற்செய்தி

இராமேஸ்வரம் புனித யாத்திரை மேற்கொள்ளும் அன்பர்கள் தெய்வீக சூழலில் தங்க ஏதுவாக திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தைச் சார்ந்த ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் தங்களை வரவேற்கிறது. இரண்டு படுக்கைகள் மற்றும் குளியலறை இவற்றுடன் கூடிய அறை (Non-A/c) மிகவும் குறைந்த வாடகையில் (Rs. 1000/ per day) தரப்படுகிறது. மூன்று வேளை உணவும் மடத்தின் நேரப்படியும் உணவு முறைப்படியும் இலவசமாக வழங்கப்படும்.

**முக்கிய குறிப்பு:** யாத்ரீகர்கள் கட்டாயம் இரவு 9 மணிக்குள் மடத்திற்குள் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அதன்பின் அனுமதி இல்லை.

**முன்பதிவு செய்ய தொடர்புக்கு : 9790215833**

இதழின் உள்ளே....


குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 ........ 11
எட்டு போட்டு நடங்கப்பா ........ 15
சங்கப் பலகை ........ 17
மனித மனம் ஒரு குரங்கு ........ 23
நட்சத்திரங்களும் மரங்களும் ........ 27
சிறுவர் பகுதி ........ 29–32
மணமகன் / மணமகள் தேவை ........ 39–43
எதிர்பார்ப்பு – பலனும் பாதகமும் ........ 45
சங்க நிகழ்வுகள் ........ 53



**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் S. **அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533



கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.


## ஏடு இட்டோர் இயல்



**வாசகப் பெருமக்களுக்கு**
**உளங்கனிந்த தமிழ்ப்**
**புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

இம்மாத கார்காத்தார் ஒப்புரவு இதழ் தங்கள் கையில் தவழும் போது, சோபகிருது ஆண்டு முடிவடைந்து, 38–ஆம் ஆண்டாகிய குரோதி ஆண்டு பிறந்திருக்கும். சூரியன் மேஷராசியில் நுழையும் நாளே சித்திரை முதல் நாளாக, தமிழ்ப் புத்தாண்டாக உலகம் முழுதும் உள்ள தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டில் உலகில் போதைப் பொருள் ஒழிப்பும், தீவிர வாத அழிப்பும், பெண் குழந்தைகள் பாதுகாப்பும் வலிமை பெற வேண்டும் என்ற மக்களின் எண்ணம் நிறைவேறட்டும். நிர்பயா, போக்சா என எத்தனை சட்டங்கள் வந்தாலும் பெண் குழந்தைகளையும், இளம் பெண்களையும் காப்பதென்பது நமது சமுதாயத்தில் ஒரு சவாலாகவே உள்ளது. மக்களுக்கு மனமாற்றம் ஏற்பட்டாலன்றி ஒழுக்கமான சமுதாயம் என்பது ஒரு எட்டாக்கனியே! இப்புத்தாண்டு அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும், அமைதியையும், செழிப்பையும் தரவும், உங்கள் கனவுகள் மற்றும் விருப்பங்கள் அனைத்தும் ஈடேறவும், இவ்வாண்டு கடந்த ஆண்டை விட இன்னும் சிறப்பான ஆண்டாக அமையவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகிறோம்.

தேர்தல் களம் சூடு பிடித்து விட்டது. ஏப்ரல் 19–ஆம் தேதி தமிழகம், பாராளுமன்றத் தேர்தலைச் சந்திக்கிறது. தேர்தலில் ஓட்டளிப்பது என்பது ஒவ்வொருவரின் உரிமை மட்டுமல்ல; ஜனநாயகக் கடமையும் கூட. அதனை விட்டுக்கொடுத்துவிடக் கூடாது என்று நம் மனதில் உறுதி கொள்வோம். ஊழல் இல்லாத, மக்களுக்கான நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தும் கட்சி வேட்பாளர்களை, ஜாதி, மத வேறுபாடன்றி, ஓட்டளித்து தேர்ந்தெடுப்பது நமக்கு நன்மை பயக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக ஓட்டளிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு அவசியம். நமது கார்குல மக்கள் தங்கள் ஜனநாயகக் கடமையை நிச்சயம் நிறைவேற்றுவார்கள் என நம்புகிறோம்!

# குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019

## CITIZENSHIP AMENDMENT ACT 2019 CAA

மேலையூர் ச.அன்பழகன் போன் : 98413 73184

நம் நாட்டில் சென்ட்ரல் ஆக்ட் என்னும் மத்திய சட்டங்கள் ஆயிரக் கணக்கில் வழக்கில் உள்ளன. அச் சட்டங்களில் மாற்றம் / திருத்தம் தேவைப் படும்போது மத்திய அரசு திருத்தச் சட்டம் கொண்டு வந்து நிறை வேற்றுவதும் அத்திருத்தங்களுக்கு சில நேரங்களில் சில இடங் களில் எதிர்ப்புகள் எழுவதும் இயற்கை ஆனால் கடந்த 2019 ஆம் ஆண்டில் நிறை வேற்றப்பட்ட குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 க்கு நிறைய இடங்களில் எதிர்ப்பைக் கிளப்பி உள்ளது என்னைத் தொலை பேசியில் தொடர்பு கொண்ட பல அன்பர்கள் அந்த சட்டத்தில் ஆட்சே பணைக் குரிய அம்சம் ஏதேனும் உள்ளதா ஏன் பல இடங்களில் எதிர்க் கிறார்கள் என்பதை எல்லாம் எங்களுக்குப் புரியுமாறு எழுதுங்களேன் என்று கேட்டுக் கொண்டார்கள் அவர்கள் வேண்டுகோளுக்கு ஏற்ப இக் கட்டுரையை எழுதுகிறேன்.

இந்த திருத்தச் சட்டத்தை எதிர்ப்பது சரியா சரி இல்லையா என்ற விவாதத்துக்கு எல்லாம் செல்லாமல் இந்த திருத்தச் சட்டத்தில் உள்ள முக்கிய அம்சங்கள் அதனை எதிர்ப்பவர்கள் எதனால் எதிர்க் கிறார்கள் அதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளில் நீதி மன்றம் என்ன தீர்ப்பு வழங்கியுள்ளது போன்ற அம்சங்களை மட்டும் பார்ப்போம்.

### 2019 ல் நிறை வேற்றப்பட்ட சட்டங்கள்

எல்லா ஆண்டுகளையும் போல் 2019 ஆம் ஆண்டிலும் மத்திய அரசு பல சட்டங்களை நிறை வேற்றியுள்ளது ஆனால் அந்த ஆண்டில் நிறை வேற்றப்பட்ட ஒரு சில சட்டங்கள் சர்ச்சைக்கு உரியனவாக இருந்ததால் ஆங்காங்கே எதிர்ப்புகள் கிளம்பின அரசியல் சட்டப் பிரிவு 370 ல் காஷ்மீருக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்தது , முத்தலக் மூலம் இஸ்லாமிய ஆண்கள் மனைவியை விவாஹ ரத்து செய்வது செல்லாது என்றது குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 போன்றவை அவ்வாறு எதிர்ப்பைச் சந்தித்த சட்டங்களுள் சிலவாகும் இதில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 பற்றி இப்போது ஓரளவு பார்ப்போம்.

### எதற்காக இந்த சட்டம் ?

இந்தியா சமாதானத்தை விரும்பும் பல மதத்தவர் வாழும் மத சார்பற்ற இறையாண்மை உள்ள நாடு ஆகும். சொல்லப் போனால் உலகிலேயே " வேற்றுமையில் ஒற்றுமை " என்ற சித்தாந்தத்தை நியாயப்படுத்தும் ஒரே நாடாகும் அதனால் தானோ என்னவோ பல தேசத்து குடி மக்கள் அங்கிருந்து வெளியேறி நம் நாட்டுக் குடியுரிமை பெறுவதை விரும்புகிறார்கள் பாகிஸ்தான் , பங்களாதேஷ், மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் சிறுபான்மை யினத்தவராக வாழ்ந்து வந்து அங்கிருந்து சட்ட விரோதமாக இந்திய எல்லைக்குள் புகுந்து குறிப்பிட்ட தேதிக்கு முன்பிருந்து இந்தியாவில் அகதிகளாக வசித்து வரும் இந்துக்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், சமணர்கள் மற்றும் பார்சீக்கள் போன்றவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கும் நோக்கத்தோடு இயற்றப்பட்டதே இச்சட்டமாகும்.

சுருக்கமாகச் சொன்னால் இச்சட்டத்தின் மூலம் பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து 2014, டிசம்பர் 31–ம் தேதிக்கு முன்பு இந்தியாவுக்குள் நுழைந்த, முஸ்லிம் அல்லாத இந்துக்கள், சமணர்கள் கிறித்துவர்கள், பார்சிகள் போன்ற இதர மதப்பிரிவினர் சட்டவிரோத குடியேறிகளாக கருதப்பட மாட்டார்கள்; மேலும் இந்திய குடியுரிமை பெறவும் வழிவகை செய்கிறது.

### எப்போது இச்சட்டம் இயற்றப்பட்டது ?

குடியுரிமைத் திருத்த மசோதா மக்களவையில் இந்திய உள்துறை அமைச்சர் திரு அமீத்ஷா அவர்களால் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 ஆம் தேதி அறி முகப்படுத்தப்பட்டு அன்றைய தினமே அதாவது 2019 டிசம்பர் 9 அன்றே லோக் சபை என்னும் மக்களவையால் நிறை வேற்றப்பட்டது.

சர்ச்சைக்குரிய குடியுரிமை சட்டத் திருத்த மசோதா, 2019ஆம் ஆண்டு மக்களவையில் நீண்ட விவாதத்துக்கு பிறகு நிறைவேற்றப்பட்டது. மசோதாவுக்கு ஆதரவாக 311 உறுப்பினர்களும், எதிராக 80 உறுப்பினர்களும் வாக்களித்தனர். மசோதா நிறைவேறியது மாநிலங்களவையில் இச்சட்டத்துக்கு ஆதரவாக 125 வாக்குகள் பெற்று நிறைவேறியது.

இந்தியக் குடியுரிமைச் சட்டம் 1955 ஐத் திருத்தும் இந்த குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 ராஜ்ய சபை என்னும் மாநிலங்கள வையில் 2019 டிசம்பர் 11 அன்று நிறை வேற்றப்பட்டது 2019 டிசம்பர் 12 ஆம் தேதி குடியரசுத் தலைவர் தனது ஒப்புதலை அளித்தபிறகு அந்த மசோதா சட்டமாகி விட்டது.

### குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 ன் முக்கிய விதி முறைகள்

1. இந்த சட்ட விதி முறைகளின் படி பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய மூன்று அண்டை நாடுகளிலிருந்தும் நம் நாட்டுக்குள் சட்ட விரோதமாக வந்தவர்கள் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ இந்தியாவுக்குள் வந்திருந்தார் களானால் அவர்கள் சட்ட விரோதமாகக் குடியேறியவர் களாகக் கருதப்பட மாட்டார்கள்.

2. இந்த சட்டம் மேலே சொல்லப்பட்ட மூன்று நாடுகளில் சிறு பான்மை மதத்தைச் சேர்ந்தவர் களாக இன்னல்களுக்கு ஆளான இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்சீக்கள் மற்றும் கிறிஸ்துவர்கள் ஆகியவர்கள் இந்தியக் குடியுரிமை பெற வழி வகுக்கிறது.

3. அந்த நாடுகளிலிருந்து சட்ட விரோதமாகக் குடியேறும் இஸ்லாமிய சமுதாயத்தினர் இச் சட்டம் மூலம் இந்தியக் குடியுரிமை பெறத் தகுதி அற்றவர்கள் ஆவர்.

4. கார்பி அங்லோங், அஸ்ஸாம் கரோஹில்ஸ் மேகாலயா சம்கா டிஸ்ட் ரிக்ட் மிஸோராம் மற்றும் திரிபுரா பழங்குடிப் பகுதி மக்களுக்கு இச் சட்டம் பொருந்தாது.

5. வங்காளம் கிழக்கு எல்லை ஒழுங்கு முறை 1873ன் கீழ் வரும் இன்னர் லைன் பர்மிட் எனப்படும் உள் வரிசை அனுமதியில் வரும் மாநிலங்களுக்கு (இது பற்றிய விளக்கம் பின்னால் வருகிறது) இச்சட்டம் பொருந்தாது ஏனென்றால் அந்த அனுமதி அருணாசலப் பிரதேசம், மிஸோராம், நாகாலாந்து மற்றும் மணிப்பூர் பகுதிகளுக்குச் செல்லும் இந்தியர்களை ஒழுங்கு படுத்துவது ஆகும்.

6. இந்தியக் குடியுரிமை பெற்றபிறகு மேலே கூறிய வாறு மூன்று அண்டை நாடுகளிலிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவிய இஸ்லாமியர்கள் அல்லாத சிறுபான்மை மதத்தினைச் சேர்ந்த நபர் எந்த தேதியில் இந்தியாவுக்குள் நுழைந்தாரோ அந்த தேதியிலிருந்து இந்தியக் குடிமகனாகி விடுவார் பிரஜை சட்ட விரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்ததற்காக அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை முடிவு கட்டப்பட்டு விடும்.

7. இந்தியக் குடியுரிமைச் சட்டப்படி வெளி நாட்டவர் இந்தியக் குடியுரிமை பெறுவதற்கான தகுதி அவர் இந்தியாவில் 11 ஆண்டுகள் வசித்தால் தான் கிடைக்கும் அந்த 11 ஆண்டுகள் என்பது பின்னர் 6 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது இந்த சட்டம் மேற்படி நபர்கள் அதாவது மூன்று நாடுகளிலி ருந்தும் சட்ட விரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தவர்கள் பிரஜா உரிமை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த காலக் கெடு 6 ஆண்டுகளி லிருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

8. இந்தியக் குடியுரிமைச் சட்டம் 1955 ன் படி இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு நபருக்கோ அல்லது அவரது மனைவிக்கோ உ–ம் முன்னாள் இந்தியக் குடி மகன் அல்லது அவரது வாரிசுகள் O C I எனப்படும் வெளி நாடு வாழ் இந்தியர் என்னும் அடையாள அட்டை வழங்கப்படும் இப்போது இந்த திருத்தச்சட்டம் 2019 வெளிநாடு வாழ் இந்தியருக்கான அடையாள அட்டை வைத்துள்ள நபர் இந்தியாவில் பயணம் செய்ய அனுமதிக்கப் படுவதுடன் நம்முடைய நாட்டில் பணி யாற்றவும் படிக்கவும் அனுமதிக்கப் படுவார்.

9. 2016 ஆம் ஆண்டு குடியுரிமைத் திருத்த மசோதாவில் வெளி நாடு வாழ் இந்தியருக்கான அடையாள அட்டை கீழ்க்கண்ட 5 காரணங்களுக்காக ரத்து செய்யலாம் என்றிருந்தது.

அ. இந்திய அரசியல் சாஸனத்துக்கு பாசமற்று இருத்தல்

ஆ. ஏமாற்றி பதிவு செய்தல்

இ. யுத்த காலங்களில் எதிரிகளுடன் சேருதல்

ஈ. இந்திய இறையாண்மைக்கு ஊறு விளைவித்தல்

உ. வெளி நாடு வாழ் இந்தியராகப் பதிவு செய்யபப்ட்டு 5 ஆண்டுகளுக்குள் இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கும் மேற்பட்ட சிறைத்தண்டனை பெற்றல்

இந்த 2019 ஆண்டு மசோதாவில் வெளி நாடு வாழ் இந்தியருக்கான அடையாள அட்டையை ரத்து செய்ய மேலும் ஒரு காரணம் சேர்க்கப்பட்டுள்ளது அதாவது வெளி நாடு வாழ் இந்தியருக்கான அடையாள அட்டை வைத்திருப்பவர் நம் நாட்டில் நடை முறையில் உள்ள எந்த ஒரு சட்டத்தையாவது மீறி நடத்தல்.

**சட்ட விரோதமாகக் குடியேறியவர் என்பவர் யார் ?**

பாஸ்போர்ட், விசா போன்ற ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குச் செல்லும் பயணிகளுக்கான ஆவணங்கள் இல்லாமல் இந்தியாவுக்குள் வரும் வெளி நாட்டவரும், இந்தியாவுக்குள் வரும்போது அத்தகைய ஆவணங்களுடன் வந்து விட்டு அதில் அனுமதிக்கப்பட்ட காலம் முடிந்த பிறகும் இந்தியாவிலேயே தங்கி இருக்கும் வெளி நாட்டவரும் சட்ட விரோதமாகக் குடியேறியவராகக் கருதப் படுவார்கள்.

**இன்னர் லைன் பர்மிட் என்னும் உள் வரிசை அனுமதி என்றால் என்ன ?**

வங்காளம் கிழக்கு எல்லை ஒழுங்கு முறை 1873 ன் படி கொடுக்கப்படும் இன்னர் லைன் பர்மிட் என்னும் உள் வரிசை அனுமதி என்பது அருணாசலப் பிரதேசம், மிசோராம், நாகாலாந்து மற்றும் மணிப்பூர் மாநில அரசுகள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளான அவர்களது மாநிலத் துக்குள் ஒரு குறிப்பிட்ட காலம் பயணம் செய்ய இந்தியக் குடி மக்களை அனுமதித்து வழங்கப்படும் ஆவணமாகும்.

**எந்தெந்த வழிகளில் இந்தியாவில் குடியுரிமை பெறலாம்?**

இந்தியக் குடியுரிமைச் சட்டம் 1955 இந்தியக் குடியுரிமை பெற கீழ்க் கண்ட ஐந்து வழிகளை அனுமதிக்கிறது.

1. இந்தியாவில் பிறப்பதன் மூலம் குடியுரிமை பெறுதல்.

2. இந்தியக் குடி மக்களின் வாரிசாகக் குடியுரிமை பெறுதல்.

3. இந்தியக் குடிமகனாகப் பதிவு செய்வதன் மூலம் குடியுரிமை பெறுதல்.

4. இந்தியக் குடி மகனாகப் பிரஜா உரிமை பெறுவதன் மூலம்.

5. புதிய பகுதியை இந்திய எல்லையில் இணைக்கப்படுவதன் மூலம் குடியுரிமை பெறுதல்.

**எதனால் இந்த சட்டம் எதிர்க்கப் படுகிறது ?**

நாடெங்கிலும் ஆங்காங்கே இச்சட்டத்துக்கு எழுப்பப் படும் எதிப்புகள் இரண்டு வகைப்படும் நம் நாட்டின் வடகிழக்குப்பகுதியில் எழுப்பப் படும் எதிர்ப்பு இச்சட்டம் அவர்கள் பகுதியில் நடை முறைப் படுத்துவதை எதிர்த்துதான் ஏனென்றால் அங்குள்ள மக்களில் பலர் பயப்படுவது இந்த சட்டம் அமுலுக்கு வந்தால் பிற நாடுகளிலிருந்துவந்து அங்கு குடியேறியுள்ளவர்களின் வாழ்க்கைத் தன்மை மற்றும் அவர்கள் பயன்படுத்தும் மொழி ஆகியவற்றின் தனித்தன்மை மாறுபடக் கூடும் என்பதுதான்.

கேரளா, மேற்கு வங்காளம் மற்றும் டெல்லி போன்ற இந்தியாவின் இதர பகுதிகளில் இச் சட்டம் எதிர்க்கப்படுவதற்குக் காரணம் ஏற்கனவே சொல்லப்பட்ட மூன்று நாடுகளிலிருந்தும் சட்ட விரோதமாக இந்தியாவில் குடியேறியவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதில் அந்த நாடுகளிலிருந்து வந்த இஸ்லாமியர்களை விட்டு விட்டது தான் அது நமது அரசியல் சாஸனத்துக்கு எதிரானது என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இலங்கையிலிருந்து இங்கு வந்து குடியேறியுள்ள இலங்கைத் தமிழர்களையும் சேர்த் திருக்க வேண்டும் என்பது தமிழ் நாட்டில் ஒரு சாரார் கருத்து.

**விலக்கு**

குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 திரிபுரா, மிசோராம், அஸ்ஸாம் மற்றும் மேகாலயா மாநிலங்களில் உள்ள பழங்குடியினர் பகுதிகளுக்குப் பொருந்தாது ஏனென்றால் அவை நமது அரசியல் சாஸனத்தின் ஆறாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் அந்தப் பகுதிகள் வங்காளம் மற்றும் கிழக்கு எல்லைப்பகுதி ஒழுங்கு முறை 1873 ல் குறிப்பிடப் பட்டுள்ள உள் வரிசை எல்லைக்குள் வருகின்றன அதனால் அவை இச் சட்டத்துக்கு அப்பாற் பட்டவையாகும் அதனால் அநேகமாக அருணாசலப் பிரதேசம் மிசோராம் மற்றும் நாகாலாந்து ஆகியவை முழுவதுமே இச்சட்டத்தின் வரம்புக்குள் வராது.

**அரசின் கருத்து என்ன ?**

இஸ்லாமியர்களையும் சேர்க்க வேண்டும் என்ற கூற்றுக்கு மத்திய அரசின் பதில் இச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள இஸ்லாம் அல்லாத இதர சிறு பான்மை மதத்தினர் இஸ்லாமி யர்கள் பெரும்பான்மையாக உள்ள இஸ்லாமிய நாடுகளில் மத ரீதியாக இன்னல்களுக்கு ஆளானவர்கள் என்பதாகும்.

அரசின் இந்தக் கருத்துக்கு மாறாக , " இந்த சட்டம் எல்லா சிறு பான்மை மதங்களையும் சேர்க்க வில்லை அதே போல் அண்டை நாடுகள் அனைத்தையும் சேர்க்க வில்லை " என்று கூறுபவர்கள் தங்கள் கருத்துக்கு பக்க பலமாக " அகமதியா மற்றும் ஷியா பிரிவுகளைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் பாகிஸ்தானில் இன்னல்களுக்கு ஆளாகின்றனர் என்றும் அதே போல் அண்டை நாடான பர்மாவில் ரோஹிங்கியா இஸ்லாமியர்களும் இந்துக்களும் மத ரீதியாக இன்னல்களுக்கு ஆளாவதாகவும் அருகில் உள்ள இலங்கையில் இந்து மற்றும் கிறிஸ்துவ தமிழர்கள் மத ரீதியாகத் துன்பத்துக்கு ஆளாவதாகவும் அவர்களை எல்லாம் இச்சட்டத்தில் சேர்க்கவில்லை என்றும் கூறுகிறார்கள்.

**கால தாமதம் ஏன் ?**

2019 லேயே நாடாளு மன்ற இரு அவைகளிலும் நிறை வேற்றப்பட்டு குடியரசுத்தலைவரின் ஒப்புதலைப் பெறப் பட்டும் சட்டம் கீழ்க் கண்ட காரணங்களால் அமுல் படுத்தத் தாமதம் ஆயிற்று.

200 க்கும் மேற்பட்ட மனுக்கள் உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்தது.

சட்டம் இயற்றப்பட்டாலும் அதனை நடை முறைப் படுத்தும் விதிகள் தயாரிப்பது 2020 ல் வந்த கொரானா நோயால் தாமதமாயிற்று.

எதிர்ப்புகளைப் பற்றிக் கவலைப்படாமல் சட்டத்தை 2020 ஜனவரியில் அரசிதழில் வெளியிட்டது மத்திய அரசு. போராட்டங்கள் தீவிரமானதாலும், கொரோனா வந்ததாலும் இது அப்போது அமலாகவில்லை. எந்த ஒரு சட்டத்துக்கும் குடியரசுத் தலைவர் ஒப்புதல் தந்தபிறகு ஆறு மாத காலத்துக்குள், அந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கான விதிகளை வகுக்க வேண்டும். அல்லது நாடாளுமன்ற துணை விதிகள் கமிட்டியில் அந்தச் சட்டத்துக்கு காலக்கெடு நீட்டிப்பு ஒப்புதல் வாங்க வேண்டும். மத்திய உள்துறை அமைச்சகம், ஒவ்வொரு ஆறு மாதம் முடியும்போதும் இப்படி காலக்கெடுவை நீட்டித்து ஒப்புதல் வாங்கிக்கொண்டே

இருந்தது. மார்ச் 11–ம் தேதி முறைப்படி குடியுரிமைத் திருத்தச் சட்ட விதிகளை வெளியிட்டதால், அன்றுமுதல் இது அமலுக்கு வந்துவிட்டது.

**இஸ்லாமியத் தலைவர்கள் ஒப்புதல்**

2019 ல் சட்டம் இயற்றும் போது அல்லாமல் இந்த முறை அரசு பல இஸ்லாமியத் தலைவர்களுடன் இந்த சட்டத்தைப் பற்றி விவாதித்து உள்ளது அதன் விளைவாக கீழ்க்கண்ட இஸ்லாமிய தலைவர்கள் இச்சட்டம் இஸ்லாமியர்களுக்கு எதிரானதல்ல என்று விளக்கம் கொடுக்க முன் வந்துள்ளார்கள்

1. அகில இந்திய இஸ்லாமி ஜாமாத்தின் தலைவர் மௌலானா இச்சட்டத்தை வரவேற்றதுடன் இது பற்றி இஸ்லாமியர்களிடையே தவறான கருத்து நிலவுவதாகக் கூறியுள்ளார்

2. டெல்லி ஹஜ் கமிட்டித் தலைவர் கௌசார் இச்சட்டத்தை வரவேற்றதுடன் இச்சட்டம் குடியுரிமைக் கொடுப்பதற்கான சட்டம் தானே ஒழிய குடியுரிமையை எடுக்கும் சட்டம் அல்ல என்று கூறியுள்ளார்.

3. உத்தரப் பிரதேச ஹஜ் கமிட்டித்தலைவர் மௌஷின் ரசாவும் இவ்வாறே அதாவது குடியுரிமைத் திருத்தச்சட்டம் குடியுரிமை கொடுக்கும் சட்டமே ஒழிய குடியுரிமையை எடுக்கும் சட்டம் அல்ல என்று கூறியுள்ளார்.

4. இந்திய இஸ்லாமிய மையத்தின் (ஐசிஐ) தலைவரும், அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியத்தின் உறுப்பினருமான மௌலானா காலித் ரஷீத் ஃபிராங்கி மஹாலி, இச்சட்டம் யாருடைய குடி உரிமையையும் ரத்து செய்யாது என்று உறுதி கூறியதுடன் இஸ்லாமியர்கள் வதந்திக்கு இடம் கொடுக்காமல் அமைதி காக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

குடியுரிமைச் சட்டம் பற்றி அதிகம் அறியாதவர்கள் ஓரளவு தெரிந்து கொள்ள சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் எகனாமிக்ஸ் டைம்ஸ் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து எழுதப்பட்டது. மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட சட்டம் அல்லது வழக்கறிஞர் உதவியை நாடுவதே பயனுள்ளதாக இருக்கும்.

## ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25ஆம் தேதிக்குள் அனுப்பபடவேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் கீழே சங்கத்தின் தலைவர் / செயலரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையுடனும் அனுப்பப்படவேண்டும்.

- செய்திகள், கட்டுரைகளை கூட்டவோ, குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க விழாக்கள் பற்றிய செய்திகள் சுருக்கமாகவும், தெளிவாகவும், முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்கள் கையொப்பத்துடன் அனுப்பப்படவேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

  **Online fund Transfer** Account Number : 130801000022149
  IFSC Code : IOBA0001308
  Account Name : M/S Karkathar Oppuravu
  Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

*அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு**,*
*எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.*
*என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.*

*- கார்காத்தார் ஒப்புரவு*

# நேர்மறையான ஆளுமை (Positive Personality)

A. RAJARETHINAM, PORUR,
CHENNAI.PH: 9444224366

''பறக்கக் கற்றுக்கொள்ளு முன் நிற்கவும், நடக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்'' என்று ப்ரைட்ரிச் நெல்ட்ஸ் என்ற அறிஞர் கூறினார்.

மக்கள் அதிகமான பொறுப்பை எடுத்துக்கொள்ளும் போது அவர்கள் தனக்கே பதவி உயர்வை கொடுத்துக்கொள்கிறார்கள். அது மன முதிர்ச்சியைக் காட்டுகிறது. நமது பொறுப்பான நடத்தைதான் நமக்கு வெற்றியைத் தருகிறது. மற்றவர்களை குறை கூறுவதைத் தவிர்க்க வேண்டும். சிறுவயதிலிருந்தே இந்த நல்ல பழக்கங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நமது பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும். அகங்காரத்தைத் தவிர்த்து பணிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நமது இந்திய கலாச்சாரம் முதலில் நம் சமுதாயத்தின் மீது நமக்கு பொறுப்பு, பின் நம் குடும்பத்தின் மீது நமக்கு பொறுப்பு, பின் நம் மீது நமக்கு பொறுப்பு என்று வரிசைப்படுத்துகிறது. இதைப் பின் பற்றினால் நமது ஆளுமை சிறப்பாக இருக்கும்.

ஒரு பத்து வயது சிறுவன் கடைக்குச் சென்று ஐஸ் கிரீம் என்ன விலை என்று கேட்டான். அங்கிருந்த பெண் ரூ. 20 என்றாள். கையிலிருந்த பணத்தை எண்ணிப்பார்த்தான். சரியாக ரூ. 20 இருந்தது. உடனே அவன் அந்தப் பெண்ணிடம் சிறிய கப் ஐஸ்கிரீம் என்ன விலை என்று கேட்டான். அவள் ரூ. 15 என்றான். அவன் சிறிய கப் கொடுங்கள் என்று கேட்டு வாங்கிக் கொண்டான். அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து அதை சாப்பிட்டான். மேஜை மீது காலி கப்பை வைத்துவிட்டு அதன் அடியில் ரூ. 5 ஐ வெகுமதியாக வைத்தான். நன்றி என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டான். இந்த செயல் அந்த சிறுவனின் பெருந்தன்மையையும், பிறர் மீது அக்கரையையும் காட்டுகிறது. அந்த சிறுவனுக்கு இருந்த மனப்பாங்கு எல்லோருக்கும் இருக்க வேண்டும். அப்போது நாடு நலம் பெறும். நாம் வெற்றி அடையும் போது, பிறரும் வெற்றி அடையவேண்டும் என்று நினைக்க வேண்டும். இதைத்தான் ஆங்கிலத்தில் WIN-WIN என்று சொல்லுவார்கள். மற்றவர்களுக்கு உதவி செய்ய நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

பேசும் போது புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும். எதைப் பேசலாம், எதைப் பேசக்கூடாது என்று யோசித்துப் பேச வேண்டும். வார்த்தைகள் நமது மனப்போக்கைக் காட்டுகின்றன. அவை பிறர் மனதை புண்படுத்தக் கூடாது. சுருக்கமாகப் பேசுவது எப்போதும் நல்லது. குழந்தைகளிடம் பேசும் போது கவனம் தேவை. அவர்கள் நம்மை கவனிக்கிறார்கள். நம்மை பின் பற்றுகிறார்கள்.

பிறர்செய்வதுதவறுஎன்றுதோன்றினால்உடனே குறை கூறி அவர்களை சங்கடப்படுத்தக்கூடாது. இப்படி செய்தால் நல்லது என்று புன்னகையுடன் எடுத்துரைக்கலாம். அது அவர்களை முன்னேறச் செய்யும். சிறந்த விளையாட்டுப் பயிற்சியாளர்கள் அப்படித்தான் செய்வார்கள். அவர்களின் அறிவுரைகள் சிறந்த விளையாட்டு வீரர்களை உண்டாக்குகின்றன. எப்போதும் நிதானமாக செயல்பட வேண்டும். பிறர் தவறைத் திருத்திக்கொள்ளும் போது பாராட்டுங்கள். இது மிகவும் அவசியம் நம்மை யாராவது குறை கூறினாலும், அதை நல்ல விதமாக எடுத்துக்கொண்டு, சிந்தித்து சரியாக செயல்பட்டால் நமக்கு நல்லது.

புன்னகையுடன் செயல்படுங்கள். அது நல்ல நண்பர்களை உண்டாக்கும். மகிழ்ச்சி பெருகும். மற்றவர்கள் உங்களை எப்போதும் மதிப்பார்கள், புன்னகை உங்கள் நல்ல குணத்தைக் காட்டுகிறது. மற்றவர்கள் உங்கள் மத்தியில் இருக்க ஆசைப்படுவார்கள். எப்போதும் மற்றவர்களைப் பாராட்டிப் பேசுங்கள். பிறர் பேசுவதை காது கொடுத்து கேளுங்கள். அதிகம் பேசுவதைவிட அதிகம் கேட்பது நல்லது. பேசுபவர்களை பேச விடுங்கள். குறுக்கே தடுத்துப் பேசாதீர்கள். மற்றவர் பேசும் போது நமக்கு கவனச் சிதைவு இருக்கக் கூடாது. மற்றவர்களை எப்போதும் உற்சாகப்படுத்துங்கள். யாருடனும் வாதம் செய்ய வேண்டாம். ஆலோசனை செய்யலாம். அது நல்ல பலன் கொடுக்கும். கர்வமின்றி பணிவுடன் பேச வேண்டும். எப்போதும் நீங்கள் கொடுத்த உறுதிமொழிகளைச் செயல்படுத்துங்கள். யார் உதவி செய்தாலும் நன்றி கூறுங்கள். மற்றவர்கள் நம்மை நம்பும்படி பெருந்தன்மையுடனும்,நேர்மையுடனும்நடந்து கொள்ள வேண்டும். இத்தகைய நல்ல பழக்கங்கள் நமது நேர்மறையான ஆளுமையை அதிகப்படுத்தும்.

இந்த எழுத்தாளர் எழுதியுள்ள வெற்றிக்கு மிக அருகில், வெற்றி பின்தொடர, வெற்றி ரகசியங்கள், வெற்றி கையுறல், வெற்றியின் அலைஓசை, Spoken English for your success, Success habits of great achievers என்ற புத்தகங்களைப் படித்தால் திறமைகள் அதிகரிக்கும் வெற்றி அடையாளம்.

## எட்டு போட்டு நடங்கப்பா ....
## முதுமை எட்டாம இளமையா இருப்பீங்க....

ஆரோக்கியத்துக்கு முதன்மையானது நடைபயிற்சி மட்டும் தான் என்பதை நம் முன்னோர்கள் அறிந்து வைத்திருந்ததால், அதனை ஒரு பயிற்சியாக அல்லாமல் அன்றாடம் செய்யும் வேலையை போல் கடைபிடித்தார்கள். வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்க நடந்து செல்வது, கோயிலுக்கு சென்று கடவுளை வணங்குவதோடு, பிரகாரத்தை சுற்றி வருவது என அதனை அன்றாட பணியாக நடை பயிற்சியை கடைபிடித்தார்கள். நாம் ஆனால், நடக்கும் தூரத்தில் இருக்கும் இடங்களுக்கு கூட வாகனங்களில் செல்லும் அளவிற்கு சோம்பேறியாகிவிட்டோம்.

பயிற்சி செய்ய வேண்டும். பயிற்சி பலனளிக்க வேண்டும். உடல் உழைப்பு கொடுக்க நேரம் ஒதுக்க வேண்டும் என்னும் குறிக்கோள் கொண்டவர்களுக்கு இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகவல்கள் நிச்சயம் பலனளிக்கும்.


அதற்கு முன் நீங்கள் நடைபயிற்சி மேற்கொள்ளும் போது உங்களது கவனம் நடையின் மீது இருக்கிறதா ? ஏனெனில், வாக்கிங் போகும் போது கூட மனதில் பலவித எண்ணங்களோடு மோதியபடி நடப்பவர்கள் தான் அதிகம். ஆனால் நடக்க வேண்டும் அவ்வளவுதானே இதில் என்ன இருக்கு என்று சொல்பவர்களுக்கு நடைபயிற்சி குறித்த விழிப்புணர்வு நிச்சயம் தேவை என்கிறார்கள் பயிற்சியாளர்கள்.

**நடையிலும் ஒரு பயிற்சி :**

உடலை வருத்தி செய்தால் தான் பயிற்சியா நடைபயிற்சியே போதும் என்ற கருத்து பொதுவானதாக இருக்கிறது. இது ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலும் உண்டு. ஆனால் பயிற்சியில் நடைபயிற்சியிலும் ஒரு பயிற்சி உண்டு என்பதை சித்தர் காலத்திலேயே கடைப்பிடித்திருக்கிறார்கள்.

பாரம்பரியமாக நமது முன்னோர்கள் கண்டறிந்த பயிற்சிகளெல்லாம் மேலை நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு அதன் ஆரோக்கியம் வெளிக்கொணரப்பட்டு மீண்டும் பொலிவு மாறாமல் புதுமையாக வருவதைப் போன்றுதான் இந்த 8 வடிவ நடைபயிற்சியும் இன்பினிட்டி வாக்கிங் என்ற பெயரில் நம் நாட்டுக்கே திரும்பி இருக்கிறது.

உடற்பயிற்சி என்பது உடலுக்கு மட்டும் பயிற்சி தரக்கூடியதாக இருக்க கூடாது, மனதிற்கும் பயிற்சி தரக் கூடியதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அந்தப் பயிற்சிகளின் மூலம் கிடைக்கும் ஆரோக்கியமும் பலனளிக்கும் என்பதை




உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். அந்த வகையில் இந்த எட்டு வடிவ நடைபயிற்சியை வர்ம நடைபாதை பயிற்சி என்று அழைக்கலாம்.

**எட்டு வடிவ பயிற்சி தொடக்கம் :**

மண் தரை, சிமெண்ட், சாலை என்று எங்கு வேண்டுமானாலும் பயிற்சி பெறலாம். ஆனால் கூழாங்கற்களைப் பதித்து அதில் நடைப்பயிற்சி செய்ய வேண்டும். மேலும் வெளியில் சென்று பயிற்சி பெற வேண்டியதில்லை. நமது வீட்டு மொட்டை மாடி, தோட்டத்திலும் அருகில் இருக்கும் மைதானத்திலும் கூட இதைச் செய்யலாம்.

**எட்டு வடிவம் ஏன் சிறப்பு :**

வடிவத்தில் ‘8’ என்பது முடிவில்லாதது. அதனால் தான் எட்டு போடுகிறவனுக்கு நோய் எட்டிப் போகும் என்றும் பழமொழியும், எட்டுப்போடு எல்லாம் பறந்தோடும் என்று சித்தர்களும் கூறுகிறார்கள்.

**எட்டு வடிவம் இப்படித்தான் போடனும் :**

வீட்டின் மொட்டை மாடியாக இருந்தாலும், வராண்டாவாக இருந்தாலும் தோட்டம் இருக்கும் பகுதியாக இருந்தாலும் 10 அடி இடத்தில் வடக்கு தெற்காக ‘8’ என்னும் வடிவத்தை சாக்பீஸால் வரைந்து கொள்ளுங்கள். அதாவது நீளவட்டம் வடக்கில் இருந்து தெற்கு நோக்கியும், கிழக்கில் இருந்து மேற்காகவும் இருக்க வேண்டும்.

6க்கு 12 அடி அல்லது 8 க்கு 16 அடி அளவில் இருந்தாலும் கூட போதும் என்கிறார்கள். குறிப்பு அகலம் 6 அடியாக இருப்பது மிகவும் நல்லது என்கிறார்கள் பயிற்சியாளர்கள். இவை குறையும் போது குறைந்த வட்டப்பாதையில் நடக்கும் போது சிலருக்கு தலைச்சுற்றல் உபாதை ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு என்பதே காரணம்.

**எட்டு வடிவத்தில் இப்படித்தான் நடக்கணும் :**

எட்டு வடிவ கோட்டின் மீது நின்று பயிற்சியைத் தொடங்குங்கள். முதலில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும்15நிமிட நேரம்எட்டுவடிவநடைபயிற்சியைச் செய்யுங்கள்.

**எட்டு வடிவ நடை என்பது :**

இந்த பயிற்சி 15 நிமிடங்கள் முதல் 30 நிமிடங்கள் வரை செய்தாலே போதும் வேகமாக நடக்க வேண்டியதில்லை. மிதமான நடையே போதுமானது. முதல் 15 நிமிடங்கள் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நடக்க வேண்டும். அடுத்த 15 நிமிடங்கள் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி நடக்க வேண்டும்.

தினமும் காலையில் ஒரு டம்ளர் தண்ணீர் குடித்து விட்டு பயிற்சி செய்யலாம். இரவு நேரத்தில் உணவை முடித்து விட்டு 15 நிமிடங்கள் கழித்து பயிற்சி செய்யலாம். இவ்வாறு தினமும் இரண்டு வேளை இந்த பயிற்சியைச் செய்ய வேண்டும்.

**8 வடிவ நடைபயிற்சியின் பலன்கள் :**

முதுமையை தள்ளி இளமையைத் தக்க வைப்பதில் சிறந்த பயிற்சி இது என்பதால் உடலை ஃபிட்டாக வைக்க விரும்புபவர்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய பயிற்சி இது என்று சொல்லலாம்.

**ஆரோக்கிய பலன்கள் :**

இந்தப் பயிற்சியின் முதல் நாளிலேயே இதன் பலனை உணரலாம். நாசிகளின் முழுமையான சுவாசத்தால் சளி பிரச்சனை இருப்பவர்கள் இந்த பயிற்சியின் முதல் நாளிலேயே குறைந்து வருவதை உணரலாம். அது மட்டுமல்ல சைனஸ் பிரச்சனைகளும் நீங்குகிறது.

மூக்கடைப்பு, மூச்சுவிடுவதில் சிரமம் இருப்பவர்கள் பயன்பெறலாம். ஆக்ஸிஜன் குறையின்றி உடலுக்கு செல்வதால் நுரையீரலின் செயல்பாடு நன்றாக இருக்கும்.

இந்த நடப்பாதையால் கண்பார்வை கூர்மையடைகிறது. மைனஸ், ப்ளஸ் குறைபாட்டை மேலும் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்கிறது.

நடைப்பயிற்சியால் குறையும் இரத்த அழுத்தத்தை விட 8 வடிவ பாதையில் நடக்கும் போது அதிவேகமாகவே குறைந்து கட்டுக்குள் வருகிறது.

நமது உடலில் இருக்கும் வர்ம புள்ளிகள் அதிகளவு உள்ளங்காலில் நிறைந்திருக்கிறது. இந்த 8 வடிவ நடைப்பயிற்சியை வெற்று காலில் செய்யும் போது கூழாங்கற்கள் மீது நடக்கும் போது அந்தப் புள்ளிகள் தூண்டப்பட்டு உடலில் உள்ள வர்மம் புள்ளிகளின் ஆற்றலை அதிகரிக்கிறது.

கூழாங்கல்லில் காலணிகள் இன்றி நடப்பதால் உள்ளங்கால் முதல் உச்சி வரை பலன் பெறலாம். பாத வெடிப்பு, குதிகால் வலி, இடுப்பு வலி, மூட்டு வலி பிரச்சனைகள், படிப்படியாக குணமடைகிறது. கட்டுப்படாத நீரிழிவையும் கட்டுக்கோப்பாக வைக்கும் வயது அதிகமானவர்களும் கூட இந்தப் பயிற்சியை மற்றொருவர் உதவியுடன் மேற்கொள்ளலாம்.

நாளடைவில் வயதானவர்களும் தன்னிச்சையாக பயிற்சி மேற்கொள்ளும் அளவுக்கு 8 வடிவ நடைபயிற்சி தயார்படுத்துகிறது. ஆரோக்கியத்தை உறுதியாக அளிப்பதோடு உடலுக்கு ஆற்றலையும் தருவதால் உடல் பருமனுக்கு பயிற்சி தேவை என்று நினைப்பவர்கள் இந்த 8 வடிவ பயிற்சியை மேற்கொண்டால் பலனும் அதிகம்.

**உடல் ஆரோக்கியமும் கட்டுக்கோப்பான உடலும் :**

உடல் ஆரோக்கியத்துக்கு பயிற்சி செய்வது நல்லது என்கிறார்கள். ஆனால் உடலை வருத்தி செய்யும் பயிற்சிகள் உடலுக்கு ஆரோக்கியத்துக்கு தர வேண்டும் என்றால் உடல் ரீதியாகவும் பயிற்சியின் பலன் இருக்க வேண்டும்.

ஆனால் நடைமுறை வாழ்க்கையில் பெரும்பாலான நேரம் செலவழித்து பயிற்சி செய்தாலும் பலன் என்னமோ முழுதும் கிடைப்பதில்லை என்றே சொல்ல வேண்டும்.

8 வடிவ நடைபாதையை மேற்கொள்ளும் போது மற்ற பயிற்சிகளைக் காட்டிலும் பயிற்சியின் மீது ஒருமித்த கவனம் உண்டாகிறது. இதனால் பயிற்சியின் ஒட்டுமொத்த பலனும் தடையின்றி கிடைக்கிறது.

உடலைக் கட்டுக்கோப்பாக சிக்கென்று வைத்திருக்க வேண்டுமென்றால் உடல் உறுப்புகளின் ஆரோக்கியமும் முக்கியம். அனைத்து உறுப்புகளும் தடையின்றி சீராக செயல்பட்டால் மட்டுமே கட்டுக்கோப்பான உடலை நிரந்தரமாக பெற முடியும்.

உங்கள் உடலை ஃபிட்டாக வைக்க வேண்டுமென்றால் ஜிம், யோகா, உடற்பயிற்சி இவற்றோடு 8 வடிவ பயிற்சியும் சேர்த்து செய்யுங்கள். பலனை கண்டு நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்.

முறையில் பயன்பெற, இந்த பயிற்சியை இடைவிடாது குறைந்தது 21 நாட்கள் செய்ய வேண்டும்.

"எட்டு வடிவ வர்ம நடைபாதை.....

ஆரோக்கியத்தின் குறியீடு....

– அர்ச்சனா சுவேதாரண்யம், சென்னை–90.

செல் : 9943702054

# சங்கப் பலகை

பங்கு பெறுவோர் : சித்தர், வசுமதி, தீபிகா, கோமதி, கௌரி, ஆண்டாள், பிரியா, மீனா.

இடம் : அப்பர் சுவாமி கோவில், திருமயிலை.

சித்ரா : முதல்ல நம்ம குழுவுக்கு புது வரவான மீனாவை கைதட்டி வரவேற்போம். இங்க இன்று சிவராத்திரி நாட்டியாஞ்சலி விழாவில் எனக்குத் தெரிந்த ஒரு குழுவின் நாட்டியம் நடக்க உள்ளது. நடனமணிகள் மிகவும் அருமையாக ஆடுவார்கள். அவர்கள் நடனத்தையும் கண்டு ரசிக்கலாமேன்னுதான் இந்த கோயிலுக்கு உங்களெல்லாரையும் வரச் சொன்னேன்.

பிரியா : சிவதாண்டவம் ரொம்ப, ரொம்ப அழகா ரசிக்கும்படி இருந்தது. டீச்சருடைய குரல் மிகவும் இனிமை. எல்லா டீச்சர்களையும் நிச்சயம் பாராட்ட வேண்டும். எவ்வளவு பயிற்சி கொடுத்திருந்தால், இவ்வளவு அழகாக எல்லா குழுக்களின் மாணவிகளும் ஆடி இருப்பார்கள் ? Hats off to all the dancers and teachers!

வசுமதி: மாசா மாசம் சிவராத்திரி வருது, ஆனால் இந்த மாசி சிவராத்திரி மட்டும் மகாசிவராத்திரி என்று ஏன் அக்கா கொண்டாடுகிறோம் ?

ஆண்டாள் : மாசி மாத சிவராத்திரியன்று தான் பிரம்மா படைப்புத் தொழிலைத் தொடங்கினார்; இந்திரன் தேவலோகத் தலைவனாகவும், குபேரன் செல்வத்தின் அதிபதியாகவும் ஆனார்கள்; சிவனின் உடலில் இடப்பாகத்தைப் பார்வதி பெற்று, ஈசன் அர்த்தநாரீஸ்வரராக காட்சி அளித்த நாள்; அர்ஜுனன் பாசுபத அஸ்திரம் பெற்ற நாள்; கண்ணப்ப நாயனார் சிவபெருமானுக்கு கண்களை அளித்த நாள் இந்நாளாகும். இந்நாளில் அதாவது மாசி தேய்பிறை சதுர்த்தியன்று தான் ஈசன் ஆலகால விஷத்தை தன் கழுத்தில் அடக்கி, உலகைக் காத்தார். அதனால் தான் மாசி மாத சிவராத்திரி மகா சிவராத்திரியாக கொண்டாடப்படுகிறது.

கௌரி : எவ்வளவு முக்கியமான நாள்! நாங்கள் 5 மகளிர் சிவராத்திரியன்று இரவு நாலு கால பூஜையையும் கோயம்பேடு, திருவொற்றியூர், மைலாப்பூர், திருவான்மியூர் கோவில்களில் தரிசித்து, அடுத்த நாள் காலை 8 மணிக்குத் தான் வீடு வந்து சேர்ந்தோம். அருமையான தரிசனம்; மனதுக்குத் திருப்தியாக இருந்துச்சு.

சித்ரா : முதல்ல சிதம்பரத்தில் மட்டும் தான் நாட்டியாஞ்சலி விழா நடந்துவந்தது. இப்ப Mostly எல்லா சிவன் கோவில்களிலும் நாட்டியாஞ்சலி நடக்கிறது. இதில் பங்கேற்பது புண்ணியமென்று அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து என பல நாடுகளிலிருந்தும், மற்றும் டில்லி மும்பை, பெங்களூர், ஹைதராபாத் போன்ற பிற மாநிலங்களில் இருந்தும், தமிழகத்தின் பல நகரங்களில் இருந்தும் நடனமணிகள் வருகிறார்கள். நமக்கு அருகில் உள்ள கோவிலுக்குச் சென்று நாட்டியாஞ்சலியைக் கண்டு ரசிக்கணும், என்ன மீனா நீ ஒண்ணுமே பேசாம இருக்கே ?

மீனா : நீங்க பேசறதைக் கேட்கறதே நல்லாருக்கு. எங்க தாத்தா அந்த காலத்தில் சொல்வார்கள். சிவராத்திரிக்கு எவ்வளவு நேரம் முழிச்சிக்கிட்டு இருக்கீங்களோ அவ்வளவு புண்ணியம் கிடைக்கும்ன்னு இந்த மாசம் பங்குனி உத்திர விழா இருக்கே! மயிலையே களை கட்டி உள்ளதே! நான் கபாலீஸ்வரர் தேருக்கும், அறுபத்து மூவருக்கும் சென்று வந்தேன். அப்பப்பா! என்ன ஒரு கூட்டம்!

ஆண்டாள் : பல கடைகளிலே நீர் மோர், இளநீர், ஜூஸ், ரசனா என வெயில் நேரத்தில் பக்தர்களுக்கு அளிக்கிறாங்க! சிலர் அன்னதானமும் போடுறாங்க! இந்த வருஷம் கூட்டம் ஜாஸ்திதான்!

கோமதி : அடுத்த tapic க்கு போவோமா ? நூடுல்ஸ் பத்தி ஒரு news படிச்சேன். அதைச் சொல்றேன்பா. நூடுல்ஸ் 4000 வருஷத்துக்கு முன் சீனாவின் ஹான் மன்னராட்சியில் உருவானதாம். கோதுமை மாவைப் பிசைந்து நூல் போலத் திரித்து, ஆவியில் வேகவைத்து உருவாக்கினாங்களாம். சாப்ஸ்டிக்ஸ் எனப்படும் குச்சிகள் மூலம் இதனைச் சீனர்களும், ஜப்பானியர்களும் சாப்பிடுகின்றனர். அதைப் பார்த்து நானும் try பண்ணினேன். ஆனால் முடியல. நமக்கு ஆண்டவன் கொடுத்த நமது கைகள்தான் சரிப்படுது.

தீபிகா : 10, 15 நாளைக்கு முன்னால 19 வயதேயான தங்கல் என்ற இந்தி சினிமாவின் நாயகி சுஹானி பட்னாகர் ஒரு வித்தியாசமான வியாதியால் உயிரிழந்த செய்தி பேப்பரில் வந்ததே பாத்தீங்களா ? எவ்வளவோ மருத்துவத்துறை முன்னேறினாலும், புதுப்புது நோய்களும் வருவது மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு.

மீனா :ஆமாம்பா! அந்த நோயின் பெயரே வாயில் நுழைய மாட்டேனென்கிறது. ஏதோ ஒரு வகை தசை அழற்சி நோய். அதன் பேர் டெர்மடோ மயோசைடிஸ். இது ஒரு தோல் தசை வீக்க நோய். லட்சத்தில் ஒருத்தருக்கு வருமாம். ஆண்களை விட பெண்களைத் தான் அதிகம் தாக்குமாம்.

கௌரி : இந்த நோயின் அறிகுறியாக

கூறப்படுவது சூரிய ஒளி படக்கூடிய இடங்கள் நீலம் அல்லது சிவப்பு நிறமாக மாறக்கூடும். கை, கால்களில் வீக்கம், மூச்சுப் பிரச்சனை, கண்ணைச் சுற்றி சிவப்பு வளையம், தென்படும். லேசான காய்ச்சல், பசியின்மை, உடல் எடை குறைதல், முழங்கால் மூட்டுக்களில் வீக்கம் ஏற்படலாம்.

பிரியா : என்னப்பா இப்படி பயமுறுத்துறீங்க! Treatment இருக்கா ? இல்லையா ?

வசுமதி : அறிகுறி தெரிந்ததும் டாக்டரை அணுகி, முறையாக சிகிச்சை பெற்றால் நோயைக் கட்டுப்படுத்த முடியும். வலியில்லா ஊசி ஒண்ணு கண்டு பிடிச்சிருக்காங்களாம். Details அடுத்த சந்திப்பில் பார்க்கலாம். இப்ப நம்ம குடும்பத்தைப் பத்தி பேசலாமா ?

பிரியா : அதுக்கு முன்னே நான் ஒண்ணு சொல்லிவிடுகிறேன். நானும், எனது கணவரும் ஜெயங்கொண்டத்தில் நடந்த பொன்விழாவுக்குச் சென்றிருந்தோம். காலையில் மங்கல சந்திப்பும், மதியம் பொன்விழாவும், கார்காத்தார் ஒப்புரவின் எழுச்சி விழாவும் மிகச் சிறப்பாக நடந்தது. நான் சொல்ல வருவது என்னவெனில், மகளிர் கூட்டம் அரங்கம் நிரம்பி இருந்தது. அதுவும் ஊருக்கு ஒரு சீருடை என அணிந்து திரண்டிருந்தது காண அழகா இருந்துச்சு. நம் குல மகளிரின் கூட்டத்தைக் காண, நாம் சமுதாயத்தில் முன்னேறுகிறோம் என்ற நம்பிக்கையைத் தந்தது. எல்லா ஊரிலும் இது போன்று interest ஆக கலந்து கொண்டால், நமது கார்குலம் பீடு நடைபோடும் என்பதில் ஐயமில்லை! நீங்கெல்லாம் என்ன நினைக்கிறீங்க ?

சித்ரா : ஆமாம்பா! நிச்சயம் மகளிர் அணியில் சேர்ந்து நம்மால் முடிந்த சேவைகளைச் செய்யணும்.

தீபிகா : நமக்கு சமுதாய உணர்வு அவசியம் தேவை. ஒற்றுமையாக இருப்பின் நமது குலம் நன்முறையில் முன்னேறும். நமது சங்கங்களுக்கு மகளிரின் ஆதரவை முழு மனதுடன் அளிப்போம்.

சித்ரா : Exams முடிந்து, விடுமுறையை நம் குழந்தைகளுடன் சேர்ந்து நாமும் கொண்டாடிவருகிறோம். கொஞ்சம் குழந்தைகளை free ஆக விடலாம். விடுமுறையிலும் நாள் முழுதும் ஏதோ ஒரு Class ல் சேர்த்து விடுவதே வழக்கமாகி விட்டது.

ஆண்டாள் : குழந்தைகளுக்கு ரொம்ப போரடிக்குது! அதனால்தான் drawing Class, western dance, Cricket coaching, Slokam Class என பல்வேறு வகுப்புகளுக்குக் கொண்டு போய்விட்டு அழைத்து வருவதே வேலையாக உள்ளது. நாங்களெல்லாம் அந்த காலத்தில் எப்போ லீவ் விடும் ? எப்போ ஊருக்குப் போவோம்ன்னு காத்திருப்போம்.

தீபிகா : ஆமாம்பா! நாங்கள் கல்காத்தாவில் இருந்த போது, லீவு விட்ட அன்றே டிக்கெட் வாங்கி ஊருக்கு வந்துடுவோம் சாப்பாடு மூட்டை கட்டி, ஒரு group ஆ வருவதே சந்தோஷம், கிராமத்தில் சொந்தங்களுடன் விடுமுறையைக் கழிப்பதில் ஒரு அளவில்லாத ஆனந்தம். குழந்தைகளுக்கும் உறவுகளின் அரவணைப்பு கிடைக்கும். விட்டுக் கொடுக்கும் பழக்கமும், மற்றவர்களை அனுசரித்து வாழும் தன்மையும் கற்றுக்கொள்வர். அது அவர்களின் பன்முக வளர்ச்சிக்கு உதவும்.

ஆண்டாள் : நான் பெரியவள் என்கிற முறையில் சொல்லிக் கொள்ள விரும்புவது, லீவுக்கு ஒரு நாலு நாளாவது உங்கள் உறவினர்கள் வீட்டிற்கு குழந்தைகளுடன் சென்று வருவதும், உறவினர்களை உங்கள் வீட்டிற்கு வரவேற்பதும் உங்களுக்கும், குழந்தைகளுக்கும் ஒரு மகிழ்ச்சி தரும். மாறுதலாக இருக்கும். Try பண்ணிப் பாருங்களேன்.

கோமதி : சரிக்கா! எல்லோருக்கும் சந்தோஷமாக, உபயோகமாக விடுமுறை தினங்களைக் கழிக்க வாழ்த்தி பிரியலாம்.

வாழ்க வளமுடன்!

## வருந்துகிறோம்

கடலூர், கார்காத்தார் சங்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. சண்முகம் பிள்ளை அவர்கள் 05–03–2024 அன்று சிதம்பரத்தில் இறைவனடி சேர்ந்தார்கள். இவர் நம் சங்கத்தின் உறுப்பினர் குறிஞ்சிப்பாடியில் வசித்து வரும் திரு. S. தில்லை நடராசன் அவர்களின் தகப்பனார் ஆவார். மேலும் திரு. சண்முகம் பிள்ளை, தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்ற ஓய்வு பெற்ற ஆசிரியரும் ஆவார். அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய கடலூர் கார்காத்தார் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை வருத்தத்துடன் தெரிவிக்கிறது.

..................................................................

சீர்காழி தாலுக்கா திருப்பங்கூர் திரு. வேலாயுதம் பிள்ளை அவர்கள் மகன் திரு. பாலமுருகன் அவர்கள் 5–3–2024 அன்று இயற்கை எய்தினார். வைத்தீஸ்வரன் கோவில் லயன் சங்கத்தின் ஏற்பாட்டுடன் பாண்டிச்சேரி அரவிந்தர் கண் மருத்துவமனை ஊழியர்கள் உதவியுடன் இரண்டு கண்களும் தானமாக வழங்கப்பட்டது.

# அர்த்தம் உள்ள வாழ்க்கை!

"அரிது, அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அதனினும் அரிது கூன், குருடு, செபிடு (செவிடு) இன்றி பிறத்தல்" என்றார் ஔவையார். ஆறறிவு பெற்ற மனிதனால் மட்டுமே, சிந்தித்து செயல்பட்டு, அற வழியில் நடந்து பிறவி எனும் பெருங்கடலைக் கடந்து 'வெற்றி' என்ற இலக்கை அடைய முடியும். செய்ய எடுத்துக்கொண்ட வேலை திருத்தமாகவும், பதற்றமில்லாமலும், ஆராய்ந்தறிந்து வித்தியாசமாகவும் புதுமையாகவும் செய்யப்பட வேண்டும். வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்ற வெறித்தனமான எண்ணம் கொண்டு செயலாற்றினால் வெற்றி உங்களுக்கே!

எவருக்கும் துன்பம் இல்லாமலும், முடிந்த வரை பிறர் துன்பம் போக்கியும் வாழ்ந்து பிறவி எடுத்ததன் பயனை துய்க்க வேண்டும். "நல்லவர் உள்ளம் இறைவன் வாழும் இல்லம்" நீயும் முன்னேறு, மற்றவர்களையும் முன்னேற்று. காலம் நேரம் பார்க்காமல் கடிகார முள் ஓடுவது போல் ஓடி... ஓடி உழைத்து நினைத்ததை சாதிக்க வேண்டும். எடுத்த செயலில் வெற்றி பெறுவதற்கு முழுமையான கவனம், சரியாக திட்டமிடுதல், தேய்வு ஏற்படும் போது சோர்ந்து போகாமல், எதிர்வரும் தோல்விகள் ஒவ்வொன்றும் வெற்றியின் படிக்கட்டுகள் என்ற நேர்மறையான எண்ணம் கொண்டு செயலாற்ற வேண்டும். மனிதன் வெற்றியில் கற்பது குறைவு. தோல்வியில் கற்பதுதான் மிக அதிகம்.

வாழ்க்கை என்பது சாதாரணமானது அல்ல, ஒரு பெரிய சமுத்திரம். அதனால் தான் வாழ்க்கை ஒரு சவால், அதை எதிர்கொள். வாழ்க்கை ஒரு கனவு, அதை உணர்ந்து கொள். வாழ்க்கை ஒரு விளையாட்டு, அதை மகிழ்ச்சியுடன் வாழ்க்கை அன்புமயமானது, அதை அனுபவி விளையாடு என்றார்கள்.

ஒவ்வொரு விடியலும் இறைவனால் நமக்கு கொடுக்கப்பட்ட சவால் அந்த நாளின் பயனை பெற வேண்டுமெனில் எதிர்நீச்சல் போட்டுதன் கரை சேர வேண்டும். உழைத்தால் கூலி. கூலி பெற்றால் உயர்வு. உங்களால் முடிக்கப்பட்ட சாதனைகள் ஒவ்வொன்றும், அயராமல் செய்யப்பட்ட முயற்சிகளின் பலன். ஒரு மணல் துகள் அதிக சக்தி வாய்ந்ததில்லை. ஆனால் அதே துகள் நிறைய சேரும் போது மணற்குன்றுகளாகி பெருங்கடல் நீரை தடுத்துவிடுகின்றன.

நாம் கற்றுக்கொள்ள வேண்டி மற்றொரு பாடம் எதுவெனில், இன்று செய்ய வேண்டிய வேலையை இன்றே செய்ய வேண்டும். நாளைக்கென்று ஒத்தி வைக்கக்கூடாது. காலம் பொன் போன்றது என்பதுணர்ந்து, சலிப்பின்றி கொடுத்தப் பணியை சரியான நேரத்தில் செய்து முடித்தீர்களானால் போற்றுதற்குரிய மனிதர் நீங்கள் தான். நாம் திட்டமிட்டு, சிரமம்பட்டு செயல் செய்து கொண்டிருக்கும் போது, விமர்சனம் செய்வதற்கு சிலர் இருப்பர். அத்தருணங்களில் கோபப்படாமல் பொறுமையை கையாள வேண்டும். விமர்சனம் செய்பவரின் நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொண்டும், நமக்கு ஒவ்வாத எதிர்மறையான கருத்து எனில், அதனை காதில் போட்டுக் கொள்ளாமலும், ஒதுக்கிவிட்டு நம் பணியைத் தொடர வேண்டும். நம்முடைய செயலில் வெற்றி பெற வேண்டுமானால் உங்களிடம் துணிச்சல் நிறைந்த, விடா முயற்சியுடன் கூடிய செயல்பாடு இருக்குமானால் நீங்கள்தான் வெற்றியாளர்!

மனித பண்புகளில் மிக மிக முக்கியமான ஒன்று, 'நன்றி' சொல்லும் பழக்கம். நமக்கு கிடைக்கப் பெற்ற உதவி, சிறியதோ பெரியதோ அதனால் நாம் அடைந்த பயன் உணர்ந்து நன்றி சொல்லுங்கள். நாம் நன்றி தெரிவிக்கும் போது உதவியவருக்கு மகிழ்ச்சி. பயனாளிக்கும் மன நிறைவு. இதைத் தான் திருவள்ளுவர்.

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது – என்றார்.

ஒரு நல்ல மனிதன் பெற்றிருக்க வேண்டிய சிறந்த நடத்தை என்பது செய்த தவறை ஏற்று மன்னிப்பு கேட்கும் குணம். அது போல் தவறு செய்தவர்களை மன்னிக்கும் பண்பும் வேண்டும். மன்னிப்பு என்ற வார்த்தையின் மேன்மை, மன்னிப்பு கேட்கையில் நீங்கள் புனிதமாக்கபடுகிறீர்கள். மன்னிப்பு தருகையில் மேன்மை அடைகிறீர்கள்.

ஒரு நாளில் 1440 நிமிடங்களையும் கூட்டவோ, குறைக்கவோ அல்லது 'கொஞ்சம் நில்லப்பா' என்றோ 'தாமதித்துச்செல்' என்று நேரத்திற்கு கட்டளை இட முடியாது. 24 மணி நேரம் அடங்கிய பெட்டி ஒன்று நம்மிடம் தரப்படுகிறது. அதிலிருந்து ஒவ்வொரு வேலைக்கும் இவ்வளவுதான் நேரம் என்று எடுத்துப் பயன்படுத்திக் கொண்டால் மட்டுமே நிறைய சாதித்த மன நிறைவு கிடைக்கும். தாமரை இலையில் உருண்டோடும் பனித்துளி போன்றது மனித வாழ்வு. எனவே நினைத்ததை உடனே நிறைவேற்றி வாழ்வை அர்த்தமுள்ளதாக்குங்கள். தேன் தானும் கெடாது, தன்னால் தயாரிக்கப்பட்ட பொருள்களையும் கெட விடாது. நல்லவர்கள் தேனுக்கு ஒப்பானவர்கள்.

நேற்றைய பொழுது அனுபவம்!

இன்றைய பொழுது நிச்சயம்!

நாளைய பொழுது நம்பிக்கை! என்பது புரிந்து வாழ வேண்டும். அர்த்தமுள்ள, அடையாளம் பதித்த வாழ்நாளாக நம்மின் வாழ்க்கையை அமைத்துக் கொள்வோமே!

இரா. திலகம், வையூர்.
9789412635

# சூரிய ஒளி மூலம் மின்சாரம் பெறுவதற்கான சில வழிமுறைகள். சிறப்பு அம்சங்கள்



சூரிய ஒளி மூலம் மின்சாரம் பெறுவதற்கு தமிழக அரசு கீழ்கண்ட வழிமுறைகள் மூலம் சோலார் சூரிய மின்சக்தி கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

1. தடா (TEDA) Tamil Nadu Ranawable Energy Development, Authority) மத்திய அரசு, மாநில அரசு மூலம் மானியம் வழங்கிய அதன் மூலம் சூரியசக்தி உபகரணங்களுக்கு மக்களிடம் பணத்தொகை பெறப்பட்டு, தடாவில் (TEDA) பதிவு செய்யப்பட்டு சோலார் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2.உதாரணத்திற்கு 1KW (1000 Wats) திறன்கொண்ட (ONGRID) மூலம் சோலார் நிறுவினால் ஒரு நாளைக்கு குறைந்தது 6 மணி நேரத்திற்கு (சூரிய ஒளி அதிகமாக உள்ள காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை) தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப, அதன் உற்பத்தி அதிக அளவு 5 யூனிட் வரை மின்சாரம் கிடைக்கும். மாதம் 30 நாளைக்கு கிட்டதட்ட 150 யூனிட் வரை உற்பத்தியாகும். மின்சாரத்தை தற்போது புதியதாக மின்வாரியத்தால் நிறுவப்பட்டு வருகிற NET Metering) மீட்டர் மூலம் அமைத்துவிட்டால் நாம் உபயோகிக்கும் மின்சார யூனிட்டுகள் போக மீதி உள்ள மின்சார யூனிட்டுகள் மின்வாரிய தொகுப்பிற்கு (Grid) சென்றுவிடும். NET Meter பயன்பாடு என்பது இருவழி பயன்பாடு என்பது இருவழி பயன்பாடு (Export) (ஏற்றுமதி, இறக்குமதி) மூலம் மின் அளவை கணக்கிட்டு (Export/ Import) அதாவது நுகர்வோர் பயன்படுத்தும் அளவு – மின்வாரிய தொகுப்பிற்கு (Grid) செல்லும் அளவு இதை வைத்து மீதம் உள்ள மின்யூனிட்டை மட்டும் கணக்கில் கொண்டு அதன் தொகையை தற்போது முறையின்படி இரண்டு மாதத்திற்கு ஒரு முறை பணம் செலுத்திக் கொள்ளலாம்.

இது குறித்து மேலும் தொழில் நுட்ப விபரங்கள் தேவையெனில் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி, கைப்பேசி எண்களை தொடர்பு கொள்ளலாம்.

1. மேலும் ஒன்றிய அரசு சோலார் நிறுவுவதற்கு, மானியம் 19–2–2024 முதல் வழங்கி வருகிறது. தங்கள் தேவைக்கு ஏற்ப, 1 K.W. முதல் 10 K.W. வரை மானியம் ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வருகிறது

2.அதன் விபரம் கீழ்கண்டவாறு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

| சோலார் தேவை | Actual Cost Basic Price With Plus gst | Applicable Sibsidy |
|---|---|---|
| 1 KW. | | |
| 2 KW. | Rs. 1,30000 | Rs. 60000 |
| 3 KW. | Rs. 1,75000 | Rs. 78000 |
| 4 KW. | Rs. 2,35000 | Rs. 78000 |
| 5 KW. | Rs. 3,20000 | Rs. 78000 |
| 6 KW. | Rs. 3, 60000 | Rs. 78000 |
| 8 KW. | Rs. 4,55000 | Rs. 78000 |
| 10 KW. | Rs. 5, 45000 | Rs. 78000 |

பொது மக்கள் சோலார் அமைத்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் கீழ்கண்ட ஆவணங்களை கொடுக்க வேண்டும்.

1. ஆதார் கார்டு நகல் (இரண்டு பக்க நகல் தேவை)

2.கடைசியாக மின் கட்டணம் செலுத்தப்பட்ட ரசீது நகல்.

3.நுகர்வோர், போட்டோ (Pass Port Size) Scan செய்தது.

4.நுகர்வோர், பெயரில் உள்ள வங்கி பாஸ் புத்தகத்தின் முதல் பக்கம், அல்லது காசோலை (Cheque Cross) செய்யப்பட்ட காசோலை.

5.தொடர் கொள்ள வேண்டி கைபேசி எண்.

மேற்கண்ட ஆவணங்களை கொடுத்து உதவினால் சோலார் அமைத்து கொடுக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**குறிப்பு :** சோலார் அமைத்து "Net Meter" பொருத்திய பிறகு, தங்களுக்கு உரிய மானிய தொகை தங்கள் வங்கி கணக்கில் ஒன்றிய அரசால் செலுத்தப்படும்.

S. முத்துக்குமரன், TNEB (ஓய்வு)
SOLAR ENGINEER
கைபேசி எண் : 9842424318, 8667241844
தொலைபேசி எண் : 04364 – 224318

## JEE (Advanced) Examination 2024

இத் தேர்வானது இந்திய தொழில் நுட்ப நிறுவனங்களில் (Indian Institute of Technology - IIT's) இளங்கலை பிரிவில் உள்ள பொறியியல் அறிவியல் மற்றும் கட்டிடக்கலை படிப்புகளில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வாகும். நமது நாட்டில் 23 இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் உள்ளன. இந்த தேர்வுக்கு இணையதளம் மூலமாக பதிவு செய்ய வேண்டும்.

தகுதி : இத் தேர்வு எழுதுவதற்கு JEE (Main) 2024 தேர்வில் கலந்து கொண்டு முதல் 2,50,000 இடத்திற்குள் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

12 ஆம் வகுப்பு தேர்வில் குறிப்பிடத்தக்க மதிப்பெண் பெற்று இருக்க வேண்டும் மேலும் கணிதம் மற்றும் இயற்பியல் கட்டாயமாக படித்திருக்க வேண்டும்.

இத்தேர்வுக்கான முக்கியமான நாட்கள்

இணையதள மூலமாக தேர்வுக்கு பதிவு தொடங்கும் நாள் : ஏப்ரல் 21, 2024

இணையதள மூலமாக பதிவு செய்ய கடைசி நாள் : ஏப்ரல் 30, 2024

அட்மிட் கார்டு பதிவிறக்கம் : மே 17, 2024

தேர்வு தேதி : மே 26, 2024, (தாள் 1 : 9:00 AM, தாள் 2 : 2:30 PM - 5:30 PM)

தேர்வு முடிவுகள் அறிவிப்பு : ஜூன் 9, 2024

இத்தேர்வுக்கு தேர்வு கட்டணமாக ரூபாய் 3600 பொது பிரிவினருக்கும் பெண்கள் மற்றும் SC/ST, PwD ரூபாய் 1500 செலுத்த வேண்டும்.

இத் தேர்வு பற்றிய விவரங்களுக்கு https://jeeadv.ac.in இணையதள முகவரியை பார்க்கவும். இந்தநல்லவாய்ப்பை பயன்படுத்திநம்குலமாணவர்கள் அனைவரும் இத்தேர்வில் பங்கு கொண்டு வெற்றி பெற்று நாட்டின் தலைசிறந்த கல்லூரிகளில் பயின்று வாழ்வில் வெற்றி பெற வேண்டுகிறோம்.

– பேராசிரியர்

பா. ரத்தின சபாபதி.

Mobile : 9884470561


SRI ANJANYAR THUNAI

Cell : 93645 65546

C. CHITRA, B.Sc., (M.D.)



**CS APPARELS**

Website :www.csapparels.in

GSTIN : 33AASFC7108F1ZI

IMPORT EXPORT CODE : AASFC7108F

**CS TEXTILE PROCESS**

GSTIN : 33AAKFC0941L1ZI TAN No. : CMBC05827D

Factory : KVR Nagar, Mangalam Road (Unit - II)

Office : No. 208, Puthunagar 7th Street, Nallur, Kangeyam Road, Tirupur - 641 606.

Buyers : 1. FILA (UK), 2. MANGO (SPAIN), 3. ADIDAS (GERMANY), 4. RELIANCE (INDIA)

"QUALITY IS OUR LIFE"




**பள்ளிக் கல்வித்துறை**
**தமிழ்நாடு மாநில**
**பெற்றோர் ஆசிரியர் கழகம்**
**28.03.2024 அன்று நடத்திய**



## காஞ்சிபுரம் மண்டல மாநாடு

**சிட்லபாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு**
**சிட்லபாக்கம் லயன்ஸ் சங்கம் மூலமாக**
**ரூ. 75 லட்சம் மதிப்பிலான வகுப்பறைகள், ஆய்வகங்கள்**
**மற்றும் பல உதவிகளை வழங்கிய**



## விளாகம்

## லயன் சபா.சிவக்குமார் PMJF அவர்கள்

**மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களால்**
**பாராட்டி கௌரவிக்கப்பட்டார்**




மனித நேயம் திரு. **தி.நெ.முத்துக்குமாரசாமி**

**தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் கௌரவ ஆலோசகர் மற்றும் நங்கநல்லூர் சங்க ஆலோசகர் ”மனித நேயம்” திரு.தி.நெ.முத்துக்குமாரசாமி அவர்களின் பொதுநல சேவைகளை பாராட்டி தமிழக அரசின் தாம்பரம் மாநகராட்சியின் சார்பில் எம்.எல்.ஏ திரு.இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், உறுப்பினர் ஜெயக்குமார் ஆகியோர் வழங்கினர்.**

# மனித மனம் ஒரு குரங்கு

Dr. D. Kalyanakumar, Trichy-18.

'மனம் ஒரு குரங்கு
மனித மனம் ஒரு குரங்கு
அதைத்தாவ விட்டால் தப்பி ஓட விட்டால்
நம்மைப்பாவத்தில் ஏற்றி விடும்
அது பாசத்தில் தள்ளி விடும்
அடித்தாலும் அனைத்தாலும் வழிக்கு வராது
அப்படியே விட்டுவிட்டால் முடிவும் இராது
நயத்தாலும் பயத்தாலும் அடங்கி விடாது
நமக்குள்ளே இருந்து கொண்டு நன்மை தராது'

இதே பெயரில் வந்த பழைய தமிழ் படத்தில் வந்த பாடல் வரிகள்.

திருடுவது கையூட்டு பெறுவது கற்பழிப்பது எல்லாமே தவறு என்று நம்மில் பலருக்கு தெரிகிறது. ஆனால் அதில் தினம் தினம் ஈடுபடுபவர்களுக்கு அது தெரிவதில்லையே ஏன்? அதற்கு அவர்களுடைய கெட்டுப்போன மனதுதான் காரணம் மனம் நம் அனைவருக்கும் பொதுவானதுதான் என்றாலும் அதை நாம் எவ்வாறு பழக்கிவிடுகிறோமோ அதைத்தான் அது மீண்டும் மீண்டும் செய்யும் அதைத்தான் தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள் போலும் உளவியல் வல்லுநர்கள் மனித மனத்தின் அபாரமான வலிமையைப் பற்றி நிறையப் பேசுகிறார்கள். ஆழ்மனத்தின் ஆற்றல் ஆழ்கடலை விடப்பெரிது என்கிறார்கள். நம் வள்ளுவரும் மனத்தைப் பற்றிய பல இடங்களில் பேசுகிறார். மனம் என்ற சொல்லையே அவர் எடுத்தாள்கிறார். மனத்தின் இயற்கையான ஆற்றல் பற்றியும் நல்லாருடன் இணங்கி இருப்பதன் மூலம் அதன் ஆற்றல் எப்படிக் கூடுகிறது என்பதைப் பற்றியும் பல குறட்பாக்கள் விளங்குகின்றன.

''மனநலத்தின் ஆகும் மறுமை யற்றஃதும்
இனநலத்தின் ஏமாப் படைத்து''

ஒருவனுக்கு மன நலத்தால் மறுமை இன்பம் கிட்டும் அந்த இன்பமும் நல்லாரைச் சேர்ந்திருக்கும் இன நலத்தால் மேலும் வலிமை பெறும் மனம் ஒரு குளம் என்று சொல்லப்படுகிறது. அதாவது மனித மனங்கள் அனைத்தும் சேர்ந்து ஒரே குளம் தான் தனித்தனிக் குளங்கள் அல்ல நாம் எண்ணும் எண்ணம் அந்தக் குளத்தில் எறியப்படும் ஒரு கல் போன்றது குளத்தில் கல் எறிந்தால் அதிர்வலைகள் வட்ட வட்டமாக அடுத்தடுத்துத் தோன்றுவதைப் போல மனக் குளத்தில் நம்மால் எறியப்பட்ட நமது நினைவுக் கல்லும் அதிர்வலைகளைத் தோற்றுவிக்கும். எனவே நாம் எண்ணும் எண்ணமேகூட அடுத்தவர் மனத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் மனத்தாலும் தீயவற்றை நினைக்கக்கூடாது என்று சொல்வது அதனால்தான் உடலும் மனமும் ஒன்றுக்கொன்று முரணானவை உடலை வலிமைப்படுத்த வேண்டுமானால் அசைத்து வலிமைப்படுத்த வேண்டும். மனத்தை வலிமைப்படுத்த வேண்டுமானால் அதை அசையாமல் இருக்கச் செய்ய வேண்டும். என்பது மகான் புத்தர் கண்டுணர்ந்த மனத் சார்ந்த உண்மைகளில் ஒன்று.

ஒருவன் மனத்தில் தன்னை எதுவாக நினைக்கிறானோ அதுவாகவே ஆகிறான். ஆழ்மனத்தில் விதைக்கப்பட்ட எண்ணம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு செயல்வடிவம் பெற்று உண்மையாக மாறுகிறது. கெட்ட எண்ணமோ நல்ல எண்ணமோ மனத்தில் தோன்றும் எண்ணம் என்பது ஒரு குழந்தை. அது வளர்ந்து செயல் என்ற மனிதனாக மாறுவது உறுதி எனவே மனத்தைக் கண்காணியுங்கள் என அறைகூவுகிறார் சுவாமி சிவானந்தர் தாமஸ் ஆல்வா எடிசன் முதல் கணித மேதை ராமானுஜன் வரை பெரும் சாதனை செய்த பலரும் இளமைக் காலத்திலேயே அப்படி ஆக விரும்பியதாகச் சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம். இளமையில் விதைத்த விதைதான் சரியான பருவத்தில் காய்த்துக் கனியாகிறது. உன்னிடம் அபாரமான வலிமை உள்ளது நீ இயல்பிலேயே ஏராளமான ஆற்றலைப் பெற்றவன். உன்னைப் பராக்கிரமசாலி என்று நினைத்துக் கொள். பாவி என்று நினைத்துக்கொள்ளாதே! எழுவாய் விழித்துக்கொள்வாய் லட்சியம் நிறைவேறும் வரை நில்லாமல் லட்சியத்தை நோக்கிச் செல்வாயாக! என விவேகானந்தர் முழங்குவதும் இதனால்தான்.

ஒரு கூட்டுப்புழு இரண்டு செயல்களைச் செய்கிறது. நான் ஊர்ந்து செல்லும் புழுவல்ல. பறக்கும் வண்ணத்துப் பூச்சி என்று எது ஓயாமல் நினைக்கிறது அதுமட்டுமல்ல தன் நினைவை யாரும் தடை செய்யாமலிருக்கும் பொருட்டுத் தன்னைச் சுற்றி அது ஒரு கூட்டைக் கட்டிக் கொள்கிறது. என்ன ஆச்சரியம் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அந்தக் கூட்டுப்புழு இறக்கை முளைத்த வண்ணத்துப் பூச்சியாக கூட்டைப் பிளந்துகொண்டு வெளியே பறந்து செல்கிறது. எல்லாம் மனம் செய்யும் மாயம்தான் என்கிறார் பரமஹம்சர். மந்திரங்கள் அனைத்தும் மனத்தை மையப்படுத்தியே உருவாக்கப் பட்டிருக்கின்றன. தொடர்ந்து மந்திரங்களை ஜபிக்கும் போது மனம்

அமைதியடைகிறது. மந்திர ஜபத்தால் மனம் அளவற்ற வலிமை உடையதாகிறது. அது எண்ணிக்கூடப் பார்க்கவியலாத சாதனையைச் செய்யும் ஆற்றலைப் பெறுகிறது. தொடர்ந்து ராமநாம மந்திரத்தை ஜபம் செய்து வந்த அனுமன் கடலையே தாண்டும் சக்தியைப் பெற்றான் என்தை ராமாயணத்தில் சுந்தரகாண்டம் விவரிக்கிறது. மனமது செம்மையானால் மந்திரம் ஜபிக்க வேண்டாம் என்கிறார் சித்தர்களில் ஒருவரான அகத்தியர்.

“நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா...” இரண்டு மனம் வேண்டும் இறைவனிடம் கேட்டேன் என்றெல்லாம் பல திரைப்பாடல்கள் மனத்தைப் பற்றிப் பேசுகின்றன. மனமே முருகப்பெருமானின் மயில் வாகனம் என்றும் அவரவர் மேனியை முருகன் குடியிருக்கும் ஆலயம் என்றும் முருகா எனக் கூவும் குரல்தான் கோயிலில் ஒலிக்கும் மணியோசை என்றும் பக்திப் பரவசத்தோடு பாடல் எழுதுகிறார் தில்லானா மோகனாம்பாள் புகழ் கொத்தமங்கலம் சுப்பு ‘மோட்டார் சுந்தரம்பிள்ளை திரைப்படத்தில் எம்.எஸ். விஸ்வநாதன் இசையில் ராதா ஜயலட்சுமி குரலில் ஒலிக்கிறது அந்தப் பாடல்.

‘அலையும் புலனைப் பின்றொடர்ந்தே அலையுமனதோ நம்மறிவைக் கலக்கி இழுக்கின்றது. நீர் மேல் காற்று கலத்தை இழுப்பது போல்’ என்கிறது கீதை. கடல் நீர் மேல் கப்பலைப் புயல்காற்று ஆட்டிப் படைத்து அங்கும் இங்கும் இழுப்பது போல் நிலையற்ற ஐம்புலன்கள் வழியே திரியும் மனதும் நம் அறிவைக் கலக்கிச் சீரழித்து, நிலையின்றி இழுத்தடிக்கின்றது. ஆகவே, அலையும் மனத்தை அடக்குதல் வெகுகடினந்தான். இந்த உண்மையை அறிந்துகொள்ள ஒரு சிறிய கதையை பார்ப்போம்.

ஒரு ஊரில் ஒரு தனவந்தர் இருந்தார். அவர் ஒரு அன்னசத்திரம் கட்டி சமயத்தொண்டு புரிவோர்க்கு அன்னதானமிட்டு வந்தார். ஒரு நாள் அந்தனவந்தரின் கணக்கர் சத்திரத்திற்கு வந்து வரவு செலவுக் கணக்கைப் புரட்டிப் பார்த்தார். ஏட்டில் அன்றாடம் ‘சும்மா இருக்கிற சாமியாருக்குச் சோற்றுக்கட்டி ஒன்று’ என்று குறிப்பிட்டு இருந்தது. ‘அதென்ன சும்மா இருத்தல்? ஏன் அந்தச் சாமியாருக்கு வீண் சோறு போடுகிறீர்கள்?’ எனச் சத்திர நிர்வாகியிடம் கேட்டார் ‘அதோ மூலையில் தூங்கிக் கொண்டிருக்கிறார் சாமியார் அவரையே கூப்பிட்டுக் கேளுங்கள்’ என்றார் சத்திர நிர்வாகி. உடனே எழுப்பி சாமியார் வரப்பெற்றார். ‘ஏன் சாமி ஏதாவது சமயத்தொண்டு புரியாது இவ்விதம் சோம்பலாய்ச் சும்மா இருக்கிறீர்? அப்படி இருந்தால் இனி இங்கு உனக்கு அன்னம் கிடைக்காது’ என்றார் கணக்கர் கண்டிப்புடன் அச்சாமியார் புன்னகை பூத்து ‘அப்பனே சும்மா இருப்பதென்ன அத்தனை சுலபமா?’ என வினவினார். ‘அதென்ன பிரமாதம்? இதோ நான் சும்மா இருந்து காட்டுகிறேன் எவ்வளவு நேரம் சும்மா இருத்தல் வேண்டும்?’ எனக் கேட்டார் கணக்கர். அதிகம் வேண்டாம் அப்பனே! ஐந்து நிமிடங்கள் ஐம்புலன்களையும் அடக்கிச் சும்மா இருந்தால் போதும் என்றார் சாமியார்.

அதன்படி கணக்கரும் கண்மூடி மௌனமாய் அசைவற்று அமர்ந்திருந்தார் அருகிலிருந்த அனைவரும் அமைதியாய் நடப்பதை ஆர்வத்துடன் கவனித்து நின்றனர். ‘அதுதானே கூடாது, அப்பனே! நீ தற்போது உன் கள்ளக்காதலியைப் பற்றி நினைப்பது ஆகாது’ என எச்சரித்தார் சாமியார். அதைக்கேட்டு அச்சமுற்ற கணக்கர் ‘இல்லை, இல்லை! இனி நான் எவ்விதச் சிந்தனையுமின்றி சும்மா இருக்கிறேன்’ எனக்கூறி வாளா இருந்தார். ‘அப்பனே! நேற்று நீ தோப்புக் குத்தகைப் பணத்தில் கையாடியதை உன் முதலாளி தெரிந்து கொள்வாரோவென இப்போது ஐயுற வேண்டாம்’ என்றார் கண்டிப்புடன். அதைக் கேட்டதும் கணக்கர் திடுக்கிட்டுக் கண்விழித்து ‘ஏது நம் திருட்டுத்தனத்தை எல்லாம் சாமியார் அம்பலமாக்கி விடுவாரோ?’ என அஞ்சி சாமிகளே போதும் போதும். இந்தச் சோதனை ஐம்புலன்களையும் அடக்கிச் சும்மா இருப்பதென்பது வெகுகடினம். நீங்கள் ஒரு பழுத்த திரிகால ஞானி என்பிழை பொறுத்து மன்னியுங்கள்! நீங்கள் இனி எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இச்சத்திரத்தில் தங்கலாம். என அனுமதி வழங்கினார். பின் சத்திர நிர்வாகியிடம் சாமிகளுக்கு இனி அன்றாடம் ஒரு சோற்றுக் கட்டிக்குப் பதில் இரண்டு கட்டிகள் கொடுங்கள் என ஆணையிட்டார். ‘வேண்டாம் அப்பனே! நீ உண்மையை உணர்ந்ததே அடியேனுக்குப் பரம திருப்தி மனம், வாக்கு, காயம் மூன்றையும் அடக்கி, சுனை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் உணர்ச்சிகளை ஒருக்கிச் சும்மா இருந்த சுகம் பெறுவதென்பது மிக அரிது ஆனால் விடாது முயன்று பாடுபட்டால் பலனுண்டு ஐம்புலன்கள் எவராலே அடக்கப்படுமோ அவர் மனம் அலையாது. என்றும் நிலைத்திடும் ஆகவே மனத்தை நிலைநிறுத்தவே மாதவம் என அறிவுரை அருளினார் அச்சாமியார். அக்கணக்கருக்கு ஞானோதயம் ஏற்பட்டது.

பகவத் கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

மனதை அடக்குவதற்கு அர்ஜுனனிடம் யோகப் பயிற்சியை பரிந்துரைத்தார். அதற்கு அர்ஜுனனோ, கிருஷ்ணா, மனம் அமைதியற்றதும் குழப்பம் நிறைந்ததும் அடங்காததும், சக்தி மிகுந்ததுமாயிற்றே, வீசும் காற்றை அடக்குவதை விட மனதை அடக்குவது கடினமானதாக எனக்குத் தோன்றுகிறது' என்று கூறினான். பகவத் கீதை 6.34) பௌதிக உலகில் மனம் பொதுவாக மனைவி, கணவன், குழந்தைகள் என உடல் சம்பந்தமான உறவுகளில் மூழ்கியிருக்கிறது. மனமானது பொதுவாக தன் வட்டத்திற்கு உட்பட்ட பொருட்கள் மீது மிகுந்த பற்றுதலை வெளிப்படுத்தும் தன்மை கொண்டது ஏற்றல் நிராகரித்தல் என்ற மனதின் இரு தன்மைகளே எல்லா செயல்களிலும் வெளிப்படுகிறது. நாணயத்திற்கு எப்போதும் இரு பக்கங்கள் இருப்பதைப் போன்று, மனதிற்கும் பிடிப்பு பிடிப்பற்ற தன்மை என்று இரு பக்கங்கள் இருக்கின்றன. இதற்கு சிறந்த உதாரணம் இந்த நபருடன்தான் வாழ்க்கை நடத்துவேன் என அடம்பிடிக்கின்ற மனம் சில காலத்திற்கு பிறகு அவருடன் வாழ மாட்டேன் எனவும் அடம்பிடிக்கிறது. இதன் மூலம் வாழ்க்கை என்பது மனம் மூலமாகவே இயக்கப்படுகிறது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். இதன் அடிப்படையிலேயே ஒருவன் நண்பனாகவோ எதிரியாகவோ புலப்படுகிறார். விருப்பும் வெறுப்பும் மனதின் இரு பக்கங்களாகும்.

மனதின் தீய சிந்தனைகள் பல தீய சூழ்நிலைகள் பிற மனிதர்களின் தவறான தாக்கங்கள் மன அமைதியை குறைக்கும். சுமார் 15 நிமிடங்களுக்கு செய்கின்ற தியானம் மனதை சுத்தப்படுத்த உதவும் மனத்தினை நம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வோம். இன்பம் துன்பம் ஆகியவற்றை சரிசமமாக உணர்ந்து செயல்படுவோம். மன அமைதியுடன் வாழப் பழகிக் கொள்வோம். மனதில் ஒரு நாளைக்கு 50 ஆயிரம் வரை சிந்தனைகள் உண்டாகும் அவற்றை எந்த அளவிற்கு குறைத்து கொள்கிறோமோ அதற்கேற்ப மன அமைதி கிடைக்கும். ஒரு நேரத்தில் ஒரு செயலில் மட்டும் கவனம் செலுத்துதல் மனதை ஒருமுகப்படுத்தும் வழி ஆன்மீகம் எனும் ஆயுதத்தை வைத்து மனதை அடக்க வேண்டும். சற்று ஓய்வு கொடுத்தாலும் மனிதனின் மனம் தாவத் தொடங்கிவிடும்.

"Mind is a Flexible Mirror; adjust it to view the world with absolute Clarity"


கார்குல சொந்தங்களுக்கு இனிய தமிழ்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

**B.M. பரணி பிரிண்டர்ஸ் & ஸ்டேஷனரி**

நெ. 13, லெனின் வீதி, குயவர்பாளையம், புதுச்சேரி.

செல் : ***98423 24575, 99443 23023***

திருமணம், நிட்சயதார்த்தம், புதுமனை புகுவிழா, மஞ்சள் நீராட்டு விழா, பிறந்தநாள் விழா, காதணி விழா, அழைப்பிதழ்கள் தாம்பூல பைகள் கிடைக்கும் மற்றும் லெட்டர்பேடு விசிட்டிங்கார்டு புத்தகபாரங்கள் மற்றும் பள்ளி கல்லூரி அலுவலகங்களுக்கு தேவையான எழுதுபொருட்கள் கிடைக்கும். அனைத்து விசேஷங்களுக்கும் அழைப்பிதழ்கள் பிரிண்டிங் செய்து தரப்படும்.

உரிமை : **K. இராஜேந்திரன்,**

பொருளாளர், புதுச்சேரி கார்காத்தார் சங்கம்,

Ex. தலைவர் புதுவை கூட்டுறவு ஊழியர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்.

Ex. Secretary PIC Press INTUC Union

## நட்சத்திரங்களும் மரங்களும்

தொடர்ச்சி)

அக்ரி. கு. சேதுசுப்பிரமணியன்.

அலைபேசி : 9443665642

### 24. சதயம்

நட்சத்திர வரிசையில் 24–வது நட்சத்திரமாக வரும் சதயம் நட்சத்திரத்தின் நான்கு பாதங்களும், கும்பஇராசியில் $306^{0}$-40' முதல் $320^{0}$-00' உள்ள பிரிவில் அடங்கி விடுகின்றன. இந்தியப் பஞ்சாங்க முறையில், சந்திரன் பூமியைச் சுற்றி வரும் போது சதய நட்சத்திரக் கோளப் பிரிவுக்குள் இருக்கும் காலம் சதய நட்சத்திரத்துக்குரிய காலமாகும். இந்த கால கட்டத்தில் பிறக்கும் ஒருவருடைய ஜன்ம நட்சத்திரம் சதயமாகும். சதய நட்சத்திரப் பிரிவின் பெயர் ‘‘அக்குவாரியசு’’ அல்லது ‘‘நூறு பூக்கள்’’ என்னும் பொருள் கொண்டது. இதன் அடையாளக் குறியீடு ‘‘வெறும் வட்டம்’’ ஆகும்.

சதயம் நட்சத்திரத்தின் கிரகாதிபதி இராகு பகவான் ஆகும். இதன் அதிதேவதை வருணன், கணம் இராட்சசம், பறவை அண்டங்காக்கை, விலங்கு பெண் குதிரை, விருட்சம் கடம்ப மரம் ஆகியவையாம். திருவாதிரை, சுவாதி, சதயம் ஆகிய மூன்று நட்சத்திரங்களுக்கும் கிரகாதிபதி இராகுவாகும். இவை ஏக நட்சத்திரங்கள் எனப்படும் மாமன்னர் இராஜராஜசோழன் பிறந்த நட்சத்திரம் சதயமாகும்.

பொதுவாக சதய நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், நினைத்த காரியத்தை முடிக்கக் கூடியவர்களாய் இருப்பார்கள். நீதியும், நேர்மையும் உடையவர்கள் மனச் சஞ்சலமும், கோபமும் கொண்டவர்கள். அடிக்கடி வயிற்றுக் கோளாறுகளால் அவதிப்படுவார்கள். துணிவும் வீரமும் நிறைந்திருக்கும். கல்விச் செல்வமும், பொருட் செல்வமும் இயல்பாக அமையப் பெற்றவர்கள். ஆள் அடிமையும், நண்பர்கள் வட்டமும் கொண்டவர்கள்.

சதயம் நட்சத்திரத்தின் விருட்சம் கடம்ப மரமாகும். கடம்ப மரம் திருஆலவாய் (மதுரை, கடம்பவனம்) திருக்கடம்பந்துறை (குளித்தலை) திருக்கடம்பூர் (மேலக்கடம்பூர்) ஆகிய தலங்களின் விருட்சமாக வணங்கப்படுகிறது. மரத்தின் பெயரிலேயே ஊர்களின் பெயர்கள் அமைந்துள்ளன. முருகப்பெருமானுக்கு கடம்பன் என்னும் பெயரும் உண்டு. மேற்கூறிய தலங்கள் சதய நட்சத்திரக்காரர்களுக்குப் பரிகாரத் தலங்களாக விளங்குகின்றன. கடம்ப மரம் பரிகார விருட்சமாக அமைகின்றது. முருகப் பெருமானுடைய தலங்களும் பரிகாரத் தலங்களாகும்.

**புராண வரலாறு.**

தற்போது நாம் காணும் மதுரை ஒரு காலத்தில் கடம்ப வனமாக இருந்தது. தேவர்குலத் தலைவனான இந்திரன், ஒரு சமயம் குருபகவானை அலட்சியம் செய்த காரணத்தால் அவன் பல துன்பங்களை அடைந்தான். விருத்திராசூரன் என்ற அரக்கன் இந்திரனின் பலவீனமான நிலையை அறிந்து அவனிடம் போர் தொடுத்தான் போரில் தோல்வியுற்ற இந்திரன் திருமாலின் அறிவுரைப்படி ததீசி முனிவரிடம் சென்று வச்சிரப்படை வேண்டி வணங்கிடவே அவரும் அவனுக்கு வச்சிராயுதத்தை அளித்தார். அதனைக் கொண்டு இந்திரன் விருத்திராசூரன் தலையை அறுத்து வீழ்த்தினான். அதனால் இந்திரனுக்கு பிரமகத்தி தோஷம் பற்றிக் கொண்டது. அப்போது வியாழபகவான் உத்திரவால் அந்த தோஷத்தைப் போக்கிக் கொள்ள பூமிக்குச் சென்று ஒரு கடம்பவனத்தை அடைந்தான். அப்போது அவனையும் அறியாமல் அவனுக்குப் புத்தொளி பிறந்தது. காரணம் அறிய முற்பட்ட போது, கடம்ப வனத்தின் ஊடே ஒரு சிவலிங்கம் இருக்கக் கண்டான். அந்த சிவலிங்கத்தை இந்திரன் வழிபட்டதோடு அங்கு ஒரு கோயிலை எழுப்பினான். கடம்ப மரமும் தல விருட்சமாயிற்று. கடம்பவனம் இருந்த இடமே மதுரைத் தலமாயிற்று.

அசுரர்களும், தேவர்களும் திருப்பாற் கடலைக் கடைந்து அமிர்தகலசத்தினைப் பெற்ற பின், தேவர்கள் முழுமுதற்கடவுளான விநாயகரை வணங்காமல் அமுதுண்ண அமர்கிறார்கள். இவர்களுக்குப் பாடம் புகட்ட எண்ணி, விநாயகர் அமிர்தகலசத்தைப் பூலோகத்தில் மறைத்து வைக்கவே, அதிலிருந்து ஒரு துளி அமிர்தம் கடம்ப வனத்தில் விழுந்து சுயம்பு மூர்த்தியாயிற்று. சுயம்பு மூர்த்தியே பின்னாளில் திருக்கடம்பூர்தலமாயிற்று கடம்ப மரமும் தல விருட்சமாயிற்று. முருகப் பெருமான் சூரபத்மனை அழிக்க இத்தலத்து இறைவனை வழிபட்டு வில் பெற்றார். அங்காரகன் தன் தோஷ நிவர்த்தி பெற இத்தல முருகப் பெருமானை வழிபட்டு பேறு பெற்றார். எனவே செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் இத்தல முருகனை வழிபட்டு தோஷ நிவர்த்தி பெறுகின்றனர்.

**கடம்ப மரம் :**

கடம்ப மரம் இந்தியாவெங்கும் காணப்படும் மரமாகும். நீண்டு வளர்ந்த நிலையில் உச்சிப் பகுதியில் பந்தைப் போன்ற தழையமைப்புடன் கொண்ட மரமாகும். இதன் தாவரவியல் பெயர், Anthocephalus cadamba என்பதாகும். Rubiaceae என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது.

தெய்வத் தன்மைகள் கொண்ட கடம்ப மரம் மருத்துவப் பயன்களையும், பிறபயன்களையும் கொண்டது. இலையின் சாறெடுத்து அதில் சீரகமும் சர்க்கரையும் சேர்த்து குழந்தைகளுக்குக் கொடுக்க வயிற்றுப்பொருமல், மற்றும் அழற்சி நீங்கும். அதிக தாகத்துடன் கூடிய சுரத்துக்கும் நல்லது. இலையின் சாறு வாய்ப்புண், தொண்டை அழற்சி ஆகியவற்றுக்கு நல்லது.

50 கிராம் மரத்தின் பட்டையை நீரில் இட்டுக் காய்ச்சி அருந்தி வர காய்ச்சல் குணமாகும். பட்டையை இடித்து வலியுள்ள இடத்தில் கட்ட வலி குணமாகும்.

கண்ணில் ஏற்படும் வீக்கத்திற்கு பட்டைச் சாறுடன், எலுமிச்சைச் சாறு, ஓபியம், ஆலம் ஆகியவை சேர்த்து அரைத்து சுற்றிலும் தடவி வர குணமாகும்.

பழங்களுக்கு குளிர்ச்சியுண்டாக்கி (Refrigerent) என்னும் குணமுண்டு. எனவே நீர் வேட்கையுடன் கூடிய சுரத்துக்கும். வயிற்று நோய்க்கும் பழச்சாறுடன் சிறிது சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம்.

விதையை அரைத்து நீரில் கலந்து குடித்தால் கடுமையான நஞ்சு முறியும். விதையைப் பொடித்து மூக்கால் உறிஞ்ச தலைபாரம், தலைவலி நீங்கும். பூக்கள் சமைத்து உண்ண ஏற்றது. இரத்தத்தை சுத்தம் செய்யும் குணம் கொண்டது.

சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மதுரை, திருக்கடம்பூர், குளித்தலை ஆகிய தலங்களுக்குச் சென்று முறையே வழிபாடு செய்ய இடர்கள் நீங்கி நன்மை பெருகும். மேலும் முருகப் பெருமானை வணங்குவதும் நலம் பயக்கும். கடம்ப மரக்கன்றுகளை கோயில் நந்தவனங்கள், பெருங்கட்டட வளாகங்கள் வாய்ப்புள்ள இடங்கள் ஆகியவற்றில் நடுவதும், நீர் ஊற்றி பராமரிப்பதும், வலம் வந்து வணங்குவதும் மேலான பலன்களைத் தரும்.

(பயணிப்போம்)


**மதுரை மாவட்ட கார்காத்த வேளாளர் சங்கம்**

21/30, முதல் வீதி, ஹார்விநகர், அரசரடி, மதுரை–625 016.

**பவழ விழா விளம்பரக் கட்டண விபரம்**

**மல்டி கலர் / ஆர்ட் பேப்பர் :**

| | |
|---|---|
| முழுப்பக்கம் (25x17) CM | Rs. 6000/- |
| அரைப்பக்கம் (12. 5x8.5) CM | Rs. 3000/- |

**டபுள் கலர் / பேப்பர் :**

| | |
|---|---|
| முழுப்பக்கம் (25x17) CM | Rs. 4000/- |
| அரைப்பக்கம் (12.5x8.5) CM | Rs. 2000/- |

பணம் அனுப்ப : **Dr. K. சிவசுப்பிரமணியம்** Through **G-pay No. 9442211961**

(விபரம் வாட்ஸ்அப் மூலம் தெரிவிக்கவும்)

***Through NEFT :*** **Bank : Tamilnadu State Apex Co-operative Bank**

**(The Madurai District Central Co-operative Bank Ltd.)**

**A/c. Name : MDU DIST KARKATHAR VALALAR SANGAM**

**S.B. A/c. No : 260043504 IFSC : TNSC0010600**

விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : **Dr. K. சிவசுப்பிரமணியம்**

21/30, முதல் வீதி, ஹார்விநர், அரசரடி, மதுரை–16.

வாழ்க கார்குலம்! வளர்க சைவநெறி!! பதிவு எண். 242/2017

# மதுரை மாவட்ட கார்காத்த வேளாளர் சங்கம்

21/30, முதல் வீதி, ஹார்விநகர், அரசரடி, மதுரை–625 016.

அன்பார்ந்த கார்குல சொந்தங்களுக்கு,

சங்கத்தின் இனிய நல்வாழ்த்துக்கள் !

சீரும் சிறப்புமாய் இயங்கி வரும் நம் சங்கத்தின் 75–வது ஆண்டு விழா பவளவிழாவாக 21.07.2024–ல் கொண்டாட உள்ளோம்.

சென்ற நூற்றாண்டில் தோன்றிய தொன்மை வாய்ந்த நெல்லை, சென்னை, திருச்சி போன்ற சங்கங்களின் வரிசையில் நமது சங்கத்தின் பவளவிழா நடந்தேறுவது நமக்கு மகிழ்ச்சியும் பெருமையும் அளிப்பதாகும்.

இத்தகைய வளர்ச்சியையும், பெருமையையும் நமக்கு வழங்கி உள்ள முன்னாள் சங்க முன்னோடிகளின் திருஉருவப்படங்கள் இவ்விழாவில் திறக்கப்பட உள்ளது. நம் மாநிலக் கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் கார்குல முன்னோடிகளை பங்கேற்க அழைத்து விழாவை சிறப்பாக நடத்த திட்டமிட்டுள்ளோம்.

விழாவில் கார்குல சடங்கு முறைகள், கோத்திரங்கள், வரலாற்றுக் குறிப்புகள் போன்ற பல்வேறு செய்திகளுடன் பவளவிழா மலரை வெளியிட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. கார்குல இயக்கம் பற்றிய கட்டுரைகள், குறிப்புகள் இம்மலரில் இடம்பெற தங்கள் பங்களிப்புகள் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படுகின்றன.

சிறப்பான **தெய்வத்தீந்தமிழ் இசை நிகழ்ச்சி** ஏற்பாடு செய்யப்படுகிறது.

துணைத்தலைவர் டாக்டர். **S.G. பாலமுருகன்** அவர்களது **குரு மருத்துவமனை மருத்துவக் குழுவினர்** கட்டணமில்லா மருத்துவ பரிசோதனை செய்து தர உள்ளார்கள்.

கடந்த ஆண்டு நமது சங்கம் மூலம் 53 கார்குல மாணவ – மாணவியர்களுக்கு ரூ. 10,72,000/– கல்வி உதவித்தொகை உயர்திரு. **S. வெங்கடேசன் பிள்ளை** அவர்களின் **CREW அறக்கட்டளை**யிலிருந்து வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஆண்டிலும் 61 மாணவ – மாணவியரின் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

சென்ற ஆண்டு பள்ளித்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற நமது கார்குல மாணவிகள் மூன்று பேர் சென்னை YMKA ஆண்டு விழாவில் பரிசுத்தொகை பெற்றனர்.

கடந்த 30–07–2023 அன்று நமது சங்கத்தின் சார்பாக "**மங்கல சந்திப்பு**" மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு மணமகன், மணமகள் விபரங்கள் அடங்கிய கையேடு வழங்கப்பட்டது.

சென்னை சங்க நூற்றாண்டு விழாவிலும், திருச்சி சங்க ஆண்டுவிழாவிலும் நமது சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நமது நிர்வாகிகள், சங்க உறுப்பினர்கள் இல்லங்களில் நடைபெற்ற மங்கல நிகழ்ச்சிகளில் வாழ்த்து தெரிவித்தும், மறைந்த உறுப்பினர்களுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தியும் வந்துள்ளனர்.

பவளவிழா சிறப்பாக நடைபெற நமது சங்க நிர்வாகிகள் மற்றும் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தாராளமாக நன்கொடை அளித்தும் மேலும் பவளவிழா மலருக்கு விளம்பரங்கள் பெற்றுத்தரும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

நன்கொடைகளை பணமாக சங்க நிர்வாகிகளிடம் அளித்து ரசீது பெற்றுக் கொள்ளலாம். **G.pay** செய்ய விரும்புபவர்கள் தலைவரின் **9442211961** என்ற எண்ணிற்கு அனுப்பி விபரங்கள் பெற்றுத்தரும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்த மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் சங்க நிர்வாக குழுவினர் மதுரை மாவட்டத்தின் பகுதி வாரியாக வரும்பொழுது தங்களின் முழு ஒத்துழைப்பையும் நல்கி பவளவிழா சிறப்புடன் நடைபெற அன்புடனும், பணிவுடனும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி !!

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| முனைவர் K. **சிவசுப்பிரமணியம்** | C.M. **சொக்கலிங்கம்** | வழக்கறிஞர் S. **முருகன்** |
| 94422 11961 | 98948 85775 | 98421 61136 |

மற்றும் **அனைத்து நிர்வாக மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்**

# சிறுவர் பகுதி

தயாரிப்பு **தஞ்சை தியாகு**
அலைபேசி: 94437 00375
Email: thiagu1943@gmail.com

தற்செயலால் கிடைப்பதல்ல வெற்றி. தன் செயலால் கிடைப்பதே வெற்றி.

**இன்னொருத்தரை நம்பினா!**



ஒரு ஆள் அவனுக்கு எப்பவுமே தன்மீது நம்பிக்கை கிடையாது.அவன் ஒருமுறை சென்னை யிலிருந்து புறப்பட்டு விழுப்புரத்துக்கு ரயிலில் செல்கிறான். எக்மோரிலிருந்து இரவு பத்து மணிவாக்கில் புறப்படும் ரயில். ரயில் நின்றது, கூட்டத்தில் இவனும் ஏறிக் கொண்டான். கூட்டம் அதிகம். மேலே பார்த்துல கொஞ்ச இடம் .அது மேலே ஏறி படுத்துக் கொண்டான். அவன் விழுப்புரத்தில இறங்கணும்!ஆனா தூங்கிப் போயிடுவோம்னு பயம்! கீழே சீட்ல உட்கார்ந்து கொண்டிருந்தவர் ஒருவரிடம் சார் நீங்க எந்தஊருக்குப்போவணும்னு கேட்டான்.நான் தஞ்சாவூருக்குப் போறேன்னாரு அவருசார் அப்படின்னா எனக்கு ஓர் உதவி செய்யணும்ன்னான் என்ன செய்யணும் சொல்லுங்க சார்!ன்னார். சார் எனக்கு விழுப்புரம் தெரியாது. தூங்கினாலும் தூங்கிவிடுவேன். அதனால விழுப்புறம் வந்ததும் மறக்காம என்ன எழுப்பி விட்டுடங்க சார்! அவர் சொன்னார்இதுல ஒண்ணும் கஷ்டம் இல்லையே! அப்ப நீங்க எழுந்திரிக்கவில்லைன்னா என்ன பண்றது?.சார் அதுக்காக ஒண்ணும் கவலைப் படவேண்டாம் விழுப்புரம் வந்ததும் என்ன கீழு உருட்டியாவது விட்டுடுங்க. மறந்துடாதீங்க!ன்னார். இவரும் சரின்னுட்டார்!ரயில் புறப்பட்டது.

எல்லாரும் தூங்கிட்டாங்க. காலம்பற ரயில் தஞ்சாவூர் ஸ்டேஷனில் நின்றது. தஞ்சாவூரில் இறங்க வேண்டியவர் இறங்கி பிளாட்பாரத்தில் நின்றார்.

திடீர்னுவந்து அவர் கையை பிடிச்சான் அந்த ஆள்! அதான் விழுப்புரத்தில் இறங்க வேண்டியவன் தூங்கிகிட்டே தஞ்சாவூர் வந்துட்டான். அவனுக்கு ரொம்ப கோபம். என்னசார் இது? சென்னையிலேயே படிச்சி படிச்சி சொன்னேன்! விழுப்புரம் வந்ததும் என்ன கீழு உருட்டியாவது விட்டுடுங்க. மறந்துடாதீங்கன்னு! இப்ப நான் தஞ்சாவூருக்கு வந்துட்டேனே!. இந்த நேரம் நான் விழுப்புரத்துல இருக்கணும் சார்! இப்படி புலம்ப ஆரம்பிச்சுட்டான. அந்த தஞ்சாவூர்காரர் இதை சரியா கவனிக்காம எதையோ யோசித்துக் கொண்டிருந்தார். அதைப் பார்த்தும் இவனுக்கு இன்னமும் கோபம்என்னசார் நான்பாட்டுக்கு கத்திக்கிட்டே இருக்கேன். நீங்க பாட்டுக்கு எதையோ யோசிச்சுக்கிட்டே நிக்கறீங்கன்னான். அதுக்கு அவரு சொன்னாரு. அதுக்கில்லேப்பா... தவறுதலா தஞ்சாவூருக்கு வந்த நீயே இவ்வளவு சத்தம் போடறியே....தவறுதலா நான் விழுப்புரத்திலே ஒருத்தனை வெளியே உருட்டி விட்டேனே! அவன் இன்னேரம் எவ்வளவு சத்தம் போட்டுகிட்டிருப்பான்னு யோசிச்சு பார்த்துக் கிட்டிருக்கேன்னாராம்....

இன்னொருத்தரை நம்பினா இப்படித்தான் சார்! இந்த உலகத்துல நம்மை மீறின செயல்களும் உண்டு...நம்மால் முடியக் கூடிய செயல்களும் உண்டு.... இந்த ரெண்டையும் சரியா பயன்படுத்திக்கிட்டு சாமர்த்தியமா வாழவேண்டியது நம்மோட கடமை.

**மூளைக்கு வேலை**

ஒரு தோட்டக்காரர் 10 மாமரக்கன்றுகளை 5 வரிசைகளில் நடுவதற்கு திட்டமிட்டார்.ஒவ்வொரு வரிசையிலும் 4 மரக்கன்றுகளை நடுவதற்கு திட்டமிட்டு 10 மாமரக்கன்றுகளை முழுமையாக நட்டு முடித்தார். எவ்வாறு?



**அருமை உடைத்தன்று அசாவாமை வேண்டும்**

**பெருமை முயற்சி தரும் .**

நம்மால் இதைச் செய்ய முடியுமா? என்று மனத்தளர்ச்சி அடையாமல் முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் பெருமை பெறலாம் .


திருக்குறள்

## மேதைகளின் வாழ்வில் சில சுவையான செய்திகள்



### டாக்டர். சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்

டாக்டர். சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் ஒருமுறை இங்கிலாந்து சென்றிருந்த போது அந்நாட்டு எம.பி ஒருவர் அவரிடம் கிண்டலாக அனைவர் மத்தியிலும் உலகிலேயே உங்கள் நாட்டில்தான் பிச்சைக்காரர்கள் அதிகம் இருக்கிறார்களாமே? என்று சிரித்தபடி கேட்க,அதற்கு பதிலளித்த ராதா கிருஷ்ணன் ஆம் எங்கள் நாட்டில்தான் இரக்கமுள்ளவர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்றாராம். எத்துனை அருமையான பதில்.




### ஹென்றி ஃபோர்டு

அமெரிக்க கோடீஸ்வரர் ஹென்றி ஃபோர்டு. அவரை சந்தித்தார் ஓர் இளைஞர். ஐயா உங்களிடம் இவ்வளவு செல்வம் இருக்கிறதே? ஆமாம் இருக்கிறது. என்னால் இவ்வளவு செல்வத்தை சம்பாதிக்க முடியுமா என்று நினைக்கும்போது கவலையாக இருக்கிறது!தம்பி! உன்னிடம் இப்போது ஒரு பொருள் இருக்கிறது.அதற்கு விலை மதிப்பு இல்லை அதை என்னால் சம்பாதிக்க முடியாது. அதுமட்டும் எனக்குக் கிடைக்குமானால் அதை வைத்து இப்போது நான்சேர்த்து வைத்திருப்பது போல பல மடங்கு பொருளை என்னால் சம்பாதிக்க முடியும்! அப்படியா? ஆமாம்! இப்போது உன்னிடம் இருக்கும் அதை மட்டும் நீ எனக்கு விட்டுக்கொடுக்க முடியுமா சொல்! இப்போதே என்னுடைய கோடிக் கணக்கான சொத்துக்களை உன் பேருக்கே எழுதி வைத்து விடுகிறேன்!என்ன அது? உன்னிடம் இருக்கும் இளமை! இப்போதுதான் அவ் இளைஞனுக்கு இளமையின் பெருமை புரிந்தது.



### கலைவாணர்

தெருவழிச்சென்ற ஒரு பையன் கலைவாணர் வீட்டிற்கு எதிரில் இருந்த வீட்டுக் கதவிலிருந்த பூட்டினை எடுத்து தன் பையில் போட்டுச் செனறான். இதனைப் பார்த்த கலைவாணர் அப்பையனை வழிமறித்து இங்கே வாடா தம்பி! பையில் என்ன இருக்கு? என்று கேட்டார். ஒன்றும் இல்லையே என்றான். பார்க்கலாம் என்று சட்டைப்பையில் கையை விட்டார். பூட்டு கையுடன் வந்தது.கையும் களவுமாக பிடிபட்டவன் அவரிடம் மன்னிப்பு கேட்டான். ஏன்டா எடுத்த? எனக் கேட்க. பசித்தது. பழைய சாமான் கடையில் போட்டால் காசு கிடைக்கும்.ஏதேனும் வாங்கி சாப்பிடுவேன் என்று உள்ளதைச் சொன்னான். அப்போது வெளியே வந்த எதிர் கூட்டுக்காரார் கதவில் பூட்டு இல்லாததையும், எதிரில் வீட்டில் பூட்டுடன் ஒரு சின்னபையனுடன் பேசிக் கொண்டிருப்பதையும் பார்த்ததும் அவன்தான் திருடியிருப்பான் என்ற முடிவோடு அருகே வந்தார்.பையன் கெஞ்சும் தோரணையில் என்.எஸ். கேயைப் பார்த்தான். எதிர் வீட்டுக்காரர் வந்ததும் என்.எஸ்.கே சிரித்தபடி வாங்க... வாங்க பூட்டைத் தேடறீங்களா? ஒருபையன் பூட்டைதூக்கிக்கிட்டு ஓடினான். தம்பி அவனை விரட்டிப் பிடிச்சி பூட்டை பறிச்சிக்கிட்டு வந்துட்டான். நான் வாங்கி வச்சிருக்கேன். இந்தாங்க பூட்டு. பாவம் பையன் கஷ்டப்பட்டான். அதுக்காக ரெண்டு ரூபாய் கொடுத்தனுப்புங்கள்.... என்றவர் பையனிடம் டேய். தம்பி கொடுப்பாரு வாங்கிக்கிட்டுப் போ! என்றார்.பாவம் ! அவனுக்கு பசி நீங்க இரண்டு ரூபாய்ககு வழி கிடைத்தது.



### பெர்னாட்ஷா

பெர்னாட்ஷாவைக் காண ஒரு நடிகை வந்தார். நீங்கள் எழுதும் நாடகங்கள் எனக்கு ரொம்பப் பிடிக்கும். என்றெல்லாம் கூறிவிட்டு தனது வயதை என்ன வென்று கூறுங்கள் பார்ப்போம் என்று நச்சரித்துக் கொண்டே இருந்தார். இடத்தை விட்டு நகர்வதாகவே தெரியவில்லை. சற்றே யோசித்த ஷா உங்கள் முகத்தைப் பார்த்தால் 18, உங்கள் முடியைப் பார்த்தால்19, உங்கள் பேச்சைப் பார்த்தால் 14 இளமையானவர் போன்றே தெரிகிறீர்கள் என்றார். இவற்றைக் கேட்டதும் பெண்மணிக்கு மிகவும் சந்தோஷம் என்றாலும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் அவரிடம் மீண்டும் எனது வயதை திட்டவட்டமாகக் கூறுங்கள் என்றார். ஷாவும் தாமதிக்காமல், மேற்கூறிய வயது 18,19,14 இவற்றைக்கூட்டிப்பாருங்கள் அம்மா, 51 வரும் அதுதான் உங்கள் வயது என்றாரே பார்க்கலாம், அந்த பெண் விரைந்து நடையைக் கட்டினார்.

**ஏப்ரல் முக்கிய தினங்களில் சில**

01 உலக முட்டாள்கள் தினம்
05 உலக கடல் போக்குவரத்து தினம்
07 உலக சுகாதார தினம்
11 பார்கின்ஸ்சன் நோய் எதிர்ப்பு தினம்
12 உலக வான பயண தினம்
14 உலக அன்னையர் தினம்
17 ஹீமோஃபிலியா தினம்
17 உலக மரபுரிமை தினம்
22 உலக புவி தினம்
23 உலக புத்தக தினம்
30 உலக குழந்தை தொழிலாளர் தினம்

**புத்தகங்களே !**

புத்தகங்களே கனவுகளை வளர்க்கும்கனவுகள் எண்ணங்களை உண்டாக்கும்எண்ணங்கள் செயல்களை உருவாக்கும்.
– டாக்டர் அப்துல்கலாம்.

ஆயிரம் ஆண்டுகளாக மனித குலம் சிந்தித்தவை, உருவாக்கியவைதான் புத்தகங்களாகவும். கட்டுரைகளாகவும் வெளிவருகின்றன. சரியான நேரத்தில் ஒருவர் வாசிக்கும் சரியான புத்தகம் அவரது வாழ்க்கையில் பெரும் திருப்பு முனையை உருவாக்கிவிடக்கூடும்.கல்வி என்பது ஒரு வாலியை நிறப்புவது அல்ல நெருப்பபைப்பற்றவைப்பது.
– வில்லியம்படலர் ஏட்ஸ்

நம் சட்டைப்பையில்சுமந்துசெல்லக்கூடிய நண்பர்கள்தான் புத்தகங்கள்.நூல்களின் நோக்கம் வாசிப்பவர்களுக்கு உத்வேகம் தருவதுதான்.
– ரால்ஃப்வால்டோ எமர்சன்

ஒரு நல்ல வங்கியில் உள்ள செல்வத்தைக் காட்டிலும் ஒரு நல்ல புத்தகத்தில் உள்ள செல்வம்தான் சிறந்தது.
– ராய் எல் ஸ்மித்




1. தாமரை இலையில தண்ணீர் நிற்காது .ஏன் ?
2. இரவில் தெரியாத கல் எது ?
3. சிறிய கார்தான். ஆறுபேர் சேர்ந்துகூட பின்னால் தள்ள முடியவில்லை. ஏன் ?
4. சிறிய குடை என்றாலும் ஆறு குழந்தைகள் சென்றனர். ஒருவரும் நனையவில்லை. எப்படி ?
5. அழகாக ஆடிக்கொண்டிருந்த மயில்பக்கத்துவீட்டில் முட்டையிட்டது. முட்டை யாருடையது ?
6. மெட்ரோ ரெயில் கிழக்கிருந்து மேற்கு நோக்கிச் சென்றால் புகை எந்தப்பக்கம் போகும் ?
7. நாம் ஏன் கோவிலுக்குப்போகிறோம் ?
8. ஊமை என்றாலும் நன்றாகப் பாட்டை ரசிக்கிறான். எப்படி ?

**ஒரு கதைதான்**

ஒரு வெள்ளாடு தவறி ஒரு சிங்கத்தின் குகைக்குள் சென்றுவிட்டது. வயதான சிங்கத்திற்கு கண்தெரியாது. வந்தது யார் எனக்கேட்க , ஆடு நான் ஒரு புதிய மிருகம். தினமும் காலையில் 4 யானை 2 சிங்கம் சாப்பிடுவேன் என்றது. சிங்கம் பயந்து வெளியே ஓடியது. அப்போது வந்த நரி விஷயத்தைக்கேட்டு பார்க்கலாம் வா என்று திரும்பக் கூட்டிச்சென்றது. குகையிலிருந்த ஆடு உடனே வாங்க நரியாரே நான் கேட்டதுபோலவே சிங்கத்தைக்கொண்டுவந்து விட்டீர். நீங்களும் பசியாய் இருப்பீர் பேசியபடி ஆளுக்கு பாதி தின்போம் என்றுசொல்ல சிங்கம் தப்பித்தோம் பிழைத்தோம் என வெளியே ஓடியது.உண்மையைச் சொல்ல நரி பின்னாடி ஓடிக்கொணடே இருந்தது. சமயோஜித புத்தியால் தைரியமாக பேசி ஆடு தப்பித்தது.

**பொன் மொழிகளில் சில**

**அன்பு :** வாழ்க்கை நடத்துதற்கு வேலை பார்க்கவேண்டிய அவசியமில்லாத ஒரே விலங்கு நாய் மட்டும்தான் என்பதை என்றேனும் எண்ணிப் பார்த்திருக்கிறீர்களா ?கோழி என்றால் முட்டையிடவேண்டும், மாடு என்றால் பால் கொடுக்கவேண்டும். குயில் என்றால் பாடவேண்டும் ஆனால், தன் அன்பை மட்டும் உங்களுக்குக் கொடுப்பதன் மூலம் ஒரு நாய் தன் வாழ்க்கையை ஓட்டுகிறது.

**இன்பம் :** சிலர் பணத்தை சேமிப்பதற்காக சந்தோஷத்தை இழக்கிறார்கள். பிறகு சந்தோஷத்தைப் பெற பணத்தை இழக்கிறார்கள். கடைசியில் இரண்டுமே அவர்களுக்கு மிஞ்சுவதில்லை. பகிர்ந்த துன்பம் பாதியாகிறது. பகிர்ந்த இன்பம் இரட்டிப்பாகிறது.

**நட்பு:** தானும் தவறு செய்யாமல்,நண்பர் செய்யும் தவறை சுட்டிக்காட்டி வரும் துன்பத்தை தடுத்து எதிர்ப்பதே நட்பு.

**நல்லது கெட்டது :** நல்லது அல்லது கெட்டது என்று எதுவும் கிடையாது. ஆனால் அவ்வாறு சிந்திப்பதுதான் ஒன்றை நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ ஆக்குகிறது.

## நல்லவை பத்து

1. தினமும் ஒருமணி நேரமாவது டி.வி. செல்போனை அணைத்து விட்டுகுடும்பத்துடன் நேரத்தைச் செலவிடுங்கள். உறவுகள் வலுப்பட இது உதவும்.
2. தினமும் காலையில் பத்து நிமிடமாவது மொட்டை மாடியிலோ,வீட்டுத் தோட்டத்திலோ உலாவுங்கள். இயற்கை யோடு கலப்பது டென்ஷனைக் குறைக்கும்.காலை வெளிச்சம் உடலுக்கும் நல்லது.
3. தினமும் ஒருவரையாவது பாராட்டுங்கள். மற்றவர்களை நாம் பாராட்டினால் தான் நம்மையும் மற்றவர்கள் பாராட்டுவார்கள்.
4. நண்பர்களை மாதம் ஒருமுறையாவது சந்தியுங்கள்.உங்கள் இளமைக்காலத்தை அது ஞாபகமூட்டும்.
5. முடிந்தவரை வீட்டுக்கு அருகில் உள்ள மார்க்கெட் , கோயில் மற்றும் பிற இடங்களுக்கு நடந்து செல்லுங்கள். இது உங்கள் பர்ஸ்க்கும் உடலுக்கும் நல்லது.
6. நீங்கள் எத்தனை மணிக்கு எழவேண்டுமோ அதற்கு 10நிமிடம் முன்னதாக அலாரத்தை செட்செய்யுங்கள். அந்த பத்து நிமிடத்தில் ஆழ்ந்து மூச்சுவிட்டு ரிலாக்ஸ் செய்துகொள்ளுங்கள்.
7. சாப்பாட்டுக்கு முன் சிறிது பழங்களைச் சாப்பிடுங்கள். இது உங்கள் பசியைக் குறைத்து நீங்கள் அதிக கலோரிகள் சாப்பிடுவதைத் தவிர்க்கும்.
8. கோபம் வரும்போது மூச்சை நன்றாக ஆழ்ந்து இழுத்து விடுங்கள். கோபம் பறந்து மனம் சாந்தமாகும்.
9. எல்லோரிடனும் நட்பாக இருங்கள்.ஒருவர்மீது கோப்பபடுவதால் எதுவும் நடந்துவிடாது.
10. வாரத்துக்கு ஒரு முறையாவது நல்ல இசையை கேளுங்கள். நல்ல புத்தகங்களைப் படியுங்கள். மனதுக்கு இதமாய் இருங்கள்.

## பத்தரை மாற்றுத் தங்கம் என்பது என்ன?

24 காரட் தங்கத்தைத் தான் பத்தரை மாற்றுத் தங்கம் என்கின்றார்கள். 24 காரட் தங்கத்தில் ஆபரணங்கள் செய்வதில்லை. மாற்று உலோகம் கலந்தால்தான் தங்கத்துக்கு வலிவு, சிறப்பு என்பதாக நம்புகின்றனர்.

22காரட் தங்கத்தில் வெள்ளி, செம்பு, துத்தநாகம் என மூன்று உலோகங்கள் சேர்க்கப் படுகின்றன. தங்கம் 91.70 சதவிகிதமும், வெள்ளி 5 சதவிகிதமும், துத்தநாகம் 1.30 சதவிகிதமும் உள்ளன.

18 காரட் தங்கத்தில் தங்கம் 75 சதவிகிதமும், வெள்ளி 15 சதவிகிதம், செம்பு 10 சதவிகிதம் என இரண்டு உலோகங்கள் மட்டுமே இருக்கின்றன.

14 காரட் தங்கத்தில் தங்கம் 58.30 சதவிகிதமும், வெள்ளி 30 சதவிகிதம், செம்பு 11.70 சதவிகிதம் என இரண்டு உலோகங்கள் மட்டுமே இருக்கின்றன.


9 காரட் தங்கத்தில் வெள்ளி 42.5 சதவிகிதமும், செம்பு 20 சதவிகிதமும் கலக்கப்பட்டிருக்கும். இதில் சிறிதளவு மட்டும் 10 காரட் தங்கத்தில் வேறுபட்டிருக்கும்.


பெரும்பாலும் 22 காரட் தங்கத்தில்தான் விதவிதமான ஆபரணங்கள் செய்யப்படுகின்றன. தங்கத்தில் உற்பத்தி குறைவாக உள்ளபோதும்,தேவை அதிகம் உள்ள நிலையில்தான் 8, 9, 10, 11, 12, 14 காரட் தங்கத்தில் ஆபரணங்கள் செய்யப்படுகின்றன. என்றாலும் நேபாள நாட்டினர் 24 காரட் தங்கத்தை ஆபரணமாகவும், இந்திய நாட்டினர் 22 காரட் தங்கத்தை ஆபரணமாகவும், தாய்லாந்து நாட்டினர் 23 காரட் தங்கத்தை ஆபரணமாகவும், அரேபிய நாட்டினர் 21 காரட் தங்கத்தை ஆபரணமாகவும், ஐரோப்பிய அமெரிக்க நாட்டினர் 18 காரட் தங்கத்தை ஆபரணமாகவும் விரும்பி அணிகின்றனர்.

**மூளைக்கு வேலை விடை**

4 மரக்கன்றுகள்

5 வரிசைகளில்





**கடி ஜோக்ஸ் விடைகள்**

1. அதுக்குக் கால் கிடையாது.
2. பகல்
3. பின் (pin) ஒடிஞ்சுடுமே.
4. மழைபெய்யவில்லை
5. ஆண்மயில் முட்டையிடாது
6. மெட்ரோ ரெயிலில் புகை வராது
7. கோவில் நம்மக்கிட்ட வராது, அதனால.
8. அவனுக்கு காதுகேட்குமே

# மணமகள் / மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி M. சௌமியா |
| படிப்பு | M.C.A., |
| வேலை | Xseed Company, Software Engineer,<br>(Work from home) Rs. 6.6 Lakhs/PA |
| பிறந்த தேதி | 03.10.1999 |
| உயரம் | 170 cm |
| நட்சத்திரம் | பூசம் |
| கோத்திரம் | விளந்துட |
| பூர்வீகம் | இலையூர் (குடவாசல்) |
| தகப்பனார் | J. முரளிதரன்<br>Supdt. (Rtd.) TNCSC |
| தாயார் | M. இராதா Home Maker<br>(ஹரிஹரன் கூடல், அரசலங்குடி) |
| முகவரி | 10/5, சிவன் கோவில் தெரு, அகர ஒகை,<br>குடவாசல் (PO), திருவாரூர் (Dt.) - 612 601.<br>Cell : 94862 77662, 94866 14771 |
| விருப்பம் | IT பணியிலுள்ள ஏற்ற வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் கா. வருண் நேரு |
| படிப்பு | B.Tech (IT) |
| வேலை | Specialist - Software Engineering<br>L T I  Mindtree, Chennai<br>Rs. 12 Lakhs / PA |
| பிறந்த தேதி | 22.11.1986 |
| உயரம் | 166 cm |
| நட்சத்திரம் | பூசம் |
| கோத்திரம் | எரவுட |
| பூர்வீகம் | இறையூர் (பெண்ணாடம்) |
| தகப்பனார் | மு. கார்த்திகேயன் |
| தாயார் | கா. தனலட்சுமி<br>(செந்துறை) |
| முகவரி | 174/2, கொத்தட்டை ரோடு,<br>இறையூர் – 606 111.<br>கடலூர் மாவட்டம்<br>Cell : 98844 91678<br>E-mail : dhanamkarthi76@gmail.com |



| | |
|---|---|
| பெயர் | செல்வி A. Jaisre |
| படிப்பு | B.E. (CSE) |
| வேலை | Software Engineer,<br>Rs. 5 Lakhs / PA |
| பிறந்த தேதி | 23.09.1996 |
| உயரம் | 5' - 4" |
| நட்சத்திரம் | திருவோணம் |
| கோத்திரம் | சேக்கிழார் |
| பூர்வீகம் | ஈரோடு |
| தகப்பனார் | B. அம்பாசேகர்<br>(Manager - Transport Company) |
| தாயார் | A. யோகாம்பாள் (இல்லத்தரசி)<br>(திருவாவடுதுறை–பெருந்தோட்டம்) |
| முகவரி | 75/9, ஸ்ரீஅபி கார்டன்,<br>குமிளம் பரப்பு, சித்தோடு PO,<br>ஈரோடு (DT) – 638 102.<br>Cell : 90803 77981, 94881 51451 |
| விருப்பம் | சமபடிப்பு, நல்ல குணமுடைய நல்ல பணியில் உள்ள வரன். |



NMP
CHARITABLE TRUST
giving is living

ஒரு வருட பலனுக்கு நெல்லை நடுங்கள் !
முப்பது வருட பலனுக்கு மரங்களை நடுங்கள் !!
நூற்றாண்டு பலனுக்கு கல்வியை கொடுங்கள் !!!

# N.M.P அறக்கட்டளை

## கல்வி உதவித்தொகை வழங்கும் விழா

### இயற்கை விவசாய உணவு திருவிழா




என்றும் உங்கள் ஆதரவுடன்

**கஸ்தூரிபாய்®**
**கம்பெனி – NMP ரெடிமேட்ஸ்**

Since 1943, Chidambaram.

32,33,34 மேல ரத வீதி, சிதம்பரம்.
போன்: 04144 – 222 228 | cc@kasthuribaicompany.com

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.




சிதம்பரம் கஸ்தூரிபாய் கம்பெனி NMP ரெடிமேட்ஸ் & பலகாரம் . காம் NMP அறக்கட்டளை கல்வி உதவித்தொகை வழங்கும் விழா 25.02.24 அன்று பலகாரம். காம், ஆனந்தலஹரி ஹாலில் நடைபெற்றது. விழாவிற்கு சிதம்பரம் சார் ஆட்சியர் திரு ராஷ்மிராணி IAS, சிறப்பு விருந்தினராகவும், அறக்கட்டளை தலைவர் திரு. வி. முத்துக்குமார் மற்றும் திருமதி. ஸ்ரீவித்யா முத்துக்குமார் அனைவரையும் வரவேற்று, உதவி தொகைகள் வழங்கப்பெற்று விழாவை சிறப்பித்தனர்.

மற்றும் 23.12.23 அன்று தேசிய விவசாயிகள் தினம், விவசாய உணவுத் திருவிழா கண்காட்சி அமைக்கப்பட்டது.

மேலும் 13.12.2023 அன்று அறக்கட்டளை மூலம் சமூக சேவகர் திரு எஸ். சங்கரராமன் அவர்களின் சேவையை பாராட்டி, அமர் சேவா சங்கம், ஆயக்குடி, தென்காசி என்கிற அமைப்பிற்கு நிதி உதவி வழங்கி கௌரவிக்கப்பட்டது.

KASTHURIBAI® Company - NMP Readymades
Since 1943. Chidambaram.
Palagaram.com® HIGH CLASS PURE VEG RESTAURANT
156, West car Street, Chidambaram.
PAKSHANAM.com sweets & savouries
The taste of tradition

# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் K. அரவிந்த் |
| படிப்பு | B.E., (EEE) |
| வேலை | Design Engineer, Ground Fos Pumps<br>துரைப்பாக்கம், சென்னை<br>Rs. 40,000/PM |
| வயது | 31.08.1994 |
| உயரம் | 171 cm |
| நட்சத்திரம் | திருவாதிரை |
| கோத்திரம் | காளிங்கராய |
| பூர்வீகம் | நெய்தவாசல் |
| தகப்பனார் | K. குமார்,<br>பழனியப்பா ரைஸ் மில்,<br>திருவெண்காடு |
| தாயார் | K. ரமாதேவி இல்லத்தரசி<br>(கருவாழக்கரை) |
| முகவரி | மேலத் தெரு,<br>நெய்தவாசல் (PO), பூம்புகார்,<br>சீர்காழி T.K. - 609 105.<br>மயிலாடுதுறை மாவட்டம்.<br>Cell : 95149 72767 / 90039 26091 |
| விருப்பம் | படித்த பணியில் உள்ள பெண் |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் விக்னேஷ்வரன் |
| படிப்பு | B.E. (EEE) |
| வேலை | Engineer, Adecco India Private Limited<br>(Client Apple) Chennai<br>Rs. 8,50,000/PA |
| வயது | 04.10.1994 |
| உயரம் | 5' - 6" |
| நட்சத்திரம் | உத்திரம் பாதம் 4 |
| கோத்திரம் | மீனவராய |
| தகப்பனார் | சேகர் |
| தாயார் | சத்தியகுமாரி |
| முகவரி | 1/87, மேற்கு தெரு,<br>மேலப்பழங்கூர்,<br>கள்ளக்குறிச்சி DT – 605 205.<br>Cell : 99438 41992 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் இரா. ஞானபிரகாசம் |
| படிப்பு | B.Tech (Computer Science) |
| வேலை | Natwest Group, Chennai<br>Rs. 25,00,000/PA |
| வயது | 15.05.1985 |
| உயரம் | 5' - 10" |
| நட்சத்திரம் | உத்திரட்டாதி |
| கோத்திரம் | ஒகுளூட |
| பூர்வீகம் | எஸ்.நரையூர், வேப்பூர் வட்டம்,<br>கடலூர் மாவட்டம் |
| தகப்பனார் | ஆ.இரத்தினசபாபதி<br>Joint Director of Agriculture (Retd.)<br>Villupuram |
| தாயார் | கோ தமிழரசி B.T. Teacher (Retd.)<br>Nainarpalayam<br>(செந்துறை வட்டம், அரியலூர் மாவட்டம்) |
| முகவரி | 264, வடக்கு தெரு,<br>எஸ்.நரையூர் அஞ்சல், வேப்பூர் வட்டம்<br>கடலூர் மாவட்டம் – 606 301.<br>Cell : 97900 95725 / 94432 23983<br>E-mail: prakashgnana85@outlook.com |
| விருப்பம் | புரிந்து, அனுசரித்து குடும்பத்தை நடத்தும் பெண். |
| குறிப்பு | சட்டப்படி விவாகரத்தானவர் |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் தரணிகுமார் .ஆர் .ஏ |
| படிப்பு | B.E. (Computer Science & Engineering) |
| வேலை | Lead Software Engineer,<br>Freshworks, Chennai, Good Package |
| வயது | 19.11.1996 |
| நட்சத்திரம் | பூரட்டாதி |
| கோத்திரம் | பருவுட |
| பூர்வீகம் | திருப்புங்கூர் |
| தகப்பனார் | அன்பழகன் சோ,<br>(ஓய்வு) இரயில்வே |
| தாயார் | இந்துமதி அ, (மோட்டத்தூர்) |
| முகவரி | 45ஏ, விநாயகர் காலனி,<br>தெற்கு வீதி,<br>திருவிழந்தூர்,<br>மயிலாடுதுறை – 609 001.<br>Cell : 99425 22345 / 96593 31212 |






## மயிலாடுதுறை நகர கார்காத்த வேளாளர் சங்கம் முகவரி கையேடு வெளியீட்டு விழா (16-2-2024)

மயிலாடுதுறை நகர சங்க உறுப்பினர்களின் முகவரிகள் அடங்கிய கையேட்டினைத் தயாரிக்கும் பணி முடிவடைய உள்ள நிலையில் அதனை நமது தருமபுரம் ஆதீனம் அவர்களின் திருக்கரங்களால் வெளியிட வேண்டும் என நமது செயற்குழு முடிவு செய்தது. தருமபுரம் ஆதீனம் 27–வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குத்தாலம் கட்டளை மடத்தில் எழுந்தருளியிருந்த போது நமது முகவரி கையேடு வெளியீட்டு அழைப்பிதழை அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்தோம்.

நமது சங்கக் கட்டடத்தில் 16–2–2024 மாலை 5 மணியளவில் நடைபெற்ற முகவரி கையேடு வெளியீட்டு விழா அழைப்பிதழை கம்பன் அச்சகம் திரு. T. பன்னீர்செல்வம் கட்டணமின்றி அச்சிட்டு வழங்கினார்கள். விழா நிகழ்வு பற்றி Whats app ல் வீடியோ மூலம் முன்னாள் இளைஞரணி செயலாளர் திரு. A. விஜய்பாபு வெளியிட்டார்கள். அழைப்பிதழ் வழங்கி திருவாளர்கள் P. சுவாமிநாதன், G. சிங்காரவேலு, T. பிரபாகரன், T. பன்னீர்செல்வம், B. சுவாமிநாதன், R. ஆனந்தன், P. சபாநாயகம், G. வரதராஜன் மற்றும் மாப்படுகை M. முருகானந்தம் ஆகியோர் சுழன்று செயல்பட்டனர். கட்டட நுழைவு வாயிலில் வாழை மரம், முன் புறம் அலங்காரப் பந்தல், Focus Light, சிவப்புக் கம்பள விரிப்பு, ஒலி வாங்கி, ஒலி பெருக்கி, ஜெனரேட்டர் மற்றும் குரு மகா சன்னிதானத்தை வரவேற்று பேனர் போன்றவைகளை திரு. G.N. குருநாதன் (குரு டெக்கரேஷன்) அமைத்துக் கொடுத்தார்கள். பந்தலில், விழா மேடையில் பேனர்களை வைத்து திரு. S. வாஞ்சிநாதன், திரு. A. செந்தில்வேல் (அன்னமித்ரா & அன்னமித்ரா யுவா), திரு. T. பன்னீர்செல்வம் & திரு. T. ரவிக்குமார் (கம்பன் அச்சகம்), மயூர் பிரிண்டர்ஸ் சென்னை, ஸ்ரீ குருசாமி அறக்கட்டளை, (முளப்பாக்கம்), திரு. B. சுவாமிநாதன் & திருமதி. தமிழ்ச்செல்வி சுவாமிநாதன், திரு. S. தியாகராஜன் & திருமதி. மகாலெட்சுமி தியாகராஜன் (மகா ஸ்டால்) ஆகியோர் விழாவை மெருகூட்டினார்கள். விழாவிற்கு வந்தவர்களை மகளிரணியினர் சந்தனம், பனங்கற்கண்டு, ரோஜா பூ கொடுத்து வரவேற்றனர்.

விருந்தினர்களுக்கு சிற்றுண்டி, காபியை தங்கள் பங்களிப்பாக திரு. C. செந்தில்வேல் (அன்னமித்ரா), திரு. S. சத்தியன் (மணி விழா) வழங்கினார்கள். அதற்கான பேப்பர் தட்டுகளை திரு. S. கலியபெருமாள் (K.P. ஸ்டோர்ஸ்) அளித்தார்கள். தண்ணீர் பாட்டில்களை திரு. L. முத்துக்குமார் (வராகா வாட்டர்) வழங்கினார்கள். தருமபுரம் பள்ளிச்செயலர் திரு. M. திருநாவுக்கரசு, தருமபுரம் ஆதீனம் கட்டளைத்தம்பிரான் அவர்களுடன் வந்து, விழாவிற்கு

வந்தவர்களுக்கு துண்டும், விபூதி பிரசாதமும் அளிக்க ஏற்பாடு செய்தார்கள். முகவரி கையேடு அழைப்பிதழ் அளித்த போது விழாவிற்கு திரு. D. சுப்பிரமணியன், ஆடிட்டர் திரு. M. கார்த்திகேயன், திரு. G. வரதராஜன் மற்றும் கேசிங்கன் திரு. M. இராஜேந்திரன் நன்கொடையளித்தார்கள். விழா மாலை 5 மணிக்கு நகர சங்கத்தலைவர் திரு. S. அன்பழகன், அவர்கள் தலைமையில் தொடங்கியது. திரு. R. செல்வகுமார் வரவேற்புரையும், திரு. G. திருநாவுக்கரசு சிறப்புரையும், திரு. T. சுவாமிநாதன் முகவரி கையேடு பற்றி அறிமுக உரையும் நிகழ்த்தினார்கள். விழா நிகழ்வுகளை மாப்படுகை திரு. R. கார்த்திகேயன் படம் பிடித்தார்கள். மாலை 5.30 மணியளவில் குருமகா சன்னிதானம் அவர்கள் நமது கட்டட பந்தல் முகப்பு வாயிலுக்கு எழுந்தருளினார்கள். மங்கல இசை முழங்க Ln. திரு. பாலச்சந்திர சிவாச்சாரியார் குருமணிகளுக்கு பூர்ண கும்ப மரியாதை செய்தார்கள். மங்கள இசை, சிவாச்சாரியார் இருவரையும் வள்ளலார் கோயில் கண்காணிப்பாளர் திரு. K. அகோரம் ஏற்பாடு செய்தார்கள். "திருப்பணிச் செம்மல்" எழுந்தருளிய உடன் பூப்பந்தல் குடை பிடித்து திரு. S. வாஞ்சிநாதன், திரு. R. ராஜா, திரு. B. சுவாமிநாதன், திரு. N. முத்துக்குமார் விழா மேடைக்கு அழைத்து வந்தார்கள். மகளிரணியினர் "செப்பேடு கண்ட நாயகன்" திருப்பாதங்களில் மலர்களைத் தூவி சிவப்புக் கம்பள வரவேற்பு அளித்தார்கள். குருமகா சன்னிதானம் மேடையில் அமர்ந்ததும் திரு. R. ராஜா அவர்களால் அளிக்கப்பட்ட "சாதரா பட்டு" சால்வையை திரு. R. பாலசுப்ரமணியன், சன்னிதானம் அவர்களுக்கு அணிவித்தார்கள். பெரிய கடை வீதி திரு. S. முருகேசன் அளித்த ஆளுயுர ரோஜா பூ மாலையை திரு. P. சுவாமிநாதன், திரு. T. பிரபாகரன், திரு. S. வாஞ்சிநாதன், திரு. R. ராஜா இணைந்து குருமணிகளுக்கு அணிவித்தார்கள். திருமதி. கார்குழலி ஞானசேகரன், திருமதி. சித்ரா சிவகுமார் இறைவணக்கப்பாடல்களை பக்தி மணங்கமழப் பாடினார்கள்.

குருமகா சன்னிதானம் முகவரி கையேட்டை வெளியிட்டு 1978–ம் ஆண்டு நமது சங்கம் துவக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை நமது சமுதாயத்திற்குப் பணி செய்து வருகின்ற சிறப்பு அழைப்பாளர்கள் திருவாளர்கள் M. சுந்தரமகாலிங்கம் (ஆடிட்டர்), R. சிவபுண்ணியம் (வழக்கறிஞர்), D. சுப்பிரமணியன், M. ராமச்சந்திரன், G. சிங்காரவேலு, V. தாயுமானவன், T. பிரபாகரன் (1978 சிறப்பு மலர் உறுப்பினர்) ஆகியோருக்கு துண்டு அணிவித்து, ஆசி வழங்கி, முகவரி கையேட்டை அளித்தார்கள். முகவரி கையேடு தயாரிப்பில் பெரும் பங்காற்றிய கம்பன் அச்சகம் திரு. T. பன்னீர்செல்வம், திரு. P. சுவாமிநாதன் அவர்களுக்கும் ஆசி வழங்கி, துண்டு அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி முகவரி கையேட்டையும் வழங்கினார்கள். சிறப்பு அழைப்பாளர்கள் பட்டியலில் உள்ள திரு. R. தம்பையா (வழக்கறிஞர்) திரு. N. விசுவநாதன் இருவரும் விழாவிற்கு வர இயலவில்லை. சிறப்பு அழைப்பாளர்களுக்கு அணிவிக்க துண்டினை திரு. S. மதியழகன் திரு. S. செந்தில்குமார் (செந்தில் பைப்ஸ்) அளித்தார்கள். திருவாளர்கள் M. சத்தியபால், R. செல்வகுமார், R. பாலசுப்பிரமணியன் D. பாலசுப்பிரமணியன், G. முருகையன், S. வாஞ்சிநாதன், R. ராஜா, P. சபாநாயகம், T. ரவிக்குமார், B. சுவாமிநாதன் மற்றும் நகர சங்கப் பொறுப்பாளர்களுக்கும் ஆசி வழங்கி துண்டு அணிவித்து, கையேட்டை வழங்கினார்கள். 10–3–2024–ல் கொண்டாடப்படவுள்ள 'உலக மகளிர் தினம் அழைப்பிதழை குருமகா சன்னிதானம் வெளியிட மகளிரணியினர் பெற்றுக்கொண்டனர். முகவரி கையேடு தயாரிப்பு தொடங்கி, வெளியீடு வரை நேரம், காலம் பார்க்காமல் பணிபுரிந்த முன்னாள், இந்நாள் பொறுப்பாளர்கள் கார்குல சொந்தங்கள், கட்டணமில்லா கையேடாக வெளிவர கலர் படங்கள், வாழ்த்துக்கள் அளித்தநமது உறவுகள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி! விழா குறிப்பிட்ட நேரத்தில் துவங்கி சிறப்பாக நடைபெற உதவிய தருமபுரம் ஆதீனத்தின் நம்பின, தலைமைப் பொது மேலாளர் திரு. B. ரெங்கராஜன், பொதுமேலாளர் திரு. C. மணி, தருமபுரம் குருஞானசம்பந்தர் மேல்நிலைப்பள்ளிச் செயலர் முனைவர் திரு. M. திருநாவுக்கரசு ஆகியோருக்கும், விழா சிறக்க பொருளாக, பணமாக, உழைப்பாக அளித்த அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைச் சங்கத்தின் சார்பாக திரு. G. முருகையன் தெரிவித்தார்கள் விழா இனிதே நிறைவடைந்தது.

18–02–24 ஞாயிறு காலை 10 மணிக்கு சங்கக் கட்டிடத்தில் மாநில செயற்குழு நடைபெற்றது. தேநீர், மதிய உணவு வழங்கி சிறப்பிக்கப்பட்டனர். வருகை புரிந்த திருவாளர்கள் மாநிலத் தலைவர் K.K.R. சுரேஷ் (எ) இராஜ சுந்தரம், பொதுச் செயலர் M. பாலசுப்பிரமணியன், பொருளர் G. இராமநாதன் அமைப்புச் செயலர் கைலை சண்முகம், தலைமைச் செயலக செயலர் குமார் ஆகியோருக்கு கைத்தறி ஆடை அணிவித்து சிறப்பிக்கப்பட்டனர்.

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| B 1/4 செல்வி **S. தரண்யா**<br>பூராடம்<br>களத்துட<br>விருப்பம் : சமபடிப்பு மற்றும் நல்ல குணமுள்ள நல்ல பணியில் உள்ள வரன் (சென்னை / பெங்களூர்) | 12.06.98<br>154 cm | B.Tech. (IT) | Accenture<br>Chennai<br>Rs. 6.5 Lakhs/PA | திருமதி. S. சுந்தரி,<br>4/9, Seethapathi Street,<br>Golden Temple Flats, F2,<br>Chitlapakkam,<br>Chennai - 600 064.<br>Cell : 98405 31013 |
| B 2/4 செல்வி **R. பானுபிரியா**<br>கேட்டை 3ம் பாதம்<br>எரவுட<br>பூர்வீகம் : முல்லையூர் (பெண்ணாடம்)<br>விருப்பம் : சமபணியில் உள்ள பொருத்தமான வரன் | 21.11.98<br>165 cm | B.E. (ECE) | Sr. Software Engineer<br>Fresh Works Technologies,<br>Chennai | திரு. T. Ramesh,<br>D.No. 11, SNR Flats,<br>Viswanathapuram Main Road,<br>Kodambakkam,<br>Chennai - 600 024.<br>Cell : 94445 56972, 90801 87596 |
| B 3/4 செல்வி<br>**Dr. V. Priyadharshini**<br>Uthradam 4th Patham<br>Koodaluda<br>பூர்வீகம் : MA. Melvanniyur, Chidambaram<br>விருப்பம் : Middle / Upper Middle Class Carring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor. | Jan. 1995<br>5' - 2" | Internal Medicine M.D.,<br>. | Sr. Resident Doctor at a Private Medical College, Chennai<br>Rs. 12-18 Lakhs/PA | திரு. J. Venugopalan,<br>B-703, Solitaire Appartments,<br>Mount Poonamallee High Road,<br>Porur, Chennai - 600 116<br>Cell : 99404 77263, 98949 28283<br>E-mail : venugopalan_i@yahoo.com |
| B 4/4 செல்வி **R. ஸ்ரீரச்சனா**<br>ரேவதி<br>நாரணகுடை<br>பூர்வீகம் : மூவலூர்<br>விருப்பம் : படித்து வேலையில் உள்ள, வெளிநாடு செல்ல விருப்பமுள்ள வரன். | 11.08.90<br>173 cm | B.Tech.,<br>M.Sc. IT / Computer<br>. | Quality Assurance Engineer, Intutive Surgical,<br>Sunnyvale,<br>California USA<br>Visa H1K<br>I-140 Approved | திரு. A. ராஜசேகரன்,<br>B3, Aadarsh Apts.,<br>Old No. 567, New No. 918,<br>Poonamallee High Road,<br>Arumbakkam,<br>Chennai - 600 106.<br>Cell : 94425 44989 |
| B 5/4 செல்வி **P. கிரிஜா**<br>கேட்டை<br>வேளா<br>பூர்வீகம் : சத்தியவாடி<br>விருப்பம் : நல்ல பழக்கம், நல்ல வேலை, நல்ல குடும்பத்திலுள்ள வரன். | 16.05.95<br>165 cm | M.C.A., | HDFC in Chennai | திருமதி. P. விருத்தாம்பிகை,<br>6/11, ஜெயில் தெரு,<br>விருத்தாசலம் – 606 001,<br>Cell : 81226 86074, 84384 06302 |
| B 6/4 செல்வி **R. அனுக்கிருபா**<br>மகம்<br>மருங்குட<br>பூர்வீகம் : ஆக்கூர்<br>விருப்பம் : சமபடிப்பு நல்ல வேலையில் உள்ள வரன் | 10.05.92<br>169 cm | B.Com.,<br>MBA., | TCS, Chennai | திரு. A. ராஜாராமன்,<br>7/4, கல்லூரி மேற்கு சாலை,<br>அரும்பாக்கம், சென்னை–600 106.<br>Cell : 97908 80266, 93809 97467<br>Phone : 044 – 2363 8205<br>E-mail : rajaramchennai2010@gmail.com |
| B 7/4 செல்வி **R. சுகன்யா**<br>ரேவதி<br>முதனுட<br>பூர்வீகம் : பெரியகோட்டகம் – காட்டுமன்னார்கோவில்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள பணியில் உள்ள வரன் | 04.09.93<br>5' - 4" | B.E. (CSE) | | திரு. K. இராஜேந்திரன்,<br>பெரிய கோட்டகம்,<br>செட்டித்தாங்கள் (அஞ்சல்),<br>கடலூர் மாவட்டம் – 608 304.<br>Cell : 90944 14719, 99521 55584 |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 8/4** செல்வி **பா. சிவப்பிரியா**<br>திருவாதிரை<br>செம்பதரிய<br>பூர்வீகம் : கழுக்காணிமுட்டம் (மயிலாடுதுறை) | **8.5.2000**<br>165 cm | B.E. (EEE)<br>MBA | TCS, Chennai<br>Rs. 5 Lakhs/PA | திரு. K. பாலகுமார்,<br>102, 3வது குறுக்குத் தெரு,<br>ஒர்கர்ஸ் எஸ்டேட், நீலாங்கரை,<br>சென்னை – 600 115.<br>Cell : **98410 62179, 94440 51466** |
| **B 9/4** செல்வி **M. தனலட்சுமி**<br>உத்திரம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சமபடிப்பு | **07.05.98**<br>154 cm | B.Tech (CS)<br>. | Software Professional<br>EPSILON<br>Bangalore<br>Rs. 10 Lakhs/PA | திரு. K. மணிகண்டன்,<br>G1, Ashok Manor, Ruby Builders,<br>5/2, Kalamegam Street,<br>East Tambaram, Chennai - 600 059.<br>Cell : **94447 11045, 99416 20355** |
| **B 10/4** செல்வி **மா. பார்கவி**<br>ரோகிணி<br>கொங்கராயன்<br>பூர்வீகம் : திருப்பங்கூர் (சீர்காழி)<br>விருப்பம் : MBBS., M.D., | **29.10.96**<br>153 cm | M.B.B.S.,<br>M.D.<br>(Anaesthesia) | CGHS &<br>Railway (Selected) | திரு. வெ. மாணிக்கவேலு,<br>52F, பஜனமடத் தெற்குத் தெரு,<br>குடவாசல்,<br>திருவாரூர் மாவட்டம் – 612 601.<br>Cell : **9488 117102, 94437 09804** |
| **B 11/4** செல்வி **R. சுபஸ்ரீ**<br>அஸ்வினி<br>கொங்கராய<br>பூர்வீகம் : பெண்ணாடம் | **09.09.98**<br>160 cm | M.E.<br>Software Engineer | Asst. Professor (CSE) Pvt. Engg. College,<br>Rs. 5.5 Lakhs/PA | திரு. P.G. இராமமூர்த்தி,<br>55/18, வள்ளலார் தெரு,<br>பெண்ணாடம்,<br>கடலூர் மாவட்டம் – 606 105.<br>Cell : **99761 77910** |
| **B 12/4** செல்வி **R. ஜனனி**<br>உத்திராடம் 4ம் பாதம்<br>அங்காளுட<br>பூர்வீகம் : மயிலாடுதுறை | **20.6.2000**<br>175 cm | B.E. (IT) | விப்ரோ–<br>பெங்களூரு | திரு. G. இரவி சங்கர்,<br>எண். 4273, 17வது மெயின்,<br>7வது கிராஸ்,<br>விஜய நகர் 2வது குறுக்குத் தெரு,<br>கே.டி.சர்கிள், மைசூர் – 17.<br>Cell : **90368 60029, 9900 268450** |
| **B 13/4** செல்வி **V. அக்ஷயா**<br>ஆயில்யம்<br>சேஷதரிய<br>பூர்வீகம் : நந்தீஸ்வரமங்கலம்<br>விருப்பம் : சமபடிப்புடன் பணியில் உள்ள வரன். | **11.08.99**<br>160 cm | B.Tech. | Healthcare<br>Chennai<br>Rs. 25,000/-PM | திரு. வேல்முருகன்,<br>நந்தீஸ்வரமங்கலம் & PO,<br>சேத்தியாதோப்பு VIA,<br>ஸ்ரீமுஷ்ணம் TK,<br>Cell : **93616 06299, 99762 52642** |
| **B 14/4** செல்வி **சே. சண்முகசுந்தரி**<br>பூரம்<br>கடம்புடை<br>பூர்வீகம் : நெல்லை<br>விருப்பம் : IT பணி | **18.04.97**<br>169 cm | B.E. (CSE) | Software Engineer<br>Rs. 6.5 Lakhs/PA | திரு. ச. சேது சங்கரநாராயணன்<br>No. 1968, TNHB,<br>Ayappakkam, Chennai - 600 077.<br>Cell : **94444 78816,87545 86385** |
| **B 15/4** செல்வி **S. சத்யபிரியா**<br>திருவாதிரை<br>சாத்தனுட<br>பூர்வீகம் : மா.உடையூர்<br>விருப்பம் : வங்கி பணி (அ) அரசு பணியில் உள்ள வரன். | **25.03.99**<br>5' - 4" | M.Sc.<br>(Computer Science) | சௌத் இந்தியன் வங்கி<br>பட்டுக்கோட்டை<br>Rs. 5,40,000/-PA | திரு. S. சுந்தரேசன்,<br>நெ. 16, கணேஷ் நகர்,<br>கோபிநாத பெருமாள் கோவில் தெரு,<br>பட்டீஸ்வரம்,<br>கும்பகோணம் – 612 703.<br>Cell : **98413 21786, 98410 75548** |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/4** செல்வன் **S. காளிச்சரன்**<br>பூரம் – 4ம் பாதம்<br>பில்லாலுட<br>பூர்வீகம் : திருமாந்துறை, கும்பகோணம்<br>விருப்பம் : சமபடிப்பு/பணியில் உள்ள வரன் | **12.09.96**<br>177 cm | B.Tech. (IT) | Reliance JIO<br>Bangalore<br>Rs. 12 Lakhs/PA | திரு. G. சுவாமிநாதன்,<br>7/1744, முருகையா நகர்,<br>புளியம்பேட்டை,<br>மேலஅம்மாசத்திரம் (POST),<br>திருவிடைமருதூர் T.K.,<br>கும்பகோணம் – 612 103.<br>Cell : **99443 05331, 96006 32510** |
| **G 2/4** செல்வன் **K. மணிவேல்**<br>கேட்டை<br>முதனுட<br>பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்)<br>விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்/<br>பணிக்கு செல்ல விருப்பமுள்ள வரன் | **15.02.93**<br>6' - 0" | B.E.,<br>(EEE), | Jr. Asst.<br>Commercial Tax<br>Rs 36,000/PM | திரு. T. கேசவன்,<br>5/234-2, நியூ அம்பேத்கர் நகர்,<br>ஜாகீர்ரெட்டிப்பட்டி,<br>சேலம் – 636 302.<br>Cell : **94422 59692** |
| **G 3/4** செல்வன் **இரா. மணிபாரதி**<br><br>தொழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் | **04.03.96**<br>168 cm | B.Sc., | MRF Ltd.,<br>Arakonam<br>Rs.6 Lakhs/PA | திரு. தி. இராஜாமணி,<br>540, கண்ணப்பா தெரு,<br>நசரத் பேட்டை, பூந்தமல்லி<br>சென்னை – 600 123.<br>Cell : **89399 91174, 98406 87849** |
| **G 4/4** செல்வன் **G. விக்னேஷ்**<br>பூரம்<br>பொன்னாருடை<br>பூர்வீகம் : மேலப்பாவூர் | **03.07.95** | B.E. (Computer Science)<br>CCNA (Global Certified)<br>MCSA | I.T. Executive<br>Go Colors<br>(Go Fashions India Ltd., Chennai)<br>Rs 3,36,000/PA | திரு. C. கணபதி,<br>10/41, ஜெயின் நகர்,<br>ஆறுமுகநேரி P.O.,<br>திருச்செந்தூர் T.K.,<br>தூத்துக்குடி Dt. – 628 202.<br>Cell : **94880 70503** |
| **G 5/4** செல்வன் **ப. ஸ்ரீராம்**<br>ஆயில்யம்<br>சாத்தனுட<br>பூர்வீகம் : வயலூர், பெரம்பலூர் மாவட்டம்<br>விருப்பம் : தகுந்த வரன் | **28.10.94**<br>165 cm | B.E. (CSC) | IT Analyst<br>TCS, Chennai<br>Rs. 40,000/PM | திருமதி. P. உமா,<br>P. இராமச்சந்திரன் (VAO ஓய்வு)<br>5-A/84C, ரோஸ் நகர்,<br>பெரம்பலூர் – 612 212.<br>Cell : **97874 84028,**<br>**97505 29615** (W) |
| **G 6/4** செல்வன்**L. பத்மநாபன்**<br>புனர்பூசம் –3ம் பாதம்<br>குழுவுட<br>பூர்வீகம் : TV புத்தூர் | **21.01.89**<br>5'-5" | MCA | Working as Web Developer in Private Company Puducherry<br>Rs. 9,00,000/PA | திரு. க. லோகநாதன்,<br>தங்கமணி கார்டன்,<br>விருத்தாசலம்,<br>கடலூர் மாவட்டம் – 606 001.<br>Cell : **99653 24644** |
| **G 7/4** செல்வன் **சு. பரணிதரன்**<br>பரணி<br>குணவிடையான<br>பூர்வீகம் : உட்கோட்டை<br>விருப்பம் : பொருத்தமான வரன் | **30.05.92**<br>170 cm | B.Sc. (CSC) | C.Mots Infotech<br>Pvt. Ltd., Chennai<br>Rs. 35,000/PM | திரு. வினோத்குமார்,<br>No. 5/190A, தளபதி நகர்,<br>ராமச்சந்திரா தெரு,<br>சிங்கபெருமாள் கோயில்,<br>செங்கல்பட்டு Dt. – 603 204.<br>Cell : **96886 77215, 99442 05334** |
| **G 8/4** செல்வன் **பா. ஆதித்யன்**<br>உத்திரட்டாதி – 4ம் பாதம்<br>பஞ்சதரிய<br>பூர்வீகம் : கொளுத்தூர்<br>விருப்பம் : சமபடிப்பு, வேலையில் உள்ள வரன் | **17.08.92**<br>5'-11" | B.E. (ECE) | Ramco Systems<br>Chennai<br>Rs. 14 Lakhs/PA | திரு. A. பாலசுப்ரமணியன்,<br>23A, கரையான் தோப்பு,<br>ராஜா தெரு, திருவிழந்தூர்,<br>மயிலாடுதுறை Dt. – 609 001.<br>Cell : **94873 32726, 94454 53251** |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/4** செல்வன் **E. பிரதீப்**<br>பரணி<br>மழுவதரிய<br>பூர்வீகம் : மயிலாடுதுறை<br>விருப்பம் : குணமுள்ள குடும்பப்பாங்கான பெண்<br>குறிப்பு : சட்டப்படி விவாகரத்தானவர், குழந்தை இல்லை | **22.09.86**<br>5' - 7" | B.E. (Mech) | Tech Lead,<br>L & T Technologies,<br>Mysore, Karnataka<br>Rs. 13 Lakhs/PA | திரு. S. இளங்கோ,<br>16, 8வது தெரு,<br>சங்கர் நகர், பம்மல்,<br>சென்னை – 600 075.<br>Cell : **73587 33686, 79041 77579** |
| **G 10/4** செல்வன் **K. விக்னேஷ்**<br>மூலம்<br>சேஷத்திரை<br>பூர்வீகம் : பூலாமேடு<br>விருப்பம் : குடும்பப்பாங்கான பெண். | **23.03.95**<br>180 cm | B.E. (EEE) | Online Service<br>& Photo Editing<br>Video Editing<br>Business | திரு. P.T. கண்ணன்,<br>வடக்கு தெரு,<br>பூலாமேடு & PO,<br>சிதம்பரம் T.K. – 608 302.<br>Cell : **98650 31959** |
| **G 11/4** செல்வன் **M. சதீஷ்குமார்**<br>உத்திரம் 2ம் பாதம்<br>தென்னவராயம்<br>பூர்வீகம் : பெத்தநாயக்கன்பாளையம் | **23.06.96** | DCE | Singapore,<br>Rs. 70,000/PM | திரு. A. முருகேசன்,<br>106, மேற்கு வெள்ளாளர் தெரு,<br>பெத்தநாயகன்பாளையம்,<br>சேலம் மாவட்டம் – 636 109.<br>Cell : **99768 30455, 93446 29776** |
| **G 12/4** செல்வன் **S. ராஜேஷ்**<br>சதயம்<br>திரமுட<br>பூர்வீகம் : வல்லம்<br>விருப்பம் : குடும்பத்திற்கு ஏற்ற வரன். | **29.07.91** | DEEE, | வருவாய் துறை<br>அரசு நிரந்தர<br>பணி<br>Rs. 20,000/PM | திரு. S. செல்வராஜ்,<br>அக்ரஹாரம், மாமாகுடி,<br>தரங்கம்பாடி வட்டம் – 609 301.<br>Cell : **94888 09941, 94446 32687** |
| **G 13/4** செல்வன் **பா. தினேஷ்ராஜ்**<br>அஸ்வினி<br>வில்வராயா<br>பூர்வீகம் : கருவாழக்கரை<br>விருப்பம் : குடும்பத்திற்கு ஏற்ற வரன். | **02.05.92**<br>176 cm | B.E. (Mech), | Maintenance<br>Engineer<br>Arni Engineering<br>Tech (P) Ltd.,<br>Chennai<br>Rs. 4.3 Lakhs/PA | திரு. கோ. பாஸ்கரன்,<br>1/64, தெற்கு வெள்ளாழத் தெரு,<br>கருவாழக்கரை (PO),<br>தரங்கம்பாடி (Tk),<br>மயிலாடுதுறை மாவட்டம்<br>Cell : **94437 03677, 63692 69113** |
| **G 14/4** செல்வன் **M. தினகரன்**<br>விசாகம் 2ம் பாதம்<br>குழுமுட<br>பூர்வீகம் : சிதம்பரம் | **08.12.96**<br>173 cm | B.Tech.<br>(EEE),<br>PGDSSM,<br>MBA., | Site Engineer<br>NLCIL - Neyveli<br>Rs. 6 Lakhs/PA | திரு. S. முத்துக்குமரன்,<br>14/74, காளியம்மன் கோயில் தெரு,<br>அண்ணாமலை நகர்,<br>சிதம்பரம் – 608 002.<br>Cell : **97880 83707** (W),<br>**97782 96965** |
| **G 15/4** செல்வன் **R. குருபிரசாத்**<br>அவிட்டம் 1ம் பாதம்<br>கடலுட<br>பூர்வீகம் : வாளூர் | **24.09.96**<br>180 cm | B.E.<br>(Computer<br>Science) | Software Engineer,<br>Inatech Software,<br>Rs.7.5 Lakhs/PA | திருமதி. R. ராஜேஸ்வரி,<br>ஆற்றங்கரைத் தெரு,<br>வாளூர், கீரனூர் Post,<br>நன்னிலம் TK.,<br>Cell : **98424 78018, 99700 34222** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| G 16/4 செல்வன் **S. ராம்பிள்ளை**<br>திருவாதிரை<br>காருடா<br>பூர்வீகம் : சென்னை<br>விருப்பம் : குடும்பப்பாங்கான பெண் | 28.10.91<br>6' - 2" | M.Tech., | L & T Chennai,<br>Rs. 1.25 Lakhs/PM | திரு. A. Sukumaran,<br>10, Kannake Street,<br>Visalache Nagar, Ekkattuthangal,<br>Chennai - 600 032.<br>Cell : **63811 70589** |
| G 17/4 செல்வன் **இ. மணிவண்ணன்**<br>விசாகம்<br>கொங்கராய<br>பூர்வீகம் : விளாங்குடி | 01.09.95<br>172 cm | DME | T.R.R. Company<br>JCB Service<br>Engineer, Chennai<br>Rs. 30,000/PM | திரு. த. இளங்கோவன்,<br>மேலத்தெரு,<br>விளாங்குடி – **621 704.**<br>அரியலூர் மாவட்டம்<br>Cell : **99408 40052, 99406 43348** |

## நம்மை அழைப்பது... கண் ...

(ஸ்ரீ சிங்க பெருமாள் கோவில்)

வெற்றிகண் எம்பெருமான் சிவனுக்கு மட்டுமா! இல்லை. இல்லை. சிவனின் மைத்துனர் ஆன

பெருமான் அவதாரமான ஸ்ரீ நரசிங்க பெருமாளுக்கும் நெற்றிகண் உண்டு மச்சான் மச்சான் ஏன் பார்த்தே என்ற பாடல் நினைவுக்கு வருகின்றதா?

நெற்றிகண் திறப்பதும் எரிப்பதும் குற்றம் குற்றமே என்ற சொல் சிந்தனையை சிலிர்க்க வைக்கும் ஆனால் ஸ்ரீ நரசிங்க பெருமாளின் நெற்றிகண் திரை விலக்கி காட்டும்போது கோவிந்தா கோவிந்தா என்ற பக்தர்களின் கோஷம் நம் உடல் சிலிர்த்து போகும்.

சொன்னாலோ எழுத்தாலோ கூறுவது உணர முடியாது. நேரில் சென்று தரிசித்தால் நன்றாகவே உணரலாம் நாம் வாழ்ந்த வாழ்க்கை அர்த்தமாகும்.

நற்பலன் கிடைக்க வேண்டும் எனில் காத்திருந்து பெருமான் அவதார சேவித்திட தலமான செங்கல்பட்டு அருகில் சிங்கபெருமாள் கோவில் என்ற ஊரில் வரலாறுபடி 1500 ஆண்டுகள் பழமை கொண்ட நம்மை ஆட்கொள்ளும் இவ் திருகோவில் புராண ஸ்தலமாகும்.

பிரம்மாண்டபுராணம்இவ்ஆலயம்பற்றிவிரிவாக கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ நரசிம்ம அவதார காலத்தில் இவ் கோவிலை சுற்றி ஆரண்யகாடு இருந்ததாகவும் இவ்காட்டில் ஜாபாலி என்னும் மகரிஷி தவத்தின் காரணமாக ஸ்ரீ நரசிம்ம பெருமாள் இரண்யனை வதம் செய்த உக்ர நரசிம்மர் (கோபமூர்த்தியாக) காட்சி கொடுத்ததாக வரலாறு கூறுகிறது.

பல்லவர் காலத்தில் குடை வரை கோவிலாக கட்டப்பட்டுள்ளது. பாடலாத்ரி என்றால் சிவப்பான குன்றில் குடை வரை கோயிலில் உக்ர நரசிம்மர் மூலவராய் திருமேனியாக காட்சி கொடுத்து அருள் தரும் வேறு எங்கும் காணாதவை.

சுவாமியை வலம் வரவேண்டுமென்றால் சிறிய குன்றினையும் சேர்த்து தான் வலம் வரவேண்டும் எங்கும் இல்லாத சுவாமியையும், குன்றினையும் சேர்த்து வலம் வருவது கிரிப்ரத கஷனம் என்பார்கள்.

தாயார் ஸ்ரீ அஷோபிலவல்லி தாயார் சன்னதியும் ஸ்ரீபாடலாத்ரி நரசிம்ம பெருமாள் மற்றும் தல விருட்சமான பாரிஜாதம் விருட்சத்தை சேவித்து குடை வரையில் மூலவரான ஸ்ரீ நரசிம்மர் திரை விலக்கி காட்டும் போது பட்டாச்சாரியர் தெரிவிப்பதும் கூறுவதும்.

ஸ்ரீ நரசிம்ம பெருமாளை சேவிக்கும் பக்தர்கள் திரை விலக்கி திருநாமம் சின்னத்தை விலக்கும் போது நெற்றிக்கண்ணை தரிசித்து சேவிக்கலாம். தங்கள் எண்ணங்களில் பிரதிபளிக்கும் பிரார்த்தனையை செய்து கொள்ளலாம்.

திரை விலக்கபடுகிறது. திருநாமம் சின்னத்தை விலக்கப்படுகிறது. ஆஹா என்ன ஸ்ரீ நரசிம்ம பெருமாள் நேரில் வந்து காட்சி கொடுப்பது போல் தோன்றும் நெற்றிகண்ணை தரிசிக்கும் போது பக்தர்களின் கோவிந்தா... கோவிந்தா.... என்ற குரலோசையில் உடல், சிந்தனை, ஒரு நொடி சிலிர்த்து போகும். நேரில் சென்று சேவித்தால் நம் ஆட்கொள்ளும் மனம் குறை ஒன்றும் இல்லை என்று சிந்திக்க வைக்கும். காத்திருந்து.... காத்திருந்து.... ஸ்ரீ நரசிம்ம பெருமாளை சேவிக்கும் போது...

நம்மை அழைப்பது...

அவரது கண்கள்....

வேளா. சோமசுவாமிநாதன்,
ஆச்சாள்புரம். 9751730940

## சாதிவாரிக் கணக்கெடுப்பு!

சாதிவாரிக்
கணக்கெடுப்பில்
மீண்டும்
சரிவைக்
காணப்போவது யார்!

நாம் இருவர்
நமக்கு ஒருவர்
என்று
அரசின் கொள்கையை
அமுல் படுத்திவரும்
முற்பட்ட சாதியினரின்
முனகல் ஒலி இது !

அன்று
குடும்ப நலத்திட்டத்திற்கு
குத்து விளக்கேற்றி

மக்கள் தொகையை
குறைந்தால்
மாநிலம் பிரதிநிதித்துவம்
குறைந்து விடுமோ என்று
குரல் உயர்த்தும்
மாநில அரசே!

அதே அச்சத்தோடு
தனி மனிதர்களின்
தவிப்பையும்
சற்று பரிசீலியுங்கள்!

"எல்லோர்க்கும்
எல்லாம்"
என்ற மண்ணின்
குரல் இது!

முன்னேறியவர்கள் என்றும்
முற்பட்டோர் என்றும்
முன்பேயே ஒதுக்கி
வைக்கப்பட்ட
எங்கள் பிள்ளைகளை

குறைந்த
சாதிக் கூட்டமென்று
மேலும் பின்னுக்குத்
தள்ளிவிடாதா – இந்த
சாதிவாரிக் கணக்கெடுப்பு !

விகிதாசாரத்தில்
மேலும் எங்களை
எல்லா நிலையிலும்
வீழ்ச்சியுற வைக்கவா
இந்தப் புதுக் கணக்கு ?

குடும்ப நலத்திட்டத்தைப்
பின்பற்றிய மக்களுக்கு
அரசு தரப்போகும் பரிசு
இது தானா ?

கல்வியில், வேலை வாய்ப்பில்
அரசியலில், ஆட்சியில்
அதிகாரத்தில்
போதிய பங்களிப்பு கிடைக்காமல்
முன்னமேயே நலிவடைந்து
இறக்கும் எங்களை
மேலும் வலிமை
இழக்கச் செய்து விடாதா
இந்தச் சாதிவாரிக்
கணக்கெடுப்பு ?

"சாதிகள் இல்லையடி
பாப்பா"
பாரதியின் பாடல்
எப்போதுதான்
அர்த்தப்படும் ?

அரசின் கொள்கையேற்று
மூன்று தலைமுறைகளாக
ஓரிரண்டு பிள்ளைகளோடு
'முற்பட்ட சாதி' என்று
புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கும்
குடும்பப் பிள்ளைகளை
முதலில் கணக்கிலெடுங்கள்!

வயது வரம்பின்றி
அவர்களின்
வாழ்வாதாரத்திற்கு
அனைத்துத் தலத்திலும்
முன்னுரிமை கொடுக்கும்
சட்ட வடிவை முதலில்
கொண்டு வந்து விட்டு

சாதிவாரிக்
கணக்கெடுப்பை
தேவையெனில்
பின்னர் தொடருங்கள்!

அப்போதுதான்
சமூக நீதி நிலைக்கும்!
சமதர்மம் தழைக்கும்!

– மெய்யாத்தூர்
சொ. வேல்முருகன்.
9578286891

## எதிர்பார்ப்பு – பலனும் பாதகமும்

ஞான. அம்புலி

நல்வாழ்க்கைக்கு பலவகையான தேவைகள் முக்கிய பங்காற்றுகின்றன. தேவைகள் கைகூடும் போது வந்திடும் வளர்ச்சியால் ஏற்படுகின்ற மகிழ்ச்சிக்கு ஈடு இணை இல்லை. முக்கியமான தேவைகள் ஆரம்பம் ஆவதை எதிர்பார்ப்பு எனலாம். வழக்கமான நிகழ்வுகளைத் தவிர அவ்வப்போது கடமையை கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய செயல்கள் உதிக்கும் போதுதான் எதிர்பார்ப்பு அவசியம் ஏற்படும். உதாரணத்துக்கு, திருமணம், புரமோஷன் பெற்றிடுதல், வீடு கட்டுதல், கல்வி மேம்பாடு சொத்து சேர்த்தல், தெய்வ பிரார்த்தனை நிறைவேற்றுதல் முதலியன. பின்வரும் செய்திகள், உதாரணத்தில் சொன்ன சூழ்நிலை எதிர்பார்ப்புகளைப் பற்றித்தான் சொல்லப்பட்டுள்ளன.

மனிதனுடைய பிறப்பிலிருந்து இறப்பு வரை எதிர்பார்ப்பு இல்லாத நாளே இருக்க முடியாது. எதிர்பார்ப்பே இல்லாதவர் வாழ்க்கையில் சோகமும் சோதனையும் தான் மிஞ்சும். உயிர் போகும் நிலையில் கூட சொர்க்மா, நரகமா என்ற எதிர்பார்ப்போடுதான் உயிர் பிரிகிறது. மனிதர்களைவிட ஏனைய எந்தவித சேமிப்பும், குறிக்கோளும் இல்லாத உலக உயிரினங்களும் ஒவ்வொரு நாளும் வாழ்ந்திடலாம் என்ற எதிர்பார்ப்போடு இருப்பது கண்கூடான காட்சியல்லவா! எதிர்பார்ப்பு முன்னேற்றப்பாதையின் முதல் அச்சாரம் என்பார்கள். அதோடு எதிர்பார்ப்பு உள்ளவரிடம் தான் சாதனைக்கான இலக்கு நிர்ணயிக்கும் எண்ணம் உதிக்கும். எதிர் பார்ப்பில்லாதவன் வாழ்க்கை துறவர வாழ்க்கை எனச் சொல்லுவதுண்டு. அதே நேரம் தானாக பழுக்கும் பழத்தை தடி எடுத்து பழுக்க வைப்பது முட்டாள் தனமானது போல் வாழ்க்கையில் எல்லாச் செயல்களையும் எதிர்பார்ப்போடு அனுகுவது அர்த்தமற்றது.

'எதிர்பார்ப்பு உள்ளவர்களிடம்தான் தொலைநோக்குபார்வைஉதித்திடும்' என்றார்ராபர்ட்ஸ் சாம் என்ற தத்துவ ஞானி. எதிர்பார்ப்பு என்பது நடந்தே. தீரும் என நம்பிக்கையோடு காத்திருத்தல் ஆகும். சில சமயம் சில எதிர்பார்ப்புகளை தோல்வியில் முடியுமென கணித்தபோது எதிர்மாறாக வெற்றியை தந்திட்ட நிகழ்வுகளும் நடந்து வருகின்றன. எதிர்பார்ப்புகள் தவிர்க்க முடியாத செயல் என்றாலும் எதையும் எதிர்கொள்ளும் மனப்பக்குவம் பெற்றிடின் வாழ்க்கை கசக்காது. எதிர்ப்பார்ப்புகள் ஏமாற்றமளிக்குமானால் மனதில் நிரந்த வடு ஏற்பட அனுமதிக்கக்கூடாது. எதிர்பார்ப்புகள் நிச்சய வெற்றி பெற மன உறுதி, ஓய்வில்லா சிந்தனை, களைத்திடாத உழைப்பு இவையெல்லாம் அடிப்படை தேவைகளாகும்.

ஒரே நேரத்தில் பல எதிர்பார்ப்புகளை எண்ணக்கூடாது. நமது திறமை, சூழ்நிலை போன்றவைகளைக்கருத்தில் கொண்டுஎதிர்பார்ப்புகள் இருக்க வேண்டும். எதிர்பார்ப்பை விரும்புவோர் ஏனையோரின் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றிட உறுதி கொள்ளுதல் நலம் பயக்கும்.

வாழ்க்கையில் எதிர்பார்ப்புகள் என்பது ஒரு தொடர்நிலையாகும். உதாரணத்துக்கு ஒரு +2 மாணவன் எவ்வளவு நன்றாக பரிட்சை எழுதியிருந்தாலும் நாளை வரும் ரிசல்ட்டை ஆவலோடு எதிர்பார்த்திருத்தல் இயற்கை நிலையாகும். எதிர்பார்க்க வேண்டும். மார்க்கிடைத்தவுடன் நல்ல கல்லூரியில் படிக்க எதிர்பார்த்தல் வேண்டும். இடம் கிடைத்தவுடன் நல்ல தரமுள்ள கல்வியை எதிர்பார்க்க வேண்டும். பின்னர் Similar cycle repeat ஆகும்.

எதிர்பார்ப்பு என்ற பண்பு இறுதிவரை இருக்க வேண்டிய ஒன்று எனச் சொல்லலாம். It is a continuous process. ஆசைகள் ஏற்படும்போது, அவைகள் அவசியங்களாக மாறும்போது, அடைந்தே தீரவேண்டும் என முயலும்போது முதலில் வரவேண்டியது எதிர்பார்ப்புதான்.

எதிர்பார்ப்புகள் சில நேரங்களில் சாதகமான முடிவுக்கான அச்சாரம் எனச் சொன்னாலும் பல நேரங்களில் ஏமாற்றத்தை அளிப்பதை உணரலாம். ஆசைப்படுவது இயற்கையின் நியதியாகும். ஆயினும் பேராசை அடைவது ஆபத்தானது என்பார்கள். இக்கருத்து எதிர்பார்ப்புக்கும் பொருந்தும். சாதாரணமாக எதிர்பார்ப்புகள்... Should be achievable due to hard work. In some esteem cases, ways and means have to be found out to achieve it at any cost. மிகக்குறுகிய காலத்தில் உச்சம் தொட நினைப்பவர்களிடம் சுலபத்தில் அடைந்திட முடியாத எதிர்பார்ப்புகள் இருக்கும். அவ்வாசைகள் நிறைவேறாத நிலையில் தீய வழிகளை கடைபிடிக்க திட்டமிடுவார்கள். ஒழுக்க நெறியைப் பற்றியோ நீதி நிலைமையைப் பற்றியோ சிந்திக்காது வழி தவறிச் செல்வார்கள். எதிர்காலம் பற்றிய மனக்கோட்டைகள் கட்டி எதிர்பார்க்கும் செயல்கள் கைகூடாவிட்டால் ஏற்படும் ஏமாற்றங்கள் பல நேரங்களில் prestige

issue ஆகிவிடும். இவ்வயப்பட்டோருக்கு சொந்த வாழ்க்கையில் பெருத்த சேதத்தை தந்திடும் இத்தகைய நேரங்களில் பொறுமை காத்திடல் அவசியம்.

எதிர்பாராது நடக்கும் பல செயல்கள் நாளைய விடியலுக்கான நற்செயல்களின் அறிகுறியென எடுத்தல் பலன் அளித்திடுவதை பலரது வாழ்க்கையில் பார்த்திடலாம். தோல்விகள் ஏமாற்றங்கள், சங்கடங்கள், அவமானங்கள் இவையெல்லாம் மனிதனின் நற்பண்புகளை பட்டைதீட்டித் உயிர்த்திடும் பாசறையாய் கொண்டவர் வாழ்க்கை தோற்றதில்லை. இத்தருணத்தில் ஒரு தமிழறிஞர் கூறியது சரியாக இருக்கும். 'எதிர்பார்ப்புகள் நிகழாவிட்டால் தோல்வி பெற்றதாய் அர்த்தமல்ல! Instead வெற்றியின் பாதை வேறு வழி என புரிந்துகொண்டு புதிய பாதையில், இடைபடும் தடைகள் இலக்கை விரைவில் அடைந்திட அமைத்திடும் மாடிப்படிகள் சமதள பாதையல்ல' என்றுணரவேண்டும்.

எதிர்பார்ப்பு என்னவென்று முடிவு எடுக்குமுன் சம்பந்தப்பட்ட காரியத்தின் அனைத்து possibilities–களை ஆராய்ந்து Positive பதில் கிடைத்தால்தான் முயற்சியினை தொடங்கலாம். இத்தருணத்தில் இக்கருத்தை ஒட்டிய இராமாயண காவியத்தின் நிகழ்வு ஒன்றை குறிப்பிடலாம்.

சீதையை மீட்கவும் இராவணனை அழிக்கவும் தன் தம்பி லெட்சுமணனோடு வானர படை சூழ இலங்கையை நோக்கி ஸ்ரீராமன் புறப்படுகிறார். ஸ்ரீ ராமனுடைய முகத்திலும் உடலிலும் ஏற்பட்ட பதட்டத்தை பார்த்த லெட்சுமணன் "மகாபிரபு அவர்களே! நமது பயணம் வெற்றியை தந்திடும் எதிர்பார்ப்புள்ள நிலையில் ஏன் உங்கள் உடலிலும் செயலிலும் என்றுமில்லா பதட்டம் நிலவுகிறதே" எனக் கேட்டார். சகோதரனை ஏற இறங்க பார்த்த ஸ்ரீ ராமபிரான் (வெற்றி நிச்சயம் என மனதிற்குள் நினைத்திருந்தாலும் உண்மை நிலை புரிய) "தம்பி லெட்சுமணா! இப்பொழுதுதான் நாம் யுத்தத்தை தொடங்க உள்ள நிலையிலும் எதிரியின் படைத் திறமையை பற்றி முழுத் தகவலும் கிடைக்காத நிலையிலும் எப்படி நாம் தான் வெற்றி பெறுவோம் என உறுதியாய் சொல்கிறாய்" என சிரித்தப்படி கேட்டார். லெட்சுமணன் பதில் உடனே வந்தது "மகாபிரபுவே நான் தீர்க்கமான வெற்றி நமதே என்ற முடிவுக்கு வந்ததற்கு காரணங்கள் பலப்பல; குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் நாம் பயணம் தொடங்கும் இவ்வேளையில் காற்று மிருதுவாயும், இதமாயும் சுகமாயும் மங்களகரமாயும் பின்பக்கத்திலிருந்து வீசுகிறது. மிருகங்களும் பறவைகளும் இனிமையாகவும் பூரண சுவரத்துடனும் சப்திக்கின்றன. சகல திக்குகளும் தெளிந்திருக்கின்றன. சூரியன் களங்கமில்லாமல் பிரகாசிக்கின்றான். சுக்கிரன் தங்களுக்கு பின் திசையில் இருக்கின்றான். இந்த சுற்றுச்சூழல் நமது வெற்றியை உறுதி செய்கின்றன. கடந்து போகும் ஒவ்வொரு நிமிடமும் வெற்றிச்சங்கின் நாதன் கேட்டபடி உள்ளன. ஆகவே வெற்றிப் பயணத்தை எழுச்சியுடன் தொடருவோம். உங்கள் தெய்வீக சக்தியோடு இணைந்த இச்சூழல் வெற்றிக்கான முரசை கொட்ட ஆரம்பித்துவிட்டது" என்றான். சகோதரனைத் தட்டிக்கொடுத்த ஸ்ரீ ராமன் வில்லில் புறப்பட்ட அம்பாய், மின்னலாய் புறப்பட்டார். இறையருள் கொண்ட இந்த நிகழ்வில் சாதகமான சுற்றுச்சூழ்நிலையில் வெற்றிக்கு முக்கியமானது என்பதை வைத்தே எதிர்பார்ப்பு வெற்றியைத்தான் தரும் என்று திடமாய் துல்லியமாய் கணித்திடுகின்றான் லெட்சுமணன். அவனது கணிப்பின்படியே வெற்றியாய் ஆன செய்தி சரித்திரத்தில் நிலைத்து நிற்கிறது.

'வாழ்க்கை என்பது நம் அனைத்து எதிர்பார்ப்பையும் எல்லா நிலைகளிலும் நிறைவேற்றும் தளம் அல்ல. பல சந்தர்ப்பங்களில் பல திருப்பங்களை எதிர்பாராமலே அரங்கேற்றும் மேடை' எனவும் சொல்லியுள்ளார்கள்.

மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் ஒரு நட்சத்திர நிகழ்வு! ஒரு பசுவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றிய நெகிழ்வான நிகழ்ச்சி! திருவாரூரை தலைநகராகக் கொண்டு மனுநீதிகண்ட சோழனென்பவர் ஆட்சி செய்து கொண்டிருந்த பொற்காலம். ஒரு நாள் மன்னர் அரசவையில் இருந்தபோது அரண்மனை நுழைவு வாயிலில் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியின் சத்தம் கேட்டு வெளியில் வந்த அனைவரும் பார்த்த காட்சி மெய்சிலிர்க்கவைத்தது! ஒரு பசு தன் கொம்புகளால் மணியினை அடித்துக்கொண்டிருந்தது. அப்பசுவின் கண்களில் தாரை தாரையாய் கண்ணீர்.விசாரணையில் மன்னரின் ஒரே மைந்தன் தானே சாரதியாக ஓட்டி வந்த தேரின் சக்கரத்தில் சிக்கி அப்பசுவின் கன்று இறந்துவிட்டதாகவும் அந்த நிகழ்வுக்கு நீதி கேட்டு அப்பசு எதிர்பார்ப்போடு ஆராய்ச்சி மணியை அடித்ததாக தெரியவந்தது. செய்தி கேட்டு துடிதுடித்த மன்னன் ஒரு அமைச்சரை அழைத்து உடனே அரண்மனை தேரில் சென்று வீதியிலிருந்த தன் மகன் மீது தேரை ஏற்றி கொன்று வரும்படி பணித்தார். மன்னரின் ஆணையினை ஏற்க மறுத்தது மட்டுமல்லாமல் தன் மறுப்புக்கு பிரியா சித்தமாக அந்த அமைச்சர் தற்கொலையே செய்துகொண்டார்.

மன்னரின் கட்டளைக்கு வேறு எவரும் முன்வராத நிலையில், அதிர்ச்சியடைந்து கொதித்தெழுந்த மன்னர், தானே சாரதியாய் தேரை ஓட்டிச்சென்று தன் மகன் மீது தேரை ஏற்றி இளவரசனை இறக்கச் செய்துவிட்டு ஒன்றே செய்யினும் இன்றே செய்திடும் மரபாய் நீதியினை உடனே வழங்கி வாடி நின்ற செயல் காண்போரை துடிதுடிக்கச் செய்தது. இச்செயலால் மூவுலகமும் திகைத்து செயலிழந்து நின்றுவிட்டதால் ஈசன் தியாகராஜபெருமான் நேரில் தோன்றி மன்னரை ஆசிர்வதித்ததோடு, அவரது மகனையும் தற்கொலை செய்துகொண்ட அமைச்சரையும் பசுவின் கன்றையும் உயிர்ப்பித்து தந்தது பின் செய்தியாகும். ஒரு வாயில்லா ஜீவனின் எதிர்பார்ப்பை நிறைவேற்றிய மன்னரின் நீதியினை நிலைநிருத்திய செயல் சரித்திரமாய் மாறியது என்றால் மிகையாகாது.

பேராசையைப் போல் எதிர்பார்ப்புகள் அதிகம் பெற்றால் ஏமாற்றங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். உதாரணத்திற்கு சிட்பண்டில் முதலீடு செய்தால் அதிகமான தொகையை குறுகிய காலத்தில் திரும்பப் பெறலாம் எனக் கருதி முதலீடு செய்துவிட்டு எதிர்பார்ப்புகளோடு காத்திருந்து ஏமாறுபவர்கள் எண்ணிக்கை பெருகிவருகிறது. மேலும் பல போலி நிறுவனங்கள் தங்களது கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் மக்களை கவர்ந்திழுத்து அவர்களது சேமிப்பை கொள்ளை அடித்து செல்வதை அன்றாடம் பார்க்க முடிகிறது. வட்டி குறைவாயினும் வருவாய் தரும் சமூக நல உத்திரவாதமுள்ள சேமிப்பு திட்டங்களை கண்டறிந்து முதலீடு செய்தலே சாலச்சிறந்தது.

எதிர்பார்ப்பு என்பது மனித பண்புகளில் உயர்ந்ததில் ஒன்றாகும். எதிர்பார்ப்புகள் சரியாக கணிக்கப்படுமானால் நினைத்தது நடக்கும். எதிர்பார்ப்பதை எட்டுவது என்பதே ஒரு கலை. அதை அடைய திட்டமிடும்போது புதிய புதிய சிந்தனைகள், நல்வாழ்க்கைக்கு வேண்டிய புத்தம்புதிய யோசனைகள் ஏற்படலாம். ஒவ்வொரு எதிர்பார்ப்பும் அடைந்திட செல்லவேண்டிய பாதை புதியனவாய் இருக்கலாம். ‘பழையன கழிதலும் புதியன புகுதலும்’ என்பதை ஏற்றுக்கொள்ளும் மனநிலை கொண்டோருக்கு வெற்றி வாய்ப்பு அதிகமென சொல்லுவர்.

அடைந்தே தீரவேண்டும் என்ற ஒரு நல்ல இலக்கை வாழ்க்கையில் பெற்றிட வேண்டுமென்றால் அதை முதலில் அவரவர் மனத்திரையில் எதிர்பார்ப்பாக கொண்டு வரவேண்டும். பின்னர் தனிமையிடத்தில் கண்களை மூடி அமைதியாய் அமரவேண்டும். நிதானமாக மூச்சை விட்டபடி உங்கள் இலக்குக்கு தேவையான வடிவத்தை மனதில் வரையவேண்டும். அது கிடைத்தது போல உள் மனதில் ஒரு எண்ணம் எழும்வரை தொடர்ந்து முயலுதல் வேண்டும். வரைபடம் தெரிந்த நிலையில் இச்செயலுக்கு உறவுகள், நட்புகள் எல்லோரும் பாராட்டுவதாக உணரவேண்டும். எல்லாமே பாவனைகள்தான். இத்தகைய உணர்வுகள் ஆழ்மனதில் அழகாய் பதிந்துவிடும். நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கான blue print ஆனது உள் மனதில் பிரதிபலிக்க ஆரம்பித்துவிடும். இந்த எண்ண அலைகள் எழுந்தபின் பிரபஞ்சம் முழுவதும் இந்த பத்து நிமிட தியான தினப்பயிற்சி ஆழ்மனதில் Positive vibration உண்டாக்கிட வழி வகுக்கும். இந்த எளிமையான பயிற்சி வலிமையான முடிவை பெற்றுத் தந்திடும்.

வேதனை தராத சிறப்பான சிந்தனை வரிகள்:

* எதிர்பார்ப்பு ஒருவரை உழைக்கத் தூண்டும் உற்சாக பானம்.

* வாழ்க்கையில் எதிர்பார்ப்பு இல்லாதோர் கடலில் துடுப்பு இல்லாமல் விசைப்படகில் பயணம் செய்வோராவர்.

* எதிர்பார்ப்பு இல்லாது வாழ்வோனின் வாழ்க்கையில்தான் பல நேரங்களில் எதிர்பாராத அற்புத நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

* எல்லாவற்றையும் எதிர்பார்த்தல் அதிகமான ஏமாற்றம் தந்திடும்.

* ஏற்றங்களுக்கு வழிவகுக்கும் மாற்றங்களை எதிர்பார்ப்புகள் தந்திட்டால் ஏற்றுக்கொள்ளுதல் அறிவுடமையாகும்.

* எதிர்பார்ப்பில் தொடங்காத லட்சியம் தோல்வியை தந்திடும் நிச்சயம்!

---

### வாழ்த்துகிறோம்

வைத்தீஸ்வரன் கோவில் திரு. சிட்டிபாபு பிள்ளை திருமதி. மஞ்சுளா சிட்டிபாபு இவர்களின் புதல்வர் திரு. C. கணேஷ்குமார் அவர்களுக்கும் பூந்தோட்டம் மோட்டாத்தூர் திரு. V. ஜெயசங்கர் இவர்களின் புதல்வி சுஸ்மிதா, அவர்களுக்கும் 26–2–2024 திங்கட்கிழமை வைத்தீஸ்வரன் கோவில் கனகதுர்கா திருமண மண்டபத்தில் திருமணம் இனிதே நடைபெற்றது. சீர்காழி சங்கத்தின் சார்பாக மணமக்களுக்கு சந்தனமாலை அணிவித்து வாழ்த்து மடல் வாசித்து அளிக்கப்பட்டது.

## உறவுகளின் உன்னதமான ஆன்மீகச் சுற்றுலா.

குடும்ப உறுப்பினர்களும், நண்பர்களுமாக நான்கு நாட்களுக்கு ஆன்மீகச் சுற்றுலா சென்று வரலாம். எனத்திட்டமிட்டு 25–02–24 ஞாயிறன்று மயிலாடுதுறையிலிருந்து அதிகாலை 5.30 மணிக்கு Van மூலம் 14 பேர் பயணத்தைத் துவங்கினோம். காலை 11 மணியளவில் விராலிமலை சென்று தேனீர் அருந்தி விராலிமலை முருகனை Van-ல் இருந்தபடியே வலம் வந்து பயணத்தைத் தொடர்ந்து 12 மணிக்குச் சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி கொந்தகையில் அமைந்துள்ள தொல்லியல் அகழ் வைப்பகம் (அருங்காட்சியகம்) சென்றோம். அங்கு 2018 முதல் நடந்த எட்டு சட்ட அகழ்வாய்வுகளில் கிடைத்த பொருட்கள், செட்டிநாட்டுக் கட்டடக் கலையில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் 6 காட்சிக் கூடங்களில் பழங்கால மக்களின் நீர்மேலாண்மை, வேளாண்மை, ஓட்டுச்சில்லைகள், மட்பாண்டங்கள், இரும்பு, நெசவு தொடர்பான பொருட்கள், ஊதுலை, கடல் வணிகம்சார் பொருட்கள், மணிகள், சங்குப் பொருட்கள், முதுமக்கள் தாழி போன்ற வாழ்வியல் பொருட்கள் அழகிய முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தொல்லியல் தளங்கள், மதுரையின் பழமை சீரடி அகழாய்வின் வரலாறு போன்றவற்றை விளக்கும் வகையிலான 15 நிமிட ஒலி வடிவக் காட்சியகமும் இருந்தது. தொன்மக்களின் வாழ்வியலையும், கலாச்சாரத்தையும் அறியக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பாக இது அமைந்தது.

தொடர்ந்து பயணித்த நாங்கள் இராயப்பாளையம் என்னுமிடத்தில் அமைந்த முக்திநிலையம் என்ற சத்யயுக சிருஷ்டி கோயிலுக்கு 2 மணிக்குச் சென்றடைந்தோம். 5000 ஆண்டுகளுக்கு முன்பு குறிப்பிடப்பட்ட வழிமுறைகளின்படி இக்கோவிலின் ஸ்தூபிவடிவமைக்கப்பட்டுள்ளது. இந்துத் தெய்வங்களல்லாது, புத்தர், ஏசு போன்ற வடிவச் சிலைகளும் அமையப்பெற்றுள்ளன. ஏறத்தாழ 136 சன்னதிகளில், 9 கோள்கள், 12 இராசிகள், 27 நட்சத்திரங்கள், நதிகள், சப்தகன்னியர், நாகர், ரிஷிகள் பத்தினியருடன், தேவர்கள் பத்தினியருடன், சித்தர்கள், இயமன், சித்திரகுப்தன், பிரம்மா, ஆஞ்சனேயர், ஞானவிநாயகர், சிலைகள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. வழி கண்டு தொடர்ந்து செல்ல அம்புக்குறியிடப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.

பிறகு எங்கள் பயணத்தின் தொடர்ச்சியாக 5–15 மணிக்கு ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஆண்டாள் நாச்சியார் திருக்கோவிலுக்குச் சென்று வழிபட்டோம். ஆண்டாள் அவதாரச் சன்னதிக்கும் சென்று வழிபட்டோம். ஜெய் ஸ்ரீ நரசிம்மரைத் தரிசித்தோம். 20 படிகளில் ஏறி சற்றே உயரத்திலுள்ள வடபத்ர சயன சன்னதிக்குச் சென்று வழிபட்டோம். மற்றும் லட்சுமித் தாயார், கூரத்தாழ்வார், சக்கரத்தாழ்வார் சன்னதிகளிலும் வழிபட்டோம். தேனீர் அருந்திய பிறகு 7.15 மணியளவில் சங்கரன் கோவில் சென்றடைந்தோம். அரியும், சிவனும் ஒன்றே என உணர்த்தும் வகையிலமைந்த சங்கரநாராயணரையும், சங்கரலிங்கசுவாமி, கோமதியம்மன் என்ற ஆவுடையம்மன், அம்மனின் அருகிலமைந்த நாகர்சிலைகள் கண்டு வழிபட்டோம். இத்தலம் பஞ்ச பூதத் தலங்களில் ஒன்றான பிரித்வி (மண்) ஆகும். இரவு உணவிற்குப் பிறகு 10.45 மணிக்குத் திருநெல்வேலியடைந்து Dreamland Lodge-ல் தங்கினோம்.

மறுநாள் காலை (26–02–24) 7.30 மணிக்கு நவகயிலாயத் தலங்களில் இரண்டாவது தலமாகிய சந்திரனுக்குரியதாக சேரன் மகாதேவியிலமைந்த அருள்மிகு ஆவுடைநாயகி உடனுறை அம்மை நாதரைத் தரிசித்தோம். இத்தலம் சந்திரனுக்கு சிவன் அடைக்கலம் தந்த தலமாகும். அதனருகில் தாமிரபரணி நதிக்கரையிலமைந்த சங்கிலிப் பூதத்தாரை வழிபட்டோம். காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு 9.15 மணிக்கு வீரவநல்லூரிலுள்ள அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை பூமிநாதரை வழிபட்டோம். பிறகு 9.45 மணிக்குத் தென்திருபுவனத்திலுள்ள பஞ்ச பூதஸ்தலங்களில் ஒன்றான குருஸ்தலமாகிய அருள்மிகு பூந்தேவி உடனுறை புஷ்பவன நாதர் ஆலயம் சென்று வழிபட்டோம். காலை 10.45 மணிக்கு திருப்புடைமருதூர் அருள்மிகு கோமதியம்மன் உடனுறை நாறும்பூநாதரை வழிபட்டோம். இக்கோயில் ‘கடையார்ச்சுனம்’ என்று வழங்கப்படுகிறது. ‘அர்ச்சுனம்’ என்றால் மருதமரம். இறைவனுடைய திருமேனி சற்றே சாய்ந்த நிலையிலமைந்துள்ளது. வேறு எங்கும் இல்லாது, இத்தல அம்பாள் உச்சி முதல் பாதம் ருத்ராட்சத்தைத் தாங்கியபடி நின்ற கோலத்தில் அருள் பாலிக்கிறாள். இது ‘தாரகா சக்தி பீடம்’ என்றழைக்கப்படுகிறது. இறைவன், இறைவி இருவருமே சுயம்பு மூர்த்திகளாக இருப்பது சிறப்பு. பிறகு 11.45 மணிக்கு அம்பாசமுத்திரம் அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை காசிபநாதர் ஆலயம் சென்று வணங்கினோம். மற்றொரு மூலவர் அருள்மிகு

எரித்தாட்கொண்டார் ஆவார். நண்பகல் 12 மணிக்கு அருள்மிகு உலகம்மன் உடனாய பாபநாசநாத சுவாமியைப் பாபநாசத்தில் தரிசித்தோம். அகத்தியரின் விருப்பப்படி இறைவியின் திருமணம் கோலத்தில் காட்சியளித்தார். கோவிலின் அருகிலேயே உள்ள அருவி 'அகத்தியர் அருவி' என அழைக்கப்படுகிறது. இக்கோயில் சூரியனுக்குரியதாகும். அடுத்து நாங்கள் சென்ற ஆலயம் சிவனசலத்திலுள்ள அருள்மிகு பரமகல்யாணி உடனுறை ஸ்ரீசிவசைலபதி கோவிலாகும். 12 மணியாகிவிட்டதால் இறைவனைத் தரிசிக்க இயலாமல் இருப்பிடத்தை மட்டுமு வணங்கினோம். இக்கோவில் 'தலையார்ச்சனம்' ஆகும். தென்காசியில் மதிய உணவுண்டு 'இலஞ்சி' என்ற இடத்திலுள்ள அருள்மிகு இலஞ்சி குமாரர் கோவில் சென்று வரதராஜப் பெருமான் என்ற பெயரோடு விளங்கும் முருகனைத் தரிசித்துப் பிறகு பண்பொழியிலமைந்துள்ள திருமலைக்கோவில் குமாரசாமி கோவிலுக்குச் சென்று இறைவனைத் தரிசித்துவிட்டு மலையிலிருந்தவாறு சுற்றிலுமுள்ள பச்சைப் பசேலென்ற இயற்கைக் காட்சிகளைக் கண்டு, இயற்கைக் காற்றினை அனுபவித்துப் பிறகு மலையிலிருந்து இறங்க மனமின்றி இறங்கினோம். இரவு 7.30 மணிக்குத் தென்காசியிலுள்ள அருள்மிகு உலகம்மன் உடனாய காசி விசுவநாதரைத் தரிசித்து இரவு உணவுக்குப்பிறகு குற்றாலத்திலுள்ள ஹோட்டல் குறிஞ்சியில் தங்கினோம்.

அடுத்த நாள் (27–02–24) காலை குற்றால அருவியில் மணமும், உடலும் குளிரக் குளிரக் குளித்தோம். அதன் பிறகு 'சித்திர சபை' என்றழைக்கப்படும் அருள்மிகு குழல்வாய்மொழியம்மன் உடனுறை திருக்குற்றால நாதரையும், பராசக்தி அம்மனையும் தரிசித்தோம். வைணவத்தலமாக இருந்த இத்தலத்தில் இருந்த 'திருமால்' வடிவிலமைந்த மூர்த்தியை அகத்தியர் சிவலிங்கமாகி மாற்றியமைந்தார் என்பது தொல் நம்பிக்கை. காலைச்சிற்றுண்டிக்குப் பிறகு 10.45க்குள் புளியரையிலுள்ள குருபகவான் ஆலயமான அருள்மிகு தட்சிணாமூர்த்திக் கோவிலிலுள்ள மூ லவரைத் தரிசித்தோம். மூலவராக சிவகாமி உடனுறை சதாசிவமூர்த்தி விளங்கினாலும் மூலவருக்கும், நந்திக்கும்இடையேயுள்ளதட்சிணாமூர்த்திக்கேசிறப்பு. பிறகு 12.30 மணிக்கு கேரளாவிலுள்ள குளத்துப்புழா சென்றடைந்து பாலசாஸ்தா கோவில் மூடப்பட்டிருந்த நிலையில் அருகிலுள்ள ஆற்றிலுள்ள மீன்களுக்குப் பொரியிட்டு நீர் நிறைந்த மீன்களைப் பார்த்துவிட்டு நெய்யாற்றின் கரையில் மதிய உணவு உண்டுவிட்டு 'செங்கல்' என்ற ஊரிலுள்ள மகேஸ்வரம் சிவன் கோவில் சென்றோம். குடமுழுக்கு நடைபெறவுள்ள அக்கோவிலில் மிகப் பிரம்மாண்டமான 'லிங்க' வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. அதனுள்ளே வட்ட வடிவில் சரிவுப்பாதையமைக்கப்பட்டு அதன் சுவர்களில் அழகுற அமைக்கப்பட்டுள்ள புராணக்கதைக் காட்சிகள் புடைப்புச்சிற்பங்களாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சிவபார்வதியை வணங்கிவிட்டு அடுத்தபடியாக 'விழிஞத்தி'லுள்ள கேரளாவின் 'ஆழிமலா'விற்குக் கீழிறங்கும் சரிவுப்பாதையிலிறங்கி அரபிக்கடலின் அலைகள் மோதும் கோவிலினுள்ளே மிகப்பெரிய சிவனின் வடிவத்தைக் கண்டு களித்தோம். சரிவுப் பாதையில் சற்றே சிரமப்பட்டு ஏறினோம். அங்கிருந்து புறப்பட்டுக் கன்னியாகுமரி செல்லும் வழியில் 'மார்த்தாண்டத்தில்' உள்ள 'கோட்டலத்தில்' வசிக்கும் எங்களின் நண்பரொருவர் எங்களின் குடும்ப உறுப்பினரொருவரின் பிறந்தநாளைக் கொண்டாடி அளித்த சிறப்பான இரவு உணவை முடித்துக் கொண்டு கன்னியாக்குமரி சென்று அங்குள்ள அருணாச்சலா விடுதியில் தங்கினோம்.

மறுநாள் (28–02–24) மின்னும் மூக்குத்தி அணிந்த பகவதியம்மனைத் தரிசித்துவிட்டு, விவேகானந்தர் பாறைக்குப் படகில் சென்று தியானமண்டபத்தின் அமைதி வழிபாட்டில் பங்கேற்றுப் பிறகு திருவள்ளுவர் சிலையையும் கண்டுவிட்டுக் காலை உணவிற்குப் பிறகு 'சுசீந்திரம்' சென்று தாணிமாலயன் ஆலயத்தில் சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய முப்பெரும்கடவுளரும் ஒருவர் மேல் ஒருவராக அமைந்துள்ள கடவுளை வணங்கி, 'அறம்வளர்த்த அம்மன்' அருள்மிகு ஸ்ரீதேவி, பூதேவி உடனுறை திருவேங்கடப் பெருமான் ஆகியோரை வணங்கிப் பிறகு 1 மணிக்கு 'அருவிக்கரை' மாத்தூரில் அமைந்த 'தொட்டிப்பாலத்தைக் கண்டு வியந்தோம். மதிய உணவிற்குப்பிறகு மாலை 6 மணிக்குத் திருநெல்வேலி சென்று அருள்மிகு காந்திமதியம்மன் நெல்லையப்பரைத் தரிசித்து இரவு உணவிற்குப்பின் இரவு முழுதும் பயணித்து மயிலாடுதுறைக்கு அதிகாலை 5 மணிக்குச் சென்று மனம் நிறை மகிழ்ச்சியுடன் எங்கள் ஆன்மீகச் சுற்றுலாவை நிறைவு செய்தோம்.

தி. ஜெயபாலன்
94435 68722

## ‘‘அமைதியின் அழகும், புகழும்’’

– கோலாகலன்.

சிதம்பரதத்திலிருந்து, பென்னேரி, வாள்காரன்மேடு, பண்ணபட்டு வழியாகச் சிறுகாலூா் செல்லும் சாலையில் வெட்டு வாய்க்கால் கரையில் ஆலமரத்தடியில் சிவகாமிசித்தர். சீருந்தில் சென்று கொண்டிருந்த பொறியாளர் பாஸ்கரன் ஐயா அவர்கள் சித்தரைப்பார்த்ததும் வண்டியை ஓரங்கட்டி நிறுத்திவிட்டு, இறங்கி சித்தரை வணங்கினார். சிரம் நிமிர்த்தி கரம் உயர்த்தி வாழ்த்திய சுவாமிகள் அமரச் சொன்னார். இதழ் மலர்ந்து முறுவலித்த பாஸ்கர் ‘‘மிகவும் அமைதியான இடமாக இது உள்ளது’’ என்றார். உடனே சித்தர் அடியேனைப் பார்த்தார், வினாக்குறியுடன், நான் உடனே விடைசொன்னேன், ‘முழு அமைதி எனச் சொல்ல முடியாது சுவாமி! ஓசை ஒலியெலாம்’ மிகவும் கம்மி என்று சொல்லலாம்’’ ஓரிரு பறவை, குருவிகள் ஒலியும், பசு காளை கன்று, ஆடுகள் இவற்றின் ஒலிகளுடன் கேட்டன அப்பொழுது, உடனே பாஸ்கர் ஐயா அவர்கள் அமைதி என்றால் என்னதான் என்று கூறுங்கள் சுவாமி’’! என்றார். சிவகாமி சித்தர் பேசலுற்றார். அமைதி இருவகைப்படும். ஒன்று புற அமைதி, மற்றொன்று அக அமைதி. அகம் என்பது முழுக்க முழுக்க மனத்துடன் தொடர்புடையது. புற அமைதியை முற்றிலும் கட்டுப்படுத்தினாலும் காற்றோசை, கடலோசை, இதயத்துடிப்போசை, மூச்சொலி என்று நுட்பமான ஓசைகள் இருந்து கொண்டேதான் இருக்கும். மனத்துள் எந்த நினைவோட்டமும் இல்லாமல் இருத்தலே அக அமைதியாகும். புற அமைதி முழுமையாகப் பெறவே முடியாது. அக அமைதியை முயன்றால் எளிதில் பெறலாம்.

அக அமைதியை ஒரு மனம் பெற்று விடுமானால் அதைவிடப் பெரும் பேறு ஏதுமில்லை. அது அடுக்ககடுக்காகப் பல நன்மைகளை வியக்க வைக்கும் வண்ணம் வாரி வாரி வழங்கும்.

அறத்துடனான ஆசையும், நேர்மையான முயற்சியும் வெற்றிக்கு வழி வகுக்கும். இவற்றையும் மீறி ஒரு முயற்சி வெற்றி பெறவில்லை எனில் அது இறைவன் செயல் என்று காத்திருத்தல் நன்மை பயக்கும். யாவும் இறைவன் செயல் என்ற எண்ணம் வலுப்பெற்றுவிட்டால் நன்மை தீமை இருண்டு சமமாகவே மனத்தில்படும். அப்பொழுது மன அழுக்குகள், பொறாமை, சினம், வெறுப்புச் சொற்கள், மனச்சோர்வு, பதைபதைப்பு, மன உளைச்சல் யாவும் அகன்றுவிடும்.

அமைதி என்னும் அருள்ஒலி ஒரு மனத்துள் வந்து அமர்ந்துவிட்டால் கவலைக்கு அங்கு இருக்கை இருக்கவே இருக்காது. நிற்கக் கூட இடமின்றி ஓடிப்போய்விடும். இதனால் மன இறுக்கம் தளர்ந்து மறையும். மன உளைச்சல் ஓடிப்போய்விடும். மனக்குழப்பம், கதிர்கண்ட பணிபோல் இல்லாமல் போகும். இதனால் மனத்தில் ஓர் இனிய சுகானுபவம் அரும்பும். இதழ்களில் அருட் புன்னகை இயல்பாகவே மலரும். இது நேர்மையான அன்பையும், ஈர உள்ளத்தையும் உருவாக்கும். இது வேர்விட்டு விருட்சமாகும். இதனால் தன்னலங்கள் தகர்ந்துவிடும். ‘‘யான்’’ எனது என்னும் தற்போதம் நகர்ந்துவிடும். தெளிவும் ஓர் ஏகாந்தமும், எத்தடையும் இன்றி விளையும். இதனால் அமைதிகண்ட மாந்தன் புனிதனாகிறான். புனிதனிடம் புரிதல் ஞானம் மிளிரும். அதனால் அச்சம் அகலும். அருட்குணம் மேலோங்கும். மனம் வலிமையுறும். அமைதியே அறம், அமைதியே அருள். அதுவே ஞானம். ஞானமே ஆன்மீகம், உண்மை ஆன்மீகம் எளிமையைத்தரும் எளிமை நிறைவளிக்கும் நிறைவே இனிமையாக்கும். இனிமை நேர்மையையும் நியதியையும் உருவாக்கும். இதனால் இவர் சான்றோராவார்.

இவர் விரும்பாமலேயே புகழுக்கு உரியவராவார். இவர் தம் அறிவினை காரணமாகப் புகழ் அடைவார். அதாவது அவர் தம் அறிவு அறங்கூறும். சங்கத்தை மாற்றிடும். எடுத்துக்காட்டாக திருவள்ளுவர், வள்ளலார், இளங்கோவடிகள் போன்றோரைக் குறிப்பிடலாம். அடுத்து ‘‘தறுகண்’’ வந்துவிடும். அஞ்சத்தக்கதைக் கண்டும் அஞ்சாமை வரும். அதாவது ஓர் அரசு அல்லது அரசனையே நீதிக்காக எதிர்க்கும் குணம் உருவாகும். எடுத்துக்காட்டாக வ.உ.சிதம்பரம்பிள்ளையைக் குறிப்பிடலாம். அஞ்சாமை வந்த நெஞ்சில் கொடைக்குணம் உண்டாகும். இது உயிர்த்தியாகம் வரை செல்லும். பாரி, ஓரி, காரி, அதியமான் போன்ற வள்ளல்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவர்கள் பழிக்கு அஞ்சி இழிசெயல்களை நெஞ்சில் கூட எண்ணார். விலகியே நிற்பர்.

இன்றைக்கு ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவள் அம்பபாலிகா. சிறந்த ஆடல்மகள். பலமன்னர்கள் அவளது காலடியில். அவளது தொடர்பு என்பதே பெருமைக்குரிய விடயமாக அன்று கருதப்பட்டது. ஒரு நாள் கௌதம புத்தர் ‘‘அம்பபாலிகா! இன்னும் எத்தனை நாட்களுக்கு நீ இப்படிப்பட்ட செம்மாந்த வாழ்வு வாழ்ந்து கொண்டு மன்னர்களைமண்டியிட வைத்துக் கொண்டிருப்பாய் ?’’ என்றார். உடனே அவள் ஞானம் பெற்றாள். அமைதி அவளிடம் அடைக்கலம் ஆகிவிட்டது. தான் சேர்த்த

பொருளை எல்லாம் அறப்பணிக்கெனச் செலவிட்டாள். அவள் ஈட்டிய பொருள் யாவும் பௌத்த மடங்களாயின. அவள் வரலாற்றில் இடம் பெற்று நிலைத்த புகழ் பெற்றாள்.

முத்தரையர் பாளையத்தில் இருந்த தாசி ‘ஆயி’ யின் வீடு ஓர் ஆலயம் போல் அமைந்திருந்ததாம். மன்னன் கிருட்டிணதேவராயன் அதனைக் கண்டு கும்பிட்டானாம். இதனைக்கண்ட சிலர் நகைக்க விபரம் அறிந்த மன்னன் அவள் மாளிகையை இடிக்க ஆணையிட்டானாம். இதனைக் கேட்ட நொடியில் ஞானம் பெற்ற ஆயி அரசனிடம் அவகாசம் கேட்டு, தன்மாளிகை இருந்த இடத்தில் மக்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு பெருங்குளம் வெட்டினாள். இது ஆயி குளம் என்றானது. ஒரு நெருக்கடியில் கூட சிலருக்கு இறைவன் ஞானத்தை வழங்கி அமைதியைத் தந்தருள்வான்.

ஞானம் பேரமைதியைத்தரும். பேரமைதி மக்களுக்குப் பெருநன்மையை வழங்கும். பெருநன்மை நிலைத்த புகழளிக்கும். புகழ் வரலாறு ஆகும். வரலாறு அடுத்த தலைமுறையினருக்கு அரிய பாடமாகும். பேசி முடித்த சிவகாமி சித்தர் பாடி ஆடத் தொடங்கினார். “ஆடு பூவே! கூத்தாடு பூவே! அனைத்துப் பேற்றையும் தரவல்லது அமைதி ஒன்றே என்று கூத்தாடு பூவே! அழகும் புகழும் கூட தர வல்லது அமைதி என்றே ஆடு பூவே! கூத்தாடு பூவே! நீ பாடு பூவே!” அங்கு இருந்த எல்லோருக்கும் பாஸ்கர் ஐயா உட்பட அக அமைதி அழகாக உருவாகிவிட்டது.

## குழந்தைகளை நல்ல முறையில் உருவாக்கிட பெற்றோர்களின் 12 கடமைகள்

1. நல்ல கல்வி, பண்பாடு, பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொடுத்தல்.
2. பெற்றோர்கள் இணைந்து முடிவெடுத்து செயல்படுதல்.
3. நல்லொழுக்கங்களைக் கற்றுக் கொடுத்தல்.
4. தவறு செய்தால் மன்னிப்பு கேட்க கற்றுக்கொடுத்தல்.
5. குழந்தைகளிடம் பொய் போசாதீர்கள்.
6. பெற்றோர்கள் தங்களது கொள்கையில் உறுதியைக் கடைபிடித்தல்.
7. குழந்தைகள் அழுகையின் மூலம் எதையும் பெற அனுமதிக்காதீர்கள்.
8. பெற்றோர்கள் குழந்தைகளிடம் கோபத்தை வெளிப்படுத்தாதீர்கள்.
9. குழந்தைகளின் தவறுகளை மன்னித்து விடுங்கள்.
10. பெற்றோர்கள் தங்களது தவறுக்கும் மன்னிப்பு கோருங்கள்.
11. சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிக்கச் செய்யுங்கள்.
12. கீழ்படிதல் என்பது ஒரு கடமை, என்பதை உணர்த்துங்கள்.


## "கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரங்கள்

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. | 300/- |
| ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்) | ரூ. | 2000/- |
| கலர் (¼) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்) | ரூ. | 1500/- |
| கலர் (½) அரைப் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்) | ரூ. | 3000/- |
| கலர் முழு பக்கம் | ரூ. | 6000/- |
| பின் அட்டை வெளியுறம் | ரூ. | 7000/- |
| மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு) | ரூ. | 500/- |
| கருப்பு வெள்ளை (¼) கால் பக்கம் | ரூ. | 750/- |
| கருப்பு வெள்ளை (½) அரைப் பக்கம் | ரூ. | 1500/- |
| கருப்பு வெள்ளை முழுப் பக்கம் | ரூ. | 3000/- |

### சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

## நங்கநல்லூர் :

சங்க செயற்குழு மகளிரணி உள்ளிட்டு கலந்தாய்வு கூட்டம் தலைவர் இல்லத்தில் 16–3–2024 அன்று தலைவரது வரவேற்புடன் துவங்கியது.

பெருங்களத்தூர் திரு. N. தில்லைநாயகம் பிள்ளை அவர்களது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. சங்க உறுப்பினர் திரு. M. சதீஷ் அவர்களது திடீர் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலையும் அன்னாரது ஆத்மா சாந்தி அடையவும் இந்த பேரிழப்பை தாங்கி கொள்ளும் சக்தியினை இறையாற்றல் குடும்பத்தாருக்கு அளித்திடவும் சங்கம் பிரார்த்தித்து கொள்கிறது. உடல் உறுப்புகளை தானம் செய்து அவர் நம்மிடையே இப்பூவுகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அன்னாரது குடும்பத்தாருக்கு சங்கத்தின் மரியாதை கலந்த வணக்கங்கள், பாராட்டுகள்.

சென்ற மாதத்திய கூட்ட அறிக்கை செயலாளரால் வாசிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. இது நாள் வரையிலான காலத்தின் சங்க நிகழ்வுகளும் செயலாளரால் விவரிக்கப்பட்டது.

சங்க செயற்குழு உறுப்பினர் திரு. K. இளங்கோவன் அவர்கள் பூரண குணமடைய சிறப்பு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசின் கலைத்துறையில் ''சிறந்த பாடலாசிரியர்'' விருது பெற்ற நீரியரசர் V. விமலா மற்றும் வழக்குரைஞர் திரு. S. வேல்முருகன் இவர்களது மகன் திரு. V. விவேக் வேல்முருகன் அவர்களுக்கும் ''நன்கொடையாளர்'' விருது மற்றும் ''சேவை செம்மல்'' விருது பெற்ற சங்க ஆலோசகர் மக்கள் சேவை நாயகன் திரு. T.N. முத்துக்குமரசாமி பிள்ளை அவர்களுக்கும் கல்வித்துறையில் ''தலைதைத்துவ'' விருது பெற்ற தலைமை ஆசிரியை திருமதி. சுசீலா செந்தில் குமார் அவர்களுக்கும் சங்கத்தின் வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுகளை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

28–3–24 அன்று குரோம்பேட்டையில் நடைபெற இருக்கும் ''தியாகி பரலி நெல்லையப்பர்'' நினைவு தினத்திற்கு சங்கத்திலிருந்து பெருமளவில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது.

திரு. V. கிருஷ்ணகுமார் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

க. சரவணன்,

தலைவர்.

## அண்ணாநகர் :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 10–03–2024 அன்று அண்ணா நகரில் உள்ள சங்க ஆலோசகர் முனைவர் கு. விவேகானந்தன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

தலைவர் ஜெ. கோபாலகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்று பேசினார். அண்ணாநகர் அமுதசுரபி அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் திரு. T. தியாகராஜனிடம், கொரட்டூரில் உள்ள பிளாட்டை பத்திர பதிவு செய்து, பத்திரத்தை அடுத்த ஓரிரு மாதங்களில் வாங்க கேட்டுக்கொண்டார். அதே போல அமுதசுரபி அறக்கட்டளை சார்பாக கல்வி ஊக்கத்தொகையும் அடுத்த மாதத்திற்குள் வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

செயலாளர் திரு. N. ஆனந்தகணபதி தனது உரையில் சென்று ஆண்டு CREW அறக்கட்டளை 1677 மாணவ மாணவியர்க்கு கல்வி தொகை வழங்கியதற்கு அவர்களுக்கு அண்ணாநகர் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்தார்.

திரு. T. தியாகராஜன், சங்கத்தின் சார்பில் ஓர் ''மருத்துவ முகாம்'' நடத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

செயற்குழு உறுப்பினர் திரு. S. பாலபிரகாஷ் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

- J. கோபாலகிருஷ்ணன்,

தலைவர்.

9444044169

## புதுச்சேரி :

17–03–2024 அன்று சங்க கூட்டம் தவலகுப்பம், கணபதிநகர் திரு. V. ஆனந்தன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

திரு. V. ஆனந்தன் அவர்கள் தலைமை ஏற்று பேசுகையில் மாதக் கூட்டத்திற்கு நம் சொந்தங்கள் பெரும் திரளாக கலந்து கொள்ள கூட்ட நேரத்தை மாலைக்கு பதில் காலை 11.00 A.M To 12.30 A.M என்று மாற்றி அமைக்கலாம் என்று யோசனை தெரிவித்தார்கள்.

திரு. பாலசுப்ரமணியம் பிள்ளை அவர்கள் பேசுகையில் சந்தாதொகை ஆயுள் சந்தா ரூ.3000/– ஆண்டு சந்தா ரூ. 500/–க்கு பதிலாக மாதம் ரூ.100/– என்று மாற்றி அமைக்கலாம், இதனால் சங்கத்திற்கு நிதி ஆதாரம் அதிகமாகும் என்றும், இதற்கு நம் சொந்தங்கள் நேரில் சென்று வசூல் செய்ய முன் வரவேண்டும் என்றனர், மேலும் வருகிற பாராளுமன்ற தேர்தலில் நம் சமூகத்திற்கு இனக்கமான வேட்பாளர், அல்லது அரசியல் கட்சியை ஆதரிக்க நம் மாநில சங்கம் வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

திரு. G. பத்மநாமன் பிள்ளை அவர்கள் பேசுகையில், நம் சமூக இளைஞர்கள் கூட்டத்திற்கு ஆர்வமுடன் கலந்து கொள்ள முன்வரவேண்டும், சொந்தங்கள் 2023, ஆகஸ்ட் 13 எழுச்சி விழாவிற்கு ஆர்வமுடன் தாமாக முன்வந்து நிதி கொடுத்தது போல் சந்தா தொகை ஆயுட்சந்தா ரூ.3000/– ஆண்டு சந்தா ரூ. 500/– தாமாக முன் வந்து சங்கத்தின் வங்கி கணக்கில் அளிக்கலாம் என்று கூறி அவர்களுடைய சந்தாவை அளித்தார்கள்.

திரு. சிவ. மணிகண்டன் அவர்கள் பேசுகையில் மாதாந்திரக் கூட்டத்தை தொடர்ந்து நடத்த வேண்டும், அதன் அவசியம் பற்றியும் பேசினார்கள்.

திரு. A. கார்த்திகேயன் அவர்கள் பேசுகையில் மாதாந்திரக் கூட்டத்தை "ZOOM MEETING" மூலம் நடத்தலாம் என்றும், 3 மாதத்திற்கு ஒரு முறை பொது இடத்தில் அல்லது விருப்பம் உள்ளவர்கள் சொந்தங்கள் இல்லத்தில் நடத்தலாம் என்று யோசனை தெரிவித்தார்கள்.

திருமதி. கண்ணகி செல்வகுமார் அவர்கள் பேசுகையில், 200 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களும் 30க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் உள்ள நம் சங்க கூட்டத்திற்கு குடும்பத்திற்கு இருவர் அல்லது ஒருவராக வரவேண்டும் என்றார்கள்.

திருமதி. சாரதா, திருமதி. A. சுந்தரவள்ளி , திருமதி. தீபா சிவகுமார் ஆகியோர் அவர்கள் கருத்துகளை பதிவு செய்தார்கள்.

வருகிற 31–03–2024 ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் ஆன்மீக சுற்றுலா சென்று வரலாம் என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

சுவீட், காரம், காபி தந்து இன்முகத்துடன் உபசரித்த திருமதி. A. சுந்தரவள்ளி ஆனந்தன் அவர்களுக்கு கூட்டத்தில் கலந்து கொண்ட சொந்தங்கள் நன்றியும் பாராட்டும் தெரிவித்தார்கள்.

திரு. M. அமுதவிநாயகம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

- J. ராஜன்பாபு,
தலைவர்.
**9600968626**

## கடலூர்

சங்க கூட்டம் 05–03–2024 அன்று தலைவர் தலைமையில் கூடியது. செயலாளர் திரு. B. சிவமணி அனைவரையும் வரவேற்றார்.

மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. அகிலாண்டேஸ்வரி ஆறுமுகம் அவர்களும், திருமதி. ஹேமலதா சிவமணி அவர்களும் துணைச்செயலாளர் திரு. K. சிதம்பரம் அவர்களும் மகளிரை வாழ்த்திப் பேசினார்கள். "ஒவ்வொரு ஆண் மகனின் வெற்றிக்கும் பின்னால் பெண் ஒருவர் உள்ளார்" என்பதை வலியுறுத்திப் பேசினர்.

தலைவர் அவர்கள் பேசும் போது "CREW" அறக்கட்டளை நிறுவனர் வள்ளல் மேன்மைமிகு திரு. S. வெங்கடேசம் பிள்ளை அவர்கள் நீடூழி வாழ்ந்திட வேண்டும் எனவும், நம் கடலூர் சங்கத்திற்கு 2023 – 24 ஆம் ஆண்டில் சுமார் ஒன்பது இலட்சம் ரூபாய்களை நம் சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளின் கல்விக்காக, கல்விஉதவித்தொகை வழங்கியுள்ளதை சுட்டிக்காட்டினார். நம் சங்க உறுப்பினர்களில் 47 பேர் மேற்படி உதவித்தொகையினை இக்கல்வி ஆண்டில் பெற்றுள்ளனர்.

கல்வி உதவித்தொகை பெற்றவர்கள் "CREW" அறக்கட்டளைக்கு, தாங்கள் பணியேற்று வரும் காலங்களில் தாங்கள் பெற்ற உதவித்தொகையினை செலுத்திடக் கேட்டுக்கொண்டார். அவ்வாறு அளித்தால்தான் அறக்கட்டளை வளர்ச்சி பெற்று மேலும் மேலும் அதிக நபர்கட்கு கல்வி உதவித்தொகை வழங்கியடவும் பயனாளியர் எண்ணிக்கை அதிகரிக்கவும் இயலும். அறக்கட்டளை சார்பில் கல்லூரிக்கல்வி, பள்ளிக்கல்வி, துவக்கக்கல்வி

பயில்வோருக்கும் கல்வி உதவித்தொகையினை அளித்து விரிவு படுத்த இயலும். மேலும் பல நலத்திட்ட உதவிகளையும் அளித்திட இயலும். நிறுவனர் அவர்கள் பல்லாண்டு, பல்லாண்டு மகிழ்வுடன் வாழ்ந்திட நம் கடலூர் கார்காத்தார் சங்கம் வாழ்த்துகிறது.

2023 – 24–ஆம் கல்வி ஆண்டிலிருந்து கல்வி உதவித்தொகை பெற்றிட முதன் முதலில் விண்ணப்பம் அளிப்பவர்கள் (Freshers) மட்டும் சங்க நிர்வாகிகளிடம் கையொப்பம் பெற வேண்டும். 2, 3, 4–ம் ஆண்டுகளில் சங்க நிர்வாகிகளின் கையொப்பம் பெறாமலே நேரடியாக CREW அறக்கட்டளைக்கு விண்ணப்பிக்கலாம் என விதிகள் தளர்த்திட்டதால் அதிக மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெற்றுள்ளதை காண முடிகிறது. மேலும் முதுகலைப் பட்டம் பயில போகும் இந்த ஆண்டு நிறைய பேர் உதவித்தொகை பெற்றுள்ளதைக் காண முடிகிறது

1590 பேர் CREW அறக்கட்டளை மூலம் இவ்வாண்டு பயன் பெற்றுள்ளனர். பயனாளிகளில் 9 பேர் இதர நலத்திட்ட உதவிகள் பெற்றவர்கள். இவர்கள் போக 1581 பேர் இளைஞர், இளைஞிகள் ஆவர். இவர்கள் அனைவரும் அந்தந்த பகுதியில் உள்ள சங்கங்களில் இளைஞர் அணியில் சேர்ந்து நம் சமுதாய வளர்ச்சிக்கும், சங்க வளர்ச்சிக்கும் பாடுபட முன் வர வேண்டும். இவர்களின் பெற்றோர்கள் இவர்கட்கு நல்வழி நடத்தி சங்க செயல்பாடுகள் வளர்ச்சி பெற ஊக்குவிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

சங்கத்தின் சார்பில் அனைவருக்கும் தேநீர், சிற்றுண்டி வழங்கப்பட்டது. திரு. T. ஆறுமுகம் அவர்கள் நன்றி கூறியதுடன் மாதாந்திரக் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

- T. விவேகானந்தன்,
தலைவர்.

## குமராட்சி ஒன்றியம் :

பொதுக்குழு கூட்டம் 10–03–2024 அன்று சங்கக் கட்டிடத்தில் தலைவர் A.G. சிவராமன் பிள்ளை தலைமையில் செயலாளர் S. இராமச்சந்திரன் பிள்ளை வரவேற்புரையுடன் நடைபெற்றது. பொருளாளர் R. திலகம் அவர்கள் வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார். முன்னரே அறிவித்தப்படி 2024, 25, 26–ம் ஆண்டிற்கான தேர்தல், தேர்தல் ஆணையாளர் திரு. G. லட்சுமிநாராயணன் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தேர்தலில் போட்டியின்றி தலைவர் திரு. A.G. சிவராமன் பிள்ளை, செயலாளர் திரு. S. இராமச்சந்திரன் பிள்ளை, பொருளாளர் திருமதி. R. திலகம், ஒன்றிய பிரதிநிதி திரு. G. ராஜேந்திரன் பிள்ளை, துணைத்தலைவர்கள் 1) திரு. A. வேணுகோபால் பிள்ளை, 2) திரு. S. சிவக்குமார் பிள்ளை, துணை செயலாளர் திரு. M. செந்தில்வேலாயுதம் பிள்ளை, ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பொறுப்பாளர்கள் பொறுப்பேற்றவுடன், நமது சங்க கட்டிடத்தை வாடகையின்றி நிர்வாக செலவு ரூ. 3000/–+ மின் கட்டணம் மட்டும் நன்கொடையாக பெற்று வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. சுற்றுலா தொடர்பாகவோ, கோயில் தரிசனம் தொடர்பாகவோ, பல்கலைக்கழக பணி நிமித்தமாகவோ சிதம்பரம் வரும் நம் இன சொந்தங்கள் இலவசமாக தங்கிக்கொள்ளலாம் எனவும் முடிவெடுக்கப்பட்டது. பிரதிநிதி திரு. G. இராஜேந்திரன் பிள்ளை நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

- S. இராமச்சந்திரன்,
செயலாளர்.

## இளையபெருமாள் நல்லூர்

15–1–2024 அன்று பொங்கல் தினத்தன்று இளையபெருமாள் நல்லூர் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவிலில் மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் பொருளாளர் திரு. G. ராமநாதன் பிள்ளை உள்ளிட்ட மாநில பொறுப்பாளர்கள் மற்றும் இணைச்சங்க நிர்வாகிகள் முன்னிலையில் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

புதிய பொறுப்பாளர்களாக கோவிந்தராசு குஞ்சிதபாதம் தலைவர், பாலசுப்பிரமணியன் குருநாதன் செயலாளர், மணி சுந்தர் பொருளாளர், பாலசுப்ரமணியன் ராமசாமி துணைத்தலைவர், கோகுல்ராம் ராஜேந்திரன் துணைச்செயலாளர், ராமச்சந்திரன் கந்தசாமி துணைப்பொருளாளர், ரவிச்சந்திரன் தில்லைசபாபதி ஆலோசகர்,

மகளிர் அணிக்காக சம்பூர்ணம் இனியன் தலைவர், சாந்தாவைத்தியலிங்கம் செயலாளர், தமிழ்ச்செல்வி சரவணன் பொருளாளர், விஜயலட்சுமி கோவிந்தராஜன் துணைத்தலைவர், ஹேமலலிதா அரவிந்த் துணைச்செயலாளர், லட்சுமி பாலசுப்ரமணியன் துணைப்பொருளாளர்.

ஆகியோர் உறுப்பினர்களின் பேராதரவோடு ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இளையபெருமாள்நல்லூர் கார்காத்தார் சங்கம் பிரதி மாதம் அமாவாசை அன்றும், மகளிர் அணி பௌர்ணமி அன்றும் மாத கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

பிப்ரவரி–9 வெள்ளிக்கிழமை அன்று

நடைபெற்ற கூட்டத்தில் ஜெயங்கொண்டத்தில் நிகழ உள்ள முப்பெரும் விழாவிற்கு நிதி உதவி செய்யவும், பெரும் திரளாக கலந்து கொள்ளவும், வீட்டுக்கு ஒரு கார்காத்தார் ஒப்புரவு வாங்கவும் விவாதிக்கப்பட்டது.

மார்ச்–3 ஞாயிற்றுக்கிழமை ஜெயங்கொண்டத்தில்நடைபெற்றமுப்பெரும்விழாவில் பெருந்திரளாக வேன்கள், கார்கள், பைக்குகள் மூலமாக ஆண்களும், மகளிர் அணியினரும், மழலைச் செல்வங்களும், வான வேடிக்கை – மேளதாளத்துடன் ஜெயங்கொண்டம் நான்கு ரோட்டில் இருந்து விழா மண்டபம் வரை அணிவகுத்து வந்தது. காண்பவர் வியக்கும் வண்ணம் இருந்தது. விழாவில், வரும் மாதம் முதல், 66 கார்காத்தார் ஒப்புரவு மாத இதழ் இளையபெருமாள் நல்லூருக்கு வருவது உறுதி அளிக்கப்பட்டது. இதனால் 100% ஒப்புரவு வாங்கும் ஊராக இளையபெருமாள் நல்லூர் திகழ்கிறது.

மார்ச்–10 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சங்க கூட்டத்தில் முப்பெரும் விழாவுக்காக பாடுபட்ட அனைவருக்கும், பொறுமையுடன் விழாவினை கண்டு களித்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறப்பட்டது.

கு. கோவிந்தராசு,
தலைவர்

## சீர்காழி :

செயற்குழு கூட்டம் 2–3–2024 அன்று நமது சங்க கட்டிடத்தின் தலைவர் : திரு. K. சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்த அனைவரையும் செயலாளர் : திரு. குண அமுதன் பிள்ளை வரவேற்று பேசினார்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வரும் காலங்களில் மகளிர் அணி பொறுப்பாளர்கள் தலைவர், செயலர், பொருளர் ஆகிய மூன்று பேரும் செயற்குழு உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

தொடர்ந்து மூன்று செயற்குழு கூட்டத்திற்கு வராத செயற்குழு உறுப்பினர்கள் அந்த பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.

தகுதி நீக்கம் செய்யப்பட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கு பதிலாக புதிய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

29–4–2024 அன்று நமது சங்கத்தின் ஆண்டு விழா நடத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

3–03–2024 அன்று ஜெயங்கொண்டம் கார்காத்தார் சங்கத்தின் 50–வது பொன்விழா ஆண்டு பொதுக்கூட்டத்தில் நமது சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

10–03–2024 ஞாயிற்றுக்கிழமை அன்று நமது சங்கத்தில் மகளிர் அணி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் மகளிர் அணி தலைவி திருமதி. விஜயலெட்சுமி பாலசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்று பேசினார்கள்.

கூட்டத்தில் மகளிர் அணியை சேர்ந்த திருமதி. ராஜேஸ்வரி கோவிந்தராஜன் அவர்கள் அனைவரையும் வாழ்த்தி பேசினார். திருமதி. கோமதி அகோரம் அவர்கள் தண்ணீர் போல் எங்கும் நிறைந்திருக்க வேண்டும் என்று பேசினார்கள். ஆசிரியை திருமதி. ரேவதி முரளி அவர்கள் பெண்களின் பெருமைகளை பற்றி சிறப்பாக பேசினார்கள். திருமதி. வித்யா ராஜசேகர் அவர்கள் சேமிப்பு அவசியம் என்பதை பற்றி பேசினார்கள்.

மாநிலத் துணைத்தலைவர் திரு. சிங்காரவேல் பிள்ளை அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். மண்டல செயலாளர் திரு. சிதம்பரநாதன் பிள்ளை அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். இளையமுதுக்கூடம் தலைவர் திரு. நடனம் பிள்ளை அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். விளையாட்டு போட்டிகள் நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியில் மகளிர் அணி செயலாளர். திருமதி. உமா சுகுந்தவனநாதன் அவர்கள் நன்றி கூற மகளிர் தின விழா இனிதே நிறைவு பெற்றது.

– செயலாளர்

## மயிலாடுதுறை

02–03–24 அன்று செயற்குழு கூட்டம் சங்கக் கட்டடத்தில் துணைத்தலைவர் திரு. R. முருகானந்தம் தலைமையில் தொடங்கியது.

மகளிரணியினர் இறைவணக்கம் பாடினர், முன் மாத நிகழ்வினை செயலர் திரு. A. இராசேந்திரன் வழங்கினார். பொருளர் அறிக்கையை திரு. R. சந்திரசேகரன் அளித்தார்.

சங்க வளர்ச்சி தொடர்பான கருத்துகளை திருவாளர்கள் என். சண்முகம் பிள்ளை, இர. பாலசுப்பிரமணியன், ப. சுவாமிநாதன், கோ. முருகையன் ஆகியோர் வழங்கினர்.

முகவரி கையேடு தொடர்பாக பாடுபட்ட கம்பன் அச்சகம் திரு. T. பன்னீர்செல்வம், திரு.

ப. சுவாமிநாதன் ஆகியோருக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. அவர்களும் பொருள் உதவி செய்த சான்றோர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

மாநில சங்கத்திற்கு குடும்ப உறுப்பினர் முகவரியை தரலாமேயன்றி அவர்கள் சார்பில் மாதம் ஒரு ரூபாய் சந்தாவாக மாநில சங்கத்திற்கு அளிப்பதை ஏற்க இயலாது என முடிவானது.

'உலக மகளிர் தின விழா' நடத்தும் மகளிரணியினருக்கு சங்கம் முழு ஒத்துழைப்பு வழங்க முடிவு செய்யப்பட்டது.

இளைஞரணியினரின் நன்றி உரை அடுத்த இரங்கல் தீர்மானத்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– சு. அன்பழகன்,
தலைவர்.

## செம்பொன்னார் கோவில் :

சங்க கூட்டம் 06–03–2024 அன்று நேரு நகரில் வசித்து வரும் சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் பிள்ளை அவர்கள் ஏற்று போற்றி கூட்டத்தை சங்கத் தலைவர் இல்லத்தில் நடத்தினார்கள். இறைவணக்கம் செல்வி. சிவசங்கரி செந்தில் பாடிடவும், வரவேற்புரை M.C. செல்வராஜ் பிள்ளை ஆற்றிடவும் சென்ற மாத கூட்ட அறிக்கை கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும், சங்க வரவு – செலவு அறிக்கையை சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் பிள்ளை வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது. கூட்ட தலைவர் திரு. கி. ராமநாதன் பிள்ளை அவர்கள் தமது உரையில் மயிலாடுதுறையில் நடைபெற்ற மாநில சங்க செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை பற்றி தெளிவாக பேசியதுடன் ஒரு மண்டலத்திற்கு ஒரு மகளிர் அணியும், ஒரு இளைஞரணியும் அமைத்து விட வேண்டும் என்றும் கூறினார்கள். சங்க உறுப்பினர்கள் திரு. ச. மதியழகன் அவர்கள் சிரிப்பொலியுடன் சில கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். திரு. கணபதி. நடனம் பிள்ளை அவர்கள் தமது உரையில் எடுத்துட்டி– பூதனூர் சங்க தலைவரும் பணி நிறைவு பெற்ற ஆசிரியருமான திரு. R.K. பிள்ளை பற்றி அறிமுகபடுத்தி பேசினார்கள். திரு. R.K. பிள்ளை அவர்கள் தமது உரையில் கார்குல சொந்தங்களுக்கு மருத்துவ குறிப்புகளை அச்சடிக்கப்பட்ட பேப்பரில் அனைவருக்கும் வழங்கியும் அதன்படி அன்றாட வாழ்க்கையில் கடைபிடித்து வாழ வேண்டும் என்று மிகவும் தெளிவாக பேசினார்கள்.

திரு. R.K. பிள்ளை அவர்களை மயிலாடுதுறையிலிருந்து வயதான காலத்தில் சங்க மூத்த உறுப்பினர் திரு. சா.தி. ராமலிங்கம் பிள்ளை அவர்கள் அழைத்து வந்து சங்க உறுப்பினர்கள், மகளிர் சகோதரிகளுக்கும் நல்ல அறிவுரைகள் வழங்கியதற்கு அவரையும் பாராட்டி சங்க செயலாளர் திரு. ச. நெடுஞ்செழியன் பேசினார்கள். மேலும் முன்னாள் மண்டல செயலாளர் திரு. கோ. வடிவேலு பிள்ளை அவர்கள் தமது உரையில் 03–03–24 அன்று ஜெயங்கொண்டம் பகுதியில் நடைபெற்ற மூன்று இனிய விழா (மங்கல சந்திப்பு விழா, ஜெயங்கொண்டம் பகுதி சங்கங்களின் பொன்விழா, கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாக்களை மாநில சங்க பொருளாளர் திரு. ராமநாதன் பிள்ளை மற்றும் அந்த பகுதி சங்க பொறுப்பாளர்களோடு இணைந்து ஏற்பாடு செய்து மிக சிறப்பாக நடத்தியது பற்றியும் அங்கு அந்த பகுதி மகளிர் சகோதரிகள் கூட்டம் கூட்டமாக மேளதாளங்கள் முழங்கிட கூட்டத்திற்கு வருகை தந்து கூட்டத்தில் பங்காற்றியது பற்றி பேசினார்கள். கணபதி நடனம் பிள்ளை அவர்கள் சங்க பொன்விழா நிகழ்வு மேடையில் மாநில சங்கம் தோன்றியது பற்றியும் கடந்த கால வரலாறு சங்கங்கள் எப்படி இந்த பகுதியில் தோன்றியது பற்றியும், இளையபெருமாநல்லூரில் சங்க தலைவர் பற்றி தனக்கே உரிய பாணியில் ஜெயங்கொண்டம் பகுதியில் தனது பங்கு பற்றி தெளிவாக பேசியது பற்றி பேசினார்கள். கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு சால்வை அணிவிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்டோர்க்கான பரிசு ஆண்களுக்கு நேரு நகர் சூரவச்சந்திரன் அவர்களுக்கும் பெண்களுக்கு குமரன் வடக்கு வீதி திருமதி. லலிதா வடிவேலுக்கும் வழங்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பாக மாலை தேநீரும், இரவு சிற்றுண்டியும் வழங்கப்பட்டது. திரு. சு. ரவிச்சந்திரன் பணிநிறைவு B.D.O. அவர்கள் நன்றி கூறிட கூட்டம் இரவு 9.00 மணியளவில் நிறைவு பெற்றது.

S. நெடுஞ்செழியன்,
செயலாளர்.

## பரசலூர் :

03–03–2024 அன்று நக்கீரர் தெரு. சிவகோவிந்தராசன் இல்லத்தில் தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை தலைமையில் R. பிரவின் இறைவணக்கம் பாட, கோ. சித்ரா வரவேற்புரை நிகழ்த்த கூட்டம் துவங்கியது.

சென்ற மாத அறிக்கையை செயலர் திரு. வீ. கண்ணன் பிள்ளையும், வரவு செலவு அறிக்கையை

பொருளர் திரு. S.M. விஜய் பிள்ளையும், மு.அ. நிதிய அறிக்கையை தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளையும் வாசிக்க வரவு – செலவு சம்மந்தமான பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க வளர்ச்சிக்கு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை கூறினார்கள்.

பரசலூர் பாலாம்பிகை உடனுறை ஸ்ரீ வீரட்டேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி 4 கால பூஜையிலும் பரசலூர் கார்காத்தார் குடும்பத்தினர் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது.

சிறப்புக் குலுக்கலில் ஆண்களுக்கான பரிசு A. மணிப்பிள்ளைக்கும் பெண்களுக்கான பரிசு K. ராஜேஸ்வரிக்கும் முறையே நெடுஞ்செழியன், சித்ரா வழங்கினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு சங்கத்தின் சார்பில் சால்வை அணியப்பட்டது.

ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் A. மணிப்பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன்,
செயலர்.
செல் : 9894960438

## மணிக்கிராமம்

சங்க கூட்டம் 21–02–24 அன்று ஸ்ரீ திருமேனி அழகர் சிவன் கோவிலில் பிரதோஷ வழிபாட்டுக்கு பிறகு தலைவர் திரு. M. சிங்காரவேலன் தலைமையில் நடைபெற்றது. தமிழ்தாய் வாழ்த்து பாட கூட்டம் துவங்கியது.

தலைவர் சிவபுராணம் வாசிக்கவும் செயலாளர் திரு. G. அன்பழகன் சென்ற மாத அறிக்கை வாசிக்கவும் பொருளர் திரு. T. கபிலன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது.

மாட்டுபொங்கல் அன்று கார்குல சொந்தங்கள் அனைவரும் ஒன்றாக கூடி விளையாடினார்கள். கயிறு இழுத்தல், லக்கி கார்னர், கோலப்போட்டி, குழந்தைகளுக்கான போட்டியும் நடைபெற்றது. போட்டியில் அமர்வாசகன் சிலம்பு சுற்றி விளையாட்டும், நேத்ரா என்ற பெண் யோகாவும் செய்து சிறப்பித்தார்கள். அவர்களுக்கு பாராட்டும் பரிசும் வழங்கப்பட்டது.

காலை 9.30 மணி முதல் மதியம் 2 மணி வரை விழா நடைபெற்றது. திரு. மோகனும் திரு. ஞானசுந்தர் அவர்களும் மதிய விருந்துக்கான செலவை ஏற்றுக்கொண்டனர். பரிசுப் பொருள்கள் அனைத்தும் திரு. A. மணிவாசகன் திரு. S. ஹரிஹரன், திரு. S. சரவணன் ஆகியோர் ஏற்றுக் கொண்டனர். இறுதியாக திரு. பிரபாகரன் நன்றி கூற நாட்டுபண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

கோ. அன்பழகன்,
செயலர்.

## மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு : சங்க கூட்டம் 10–03–2024 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது. தலைவர் திரு. ந. இலட்சுமணன் அவர்கள் சங்க உறுப்பினர்களை வரவேற்று பேசினார்.

மேலப்பெரும்பள்ளம், வெள்ளாழத் தெருவில் வசித்து வந்த திரு. G. கணபதி பிள்ளை அவர்கள் 22–2–24 அன்று மறைவிற்கு அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

“CREW TRUST” சென்னை மூலம் கல்வி உதவித்தொகை பெற்றவர் குடும்பங்களில் ஒருவரான திருமதி. முல்லை இரத்தின சபாபதி அவர்கள் தனிப்பட்ட முறையில் CREW அறக்கட்டளைக்கு நன்றி தெரிவித்து கொண்டு சங்க உறுப்பினர்களுக்கு இனிப்பு காரம் தந்து சிறப்பித்தார். சங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டதோடு கூட்டம் இனிதே நிறைவேறியது.

- B. இலட்சுமணன், தலைவர்.
9443783743

## விசலூர் :

சங்க கூட்டம் 24–03–2024 அன்று அகத்தீசுவரர் சிவன் திருக்கோயில் வளாகத்தில் தலைவர் பொன் சொக்கலிங்கம் செயலர் L. ராமசெல்வம் முன்னிலையில் இறைவணக்கத்துடன் தொடங்கி செயலர் அறிக்கை வாசிக்க பொருளாளர் வரவு –செலவு S. கந்தசாமி பிள்ளை சொல்ல கூட்டம் அக்கருத்தை ஏற்றுக்கொண்டது.

சிவ ஆலயத்தில் மஹாசிவராத்திரி அன்று இரவு நடைபெற்ற 4 காலம் அபிஷேகம், அன்னதானம், பூ, அபிஷேக பொருட்கள் அனைத்து செலவுக்கும் பொருளாதார உதவி செய்து சிவ அருள் பெற்ற விசலூர் கிராமவாசிகள் அனைவரும் ஒன்று சேர பங்களிப்பு அளித்தனர். ஆலய அர்ச்சகர் மடப்புரம் செந்தில்குமார் பிள்ளை அனைவருக்கும் அருட்பிரசாதம் வழங்கினார்கள். எதிர் வரும் சனிபிரதோஷம், தமிழ் வருடபிறப்பு, சித்ரா பௌர்ணமி நிகழ்வுகள் திருக்கோயில் எப்படி செய்வது என்றும் சிவராத்திரி உபயதாரர் காலஞ்சென்ற விசலூர் விஷ்வநாதன் பிள்ளை தியாகராஜன் பிள்ளை மகன்கள் குடும்பத்தாருக்கும் சிவ அருள் கிடைக்க பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும் திருக்கோவில் கும்பாபிஷேகம் செய்வது சங்கம் சிறப்பாக செயல்பட சந்தாதொகை கொடுப்பது மாநில உறுப்பினர் சந்தா 1 ரூபாய் செலுத்த முடிவு செய்து நன்றிகள் நவில கூட்டம் இனிதே சுபம் ஆனது.

– செயலர், ராமசெல்வம்.

9750806991, 9960255240

## 80. இராதா நல்லூர் :

சங்க கூட்டம் 17–03–2024 அன்று தலைவர் தி. முத்துக்குமரசாமி அவர்கள் இல்லத்தில் தலைவர் தலைமையில் சங்க பொருளாளர் மு. சீனிவாசன் அவர்கள் வரவேற்க கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. திருக்கடையூர் ஸ்ரீ அபிராமி சமேத ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் 12–3–2024 அன்று நமது சங்க செயலர் திரு. அ. இராஜாமுத்தையா – கலா தம்பதியரின் மணிவிழா சிறப்பாக நடைபெற்றது. சங்க தலைவர் ஆசி வழங்கவும், உறுப்பினர்கள் வாழ்த்து பெற்றனர்.

சீர்காழி மண்டல அளவில் இளைஞர் அணிக்கு ராதா நல்லூர் கார்காத்தார் சங்க சார்பில் அ. ரெத்தினவேல் சுப்ரமணியன் அவர்களை தேர்ந்தெடுத்து மாநில மையத்திற்கு பரிந்துரை செய்திட்ட மாநில துணைத்தலைவர் மற்றும் மண்டல செயலாளர் அவர்களுக்கு சங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. குரோதி ஆண்டு பஞ்சாங்கம் விலைக்கு வாங்கிய இராதாநல்லூர் ராசுப்பிள்ளை குடும்பவாரிசு நமது சங்க செயலர் அ. இராஜா முத்தையா அவர்கள் உறுப்பினர்களுக்கு வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. இம்மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. 11–3–2024 அன்று இரவு 1.00 மணிக்கு நமது சங்க துணைத்தலைவர் கோ. ராஜநாயகம் அவர்களின் மனைவி ராணி (எ) அபிராமி அவர்கள் இயற்கை எய்தமைக்கு சங்கம் ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கிறது. சங்க செயலர் அ. இராஜா முத்தையா அவர்கள் தனது மணிவிழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே முடிவுற்றது.

தி. முத்துக்குமரசாமி,

தலைவர்.

9443645646

## மேலையூர்

மேலையூர் சங்கக் கூட்டம் 03–03–24 அன்று செயலருடைய இல்லத்தில் மழலை நரேனின் இறைவணக்கத்துடன் துவங்கியது. செயலர் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

உறுப்பினர் வருகையை அதிகரிக்க வேண்டுமென்றும், உறுப்பினர் கட்டணத்தை விரைவில் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மே மாதம் ஆன்மீகச் சுற்றுலா செல்லலாம் என்று உறுப்பினர்கள் ஆலோசனை தெரிவித்தனர். உறுப்பினர் விஜயராகவன் சுற்றுலா செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. தேனீர் வழங்கிய விஜயராகவனுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

மேலப்பெரும்பள்ளத்தைச் சேர்ந்த R. இராதாகிருஷ்ணனுடைய மனைவி இந்திரா, மேலையூரைச் சேர்ந்த S. அகோரத்தினுடைய தாயார் பேபி (எ) சுந்தரி மேலையூர் கீழத்தெருவைச் சேர்ந்த சீனிவாசன் ஆகியோரின் மறைவிற்கு 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இறுதியில் பொருளரின் நன்றியுரைக்குப் பின் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– M. பரணீதரன், செயலர்.

9443574217

## திருவாரூர் :

சங்க கூட்டம் 8–3–2024 அன்று பனங்காடி ரெத்தினசாமி பிள்ளை / பொருளாளர் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. துணைத்தலைவர் திரு.

கண்ணபிரான் அவர்கள் தலைமை ஏற்றும் திரு. SCS. சேகர் முன்னின்றும் நடத்தி வைத்தார்கள். கடவுள் வணக்கமாக கலந்து கொண்ட அனைவரும் கூட்டு வழிபாடு பன்னிரு திருமுறை பஞ்சபுராணம் ஓதப்பட்டது. தலைவர் உரையில் கண்ணபிரான் அவர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களை வரவேற்றும் இன்னும் திரளாக உறுப்பினர்கள் கலந்து கொள்ள கேட்டுக்கொண்டார்கள். செயலாளர் சோமசுந்தரம் அவர்கள் சென்ற கூட்ட அறிக்கையை வாசித்தார்கள். மற்றும் கலந்து கொண்ட மகளிர் அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துகள் தெரிவித்து கொண்டார்கள். பொருளாளர் ரெத்தினசாமி பிள்ளை சங்க நிதி நிலைமை மிகவும் மோசமாக உள்ளதால் உறுப்பினர்கள் ஆண்டு சந்தா, நன்கொடை அளிக்க கேட்டுக் கொண்டார்கள். பின்னர் அனைவருக்கும் சிற்றுண்டி, தேநீர் பிஸ்கட் வழங்கப்பட்டது.

கடைசியாக நன்றி உரையில் திரு. பொன்னுசாமி அவர்கள் மகளிருக்கு மகளிர் தின வாழ்த்து சொல்லி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். தேநீர், சிற்றுண்டி, பிஸ்கட் வழங்கிய பொருளாளருக்கு நன்றி தெரிவித்து கொண்டு கூட்டத்தை முடித்து வைத்தார். கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்த கூட்டம் ஏப்ரல் இரண்டாம் ஞாயிறு திருவாரூர் ராஜன் கட்டளையில் நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டது.

21–3–24 தேர்திருவிழாவில் அனைவரும் கலந்து கொண்டு தேர்வடம் பிடித்து ஆரூர் தியாகேசன் அருள் பெற்று கொள்ள கேட்டு கொள்ளப்படுகிறது.

நமது சங்கத்தின் பரிந்துரையின்படி கல்வி நிதி வழங்கிய CREW அறக்கட்டளை திரு. வெங்கடேசன் பிள்ளைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

– அ. சோமசுந்தரம்.

## கும்பகோணம் :

17–08–24 அன்று சங்க மாதாந்திர கூட்டம் தாராசுரம், காமராஜ் நகர், திரு. S. குணசீலன் அவர்கள் இல்லத்தில் து.தலைவர் திரு. M. பாலகுரு அவர்கள் தலைமையில் து.தலைவர் திரு. G. ராஜாராமன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. திரு. G. ராஜாராமன் அவர்கள் இறைவணக்கம் பாடினார்கள். பொருளாளர் திரு. A.S. பழனி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். செயலாளர் மற்றும் பொருளாளர் அறிக்கைகளை திரு. A.S. பழனி அவர்கள் வாசித்தார்கள். 17–04–24 ஞாயிற்றுக்கிழமை மங்கல சந்திப்பு நடத்துவது பற்றி கலந்து ஆலோசிக்கப்பட்டது. மங்கல சந்திப்பு வரன்கள் சம்பந்தப்பட்ட விவரங்களை 31–03–24 ஞாயிற்றுக்கிழமை காலை புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில் அருகில் உள்ள கத்திரிநத்தம் சிவன் கோயில் சென்று பிரார்த்தனை செய்து வரலாம் என முடிவு எடுக்கப்பட்டது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் பிஸ்கட் மற்றும் காபி வழங்கப்பட்டது. வந்திருந்த அனைவருக்கும் நன்றியுரை திரு. S. குணசீலன் அவர்கள் நவில கூட்டம் இனிதே முடிந்தது.

- S. விஜயகுமார்,
செயலாளர்.

## மதுரை

செயற்குழு கூட்டம் 10–03–24 அன்று நடைபெற்றது. செயற்குழு உறுப்பினர் திரு. ராஜேந்திரன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார். தலைவர் Dr. K. சிவசுப்பிரமணியம் தமது உரையில் அன்று காலை அழகப்பன் நகர், செயலாளர் C.M. சொக்கலிங்கம், மாநிலத் துணைத்தலைவர் S. உமையொருபாகம், துணைச்செயலாளர் C. கார்த்திகேயன், செயற்குழு உறுப்பினர் K.N. அழகப்பன் இவர்களுடன் சென்று சங்க உறுப்பினர்களிடம் பவள விழா சுற்றறிக்கை வழங்கி அழைத்தது பற்றியும், வரும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளில் மதுரையின் ஒவ்வொரு பகுதியாக சென்று சங்க உறுப்பினர்களை சந்திப்பது பற்றியும் பேசினார். கூட்டத்திற்கு வந்திருந்த செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் விழா சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொண்டார்.

வரும் ஏப்ரல் முதல் சங்க உறுப்பினர்களிடம் ஒரு ஆண்டு சந்தா Rs. 200/-ம், மூன்று ஆண்டு சந்தா Rs. 600/-ம், ஆயுள் சந்தா Rs. 1500/- வசூலிக்க ஒப்புதல் பெறப்பட்டது.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள பவள விழாவில் இச்சங்கத்தின் மதிப்புறு ஆலோசகர் திரு. இரா. கணேசன் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கவும் ஒப்புதல் பெறப்பட்டது.

செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- C.M. சொக்கலிங்கம்,
செயலாளர்.

## திருநெல்வேலி :

17–3–24 அன்று கார்காத்தார் சங்க கட்டிடத்தில் கார்குல கர்ணன் வெங்கடேசம் பிள்ளை அரங்கத்தில் தலைவர் திரு. சண்முக சுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. திரு. முருக இளங்கோ இறைவணக்கம் பாட செயலர் திரு. இராம சுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்றும் பொருளாளர் திரு. ஞானசம்மந்தம் வரவு – செலவு 15–03–2024 முடிய அறிக்கை தாக்கல் செய்தார்.

2023 – 2024 ஆண்டில் திருநெல்வேலி தென்காசி மாவட்டத்தில் 125 மாணவ மாணவிகளுக்கு சுமார் 26 லட்சம் கல்வி உதவிதொகையும் 9 நபர்களுக்கு தையல் இயந்திரம் வழங்கிய குரு டிரஸ்ட் நிர்வாகிக்கும் கௌரவ ஆலோசகர் T.N. முத்துகுமாரசாமி பிள்ளை அவர்களுக்கும் நன்றி தெரிவித்தும்,

திருநெல்வேலி கார்காத்தார் சங்கம் மூலம் மங்கல சந்திப்பு நடத்தவும்,

வெள்ளநிவாரணநிதிவழங்கியஅனைவரையும், நிவாரண பொருள்கள் வழங்கிய பிரபல மருத்துவர் மற்றும் திரு. சீனிவாசன் பிள்ளை அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்தும்,

வெள்ள நிவாரண நிதி 200 நபர்களுக்கு ரூ. 1500 வீதம் வழங்கிய சென்னை கார்காத்தார் சங்க தலைவர் செயலர் மற்றும் நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தும்,

சங்க கட்டிடத்தில் திருவாசகம் நடத்தவும்,

சேவை செம்மல் விருது பெற்ற திருநெல்வேலி திரு. T.N. முத்துகுமாரசாமி பிள்ளையை திருநெல்வேலி கார்காத்தார் சங்க கௌரவ தலைவர் பாராட்டி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

திருமதி. பவானி W/o திரு. சக்திவேல் பிள்ளை – சங்கரன் கோவில், திரு. செ. நமசிவாயம் S/o திருசெல்லப்பெருமாள் பிள்ளை – வீரசிகாமணி, திரு. சண்முகசுந்தரம் S/o திருநெல்லையப்பன் – பெருமாள்புரம், திரு. M.K. சங்கரநாராயணன் S/o திரு. கனகசபாபதி பிள்ளை – டவுண், திரு. சங்கரசுப்பிரமணியன் S/o திரு. நெல்லையப்ப பிள்ளை – டவுண், திருமதி. விசாலாட்சி W/o திரு. பாலசுப்பிரமணிய பிள்ளை – டவுண், திரு. அம்பலவாணன் S/o MC ராமலிங்க பிள்ளை மகன் – டவுண், திருமதி. சுப்புலட்சுமி W/o திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை – அம்பை ஆகியோரின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

கனகசபாபதி என்ற பழனி நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

## மகளிர் தினம்.

மனித நேயம் திரு T.N. முத்துகுமரசாமி பிள்ளை அவர்களின் ஆலோசனையின்படி 10–03–2024 அன்று காலை 10 மணிக்கு அம்பை பத்மாவதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. மகளிர்க்கு காலை 9 மணிக்கு விளையாட்டு போட்டியில் கலந்துகொண்ட வெற்றிப்பெற்ற 9 நபர்களுக்கு சிறப்பு பேச்சாளர்கள் மூலம் பரிசுகள் வழங்கப்பட்டது.

சிறப்பு பேச்சாளர்கள்

வள்ளியம்மாள் W/o டாக்டர் திரு. திருமலை கொழுந்து பிள்ளை பிரபல எழுத்தாளர் தெளிவாக மகளிர் தினம் பற்றி பேசியும் வருடா வருடம் நடத்த கேட்டுக்கொண்டார்கள். சுதா செல்வராஜ் W/o திரு. செல்வராஜ் டவுண் மகளிர் தினம் வந்த விதத்தை பற்றி தெளிவாக பேசினார்கள் (சங்கர பாலிடெக்னிக் விரிஉரையாளர்). செல்வி கோகிலா D/o திரு. சோமசுந்தரம் பிள்ளை கீழப்பாவூர் (மகளிர் தன்னம்பிக்கையுடன் முழுமுயற்சியுடன் நன்றாக படித்தால் எதையும் சாதிக்கலாம் என்று அழகாக பேசினார்கள். இளம் வயதில் டெஸ்ட் எழுதி நீதிபதிக்கு தேர்வு ஆனவர்) P. சுப்புலட்சுமி W/o திரு. பாக்கியராஜ் இந்து ஆரம்ப பாடசாலையில் தலைமை ஆசிரியர் கவிதை முறையில் பாட்டு பாடி அருமையாக பேசினார்கள். நெல்லை உலகு D/o ஸ்ரீகாந்த் அவர்களால் அடுப்பு இல்லாமல் சமையல் குறிப்பு பற்றி செயல்முறை விளக்கம் செய்து காட்டப்பட்டது.

திருஞானசம்பந்தம் பிள்ளை வரவேற்புரை ஆற்றி செயலர் இராமசுப்பிரமணியன் சிறப்பு பேச்சாளர்களை பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. மதிய உணவு வழங்கப்பட்டது. கூட்ட ஏற்பாடு தலைவர் செயலர், பொருளாளர், கூடலரசு, கோமதி நாயகம், கணக சபாபதி, முருக இளங்கோ கணபதியா பிள்ளை மற்றும் மகளிர் அணி தலைவர் செயலர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

மாலா (எ) மாரியம்மன் நன்றி கூறி கூட்டம் முடிவுற்றது.




**SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM**

**SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION**

## WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

## CUT DOWN YOUR ELECTRICITY COST

**MARUTHI POWER CONTROL SYSTEM**


**CALL US @ 9841828077**

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com


S.SELVAKUMAR - C.E.O

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி!



தோற்றம்:
**08.06.1947**

மறைவு:
**06.03.2023**

## தெய்வத்திரு. G. பாலு பிள்ளை அவர்கள்

(தலைமையாசிரியர் - பணிநிறைவு, வரவுகுடி, வைத்தீஸ்வரன்கோயில்)

தாங்கள் இந்த மண்ணுலகில் இருந்து மறைந்து
விண்ணுலகில் வாழ்ந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்கள்
இதயங்களில் இருந்து மறைவதில்லை.

என்றும் உங்கள் நினைவில் வாழும்...

**மனைவி B.கஸ்தூரி**

*மற்றும்*

**மகள்கள், மருமகன்கள்,**
**பெயரன்கள், பெயர்த்திகள்.**

# வழிகாட்டும் சுடர்விளக்காய் வாழ்கின்றார் தில்லை அம்மா!



தோற்றம்
25.08.1957

மறைவு
28.04.2014

## KP. தில்லைச்செல்வி

KP. ஸ்டோர்

## பத்தாம் ஆண்டு நினைவேந்தல்

அருகிருக்கும் பொருளெல்லாம்
அம்மா உன் பேர் சொல்லும்
தெரிவதெலாம் உன்னுருவே
தில்லையம்மா பொன்னுருவே

சரியாத மனம் தந்தாய்
சரியான வாழ்வு தந்தாய்
பிரிந்தாலும் வாழ்கின்றாய்
பேசுகின்றோம் உன் நினைவை!

KP. விஜய்
KPV. மீனாஸ்ரீ

KPV. கவுதம்
KPV. அஜய்

S. கலியபெருமாள்
KP. ஸ்டோர்.
6A, பெரியகடைவீதி,
மயிலாடுதுறை.
செல் : 9443651746

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
15-05-1938

மறைவு :
28-04-2023

தெய்வத்திரு **M.S. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி டவுண்

*அமைதியின் உருவமாகவும்*
*பண்பின் இருப்பிடமாகவும்*
*பாசத்தின் உறைவிடமாகவும் இருந்து*
*தாங்கள் இந்த மண்ணுலகில் இருந்து மறைந்தாலும்*
*உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் இதயங்களில் இருந்து*
*மறைவதில்லை*

என்றும் உங்கள் நினைவில் வாழும்

**மகன்கள்**

திரு. **S. சோமசுந்தரம்,** திருச்சி
திரு. **M.S. லெட்சுமணன்,** திருச்சி
திரு. **S. பாலமுருகன்,** திருநெல்வேலி டவுண்
திரு. **S. சரவணன்,** மதுரை

**மருமகள்கள்**

திருமதி. **S. வடிவாம்பாள்**
திருமதி. **L. பிரசன்ன தேவி**
திருமதி. **B. கோமதி**
திருமதி. **S. ஸ்ரீசக்தி**

மற்றும்

**பெயரன்கள், பெயர்த்திகள், கொள்ளு பெயரன், பெயர்த்திகள்.**

# 2ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
17–4–1985

மறைவு
7–4–2003

## G. குமாரவேல் 1st B.D.S

(அண்ணாமலை நகர்)

திட்டக்குடி – 606 106.

தம்பி

உன் நினைவில் வாழ்கிறோம்.

உன்னை மீண்டும் பார்க்கும் நாள் வருமா.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி







மண்ணில் தோற்றம் :
29–5–1948

விண்ணில் மறைவு :
5–5–2021

## திருமதி. தங்கம் (எ) ஜெ. தங்கமணி

P.A. (ஓய்வு) தமிழ்நாடு காவல்துறை

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், விளத்தூர் கிராமம்,

தெய்வத்திருவாளர்கள். திருவேங்கடப் பிள்ளை – அலமேலு அம்மாள் அவர்களின்

மூத்த மருமகளும், எனது மனைவியுமாகிய,

திருமதி. **தங்கம் (எ) ஜெ. தங்கமணி** அவர்களின்

மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி நாள் : 5–5–2024.

என்றும் எங்கள் மனதில் தங்கள் நினைவுகளுடன் வாழும்

கணவர் : **தி. பிரபாகரன்**
செயலர் (ஓய்வு) சிதம்பரம் கூட்டுறவு நிலவள வங்கி
செல் : 9487138643

மகள்கள் :
**லெட்சுமி பிரபா** – சிதம்பரம்.
**சூரியபிரபா** – சென்னை.

மருமகன்கள் :
**அன்பழகன்** – சிதம்பரம்.
**பாலமுருகன்** – சென்னை.

பேத்திகள் :
A. **தீபிகாராணி** – சிதம்பரம்.
A. **முகில்ராணி** – சிதம்பரம்.
B. **ஷராலி** – சென்னை.
B. **மிருணாளினி** – சென்னை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
16.04.1946

மறைவு
02.04.2023

மயிலாடுதுறை – பெசன்ட் நகர், ரோஜாத்தெருவில் வசித்துவரும்
**S.கலியபெருமாள்** அவர்களின் துணைவியார்

## திருமதி. K.லலிதா அவர்கள்

நினைவஞ்சலி

**என்றும் நீங்கா நினைவில் வாழும் :**

S.K.**பாரதி** (மகன்)
P.**வைஷ்ணவி** (மருமகள்)
பேரன்கள் :
B.**பார்கவ்**, B.**பிரணவ்**
சென்னை.

"நல்லாசிரியர்"
S.**கலியபெருமாள்** (கணவர்)
தலைமையாசிரியர் (ப நி)
19, பெசன்ட் நகர், ரோஜா தெரு,
மயிலாடுதுறை.

திரு, S.S.**விஸ்வநாதன்-ஜெயலெட்சுமி,** சோழம்பேட்டை.
மற்றும் உறவினர்களும்–நண்பர்களும்

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th April2024




**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**